இலவச வெளியீடு: யேர்மனி - இங்கிலாந்து தை.Jan. 2014

Free Circulation

# வெற்றிமணி

Vettimaniy

மணி 64 பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A. ஓசை 208

Orientalische Textilien & Schmuck

தைப்பொங்கலை முன்னிட்டு

அதிரடி மலிவு விற்பனை!

பட்டுச்சேலைகள் பஞ்சாபிகள் இன்னு பல..

மேலதிக விபரம் 10ம் பக்கம்

தரமான தங்க நகைகளுக்கு

உத்தரவாதமிக்க நகைமாளிகை



Königswall 16 (Am HBF) 44137 Dortmund

Tel: 0231/162377 Fax: 49.0231/147836

# ஜெனீவாவில் அமெரிக்கா சமர்ப்பிக்கவுள்ள பிரேரணையும், இந்தியத் தேர்தலும்

-அ.நிக்ஸன்

## அகதிகளை விரட்டுகிறது பிரித்தானியா!

## லண்டன் தேம்ஸ் நதியில் ஓர் விமான நிலையம்!








## அட! இனி விமானத்திலும் இருந்தபாடில்லை!

T.T.S.Brothers GmbH&Co.KG

RHEINISCHE STR 52
44137 DORTMUND Tel:0231 819288 விபரம் பக்கம் 11

புதியதோர் தொழில் நுட்பம்!
புதியதோர் வாய்ப்பு!!

கனீன் எலக்ரோனிக்ஸ்

Schevenhofer Weg 24,- 42111 Wuppertal

Tel: 0205 3423 740 விபரம் பக்கம் 21

Gopara Gnanam

தைப்பொங்கலை முன்னிட்டு

மாபெரும் மலிவு விற்பனை!

Tel: 0231/5450028- Mob: 01713306542

Rheinische Str.81-- 44137 Dortmund

மேலதிக விபரம் 8ம் பக்கம்

உலகத் தமிழர்களின்
உள்ளங்களிலும், இல்லங்களிலும்

ஐங்கரன்

தொலைபேசி இல. 0044 208 543 43 22

Ayngaran foods

30 High Street Colliers Wood,
Colliers Wood
London, SW19 2JE- U.K

ayngaran.com

மொத்த வியாபார நிலையம்!

StaR - Impex

Kipper str.Tor.3- 44147 Dortmund
Tel.: 0231/8602696



S.K.Silks & Gold Paraadise

தைப்பொங்கலை முன்னிட்டு

டோட்முண்ட் நகரில்

மாபெரும் அதிரடி மலிவு விற்பனை!

மாபெரும் ராஜமுத்திரை

பஞ்சாபிகள் சேலைகள் 50% கழிவு விலையில்
இன்றுமுதல் 14.01.2014 வரை

என்றும் புதியது அழகின் இரகசியம் அது.



11th ANNIVERSARY

Mr.P.Sritharan, Proprietor

Adler str 33 - 44137 Dortmund Tel:0231 9501 647

Jewellers & Silk House

London's Largest Selections

எப்பொழுதும் நியாயமான விலை
புத்தம் புது டிசைன்கள்

Rathy ரதி



28 Ealing Rd
Wembley
HA0 4TL London
Tel: 02089033063

209 upper tooting Road
tooting sw19 7gt
0208682 2233

மக்களின் மனங்கவர்ந்த ஸ்தாபனம்




Tel.: 0201/236925
Fax: 0201/236928

இலங்கை, இந்திய உப உணவுப் பொருட்கள், மற்றும் கடல் உணவு வகைகள் அனைத்தும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

மங்கல வைபவகங்களுக்கு ஏற்ற மணவறைகள் மற்றும் சிறந்த வீடியோ படப்பிடிப்புக்கும் நாடுங்கள்...

Ria MONEY TRANSFER இதோ!!! துரித பண மாற்றுச் சேவை!

APIRAAMI ENTERPRISE
Pferdemarkt 9
45127 ESSEN

மக்களின் மனம் கவர்ந்த ஸ்தாபனம்

T.R.S Traders



மக்களின் மனங்கவர்ந்த ஸ்தாபனம்

இலங்கை, இந்திய உபஉணவுப் பொருட்கள், மற்றும் கடல் உணவு வகைகள் அனைத்தும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

T.R.S Traders
Königswall-16 (Am Hbf)
44137 Dortmund
உரிமையாளர்: P. இராஜேந்திரவரதன்
Tel.: 0231/160 494
Fax: 0231/165 6524


# மாதிரிகைகளை விரும்பாத காரிகை!



மூன்று கோடுகள் சேர்ந்தால் முக்கோணமாக லாம், நாலுகோடுகள் சேர்தால் சதுரமாகலாம், ஒரு நேர்கோடு வளைந்து தன் ஆதியையும் அந்தத்தையும் தொட்டால் வட்டமாகலாம். ஒரு கோட்டின் சாதாரண அசைவினால் அதன் கோலங்கள் மாறுகின்றன. மனிதனும் அப்படியே! அவன் தன் உணர்வின் அடிப்படையில், ஆசையின் பாதையில், பல அசைவுகளை மேற்கொள்கின்றான். அவன் அசைவைப் பொறுத்தே மனிதன் என்னும் கோட்டின், கோட்பாட்டின் கோலங்களும் மாறுபடுகின்றன. 1981 ஆண்டு வரை மனிதன் என்று என்னுள் எண்ணிக் கொண்டிருந்த எனக்கு 1981 இல்ல ஏற்பட்ட பெரும் அசைவு அகதி என்னும் பெயரைப் பெற்றுத் தந்தவிட்டது. பெயருக்கும் சூழலுக்கம் ஏற்ப எங்கள் வாழ்கை முறையும் மாற்றம் கண்டது. தாயகத்தில் என் கோடுகளுக்கு நான் கொண்டிருந்த அர்த்தங்கள் கூட யேர்மனியில் பெருமளவு மாறுபட்டன. நாகரீக உலகில் புதிய புதிய தொழில் நுட்பத்திறனில் இலகுவாக ஒரு படைப்பை பல பிரதிகள் எடுக்கலாம் அது பயன் மிக்கதாகவும், பெறுமதியுடையதாகவும் இருக்கும் என்பது என் மனக்கோடாக இருந்தது. அது எந்த அளவிற்கு ஒரு கலைக்குப் பொருந்தியது என்பதை பார்க்க ஒரு சம்பவத்தைச் சொல்கின்றேன்.

யேர்மனிக்கு 1981 ஆடிமாதம் முதலாம் திகதி வந்து இறங்கினேன்.

“கற்றவனுக்கு சென்ற இடம் எல்லாம் சிறப்பு” என்று சரி அதனையும் ஒரு முறை பரீட்சித்துப் பார்ப்போமே! என்று முயற்சித்தேன். யேர்மன் மொழி வந்து குறுக்கே அன்றைய பேர்லின் சுவர்போல் தடுத்தது. சரி அந்தச் சென்ற இடம் எல்லாம் சிறப்பு பழமொழியைவிட்டு, மற்றொன்று “கலைக்கு மொழியில்லை” என்பதைப் பரீட்சித்து பார்த்தேன், அது சரியாக வேலை செய்தது. கலை என் தனிமையை விரட்டியது. நான் இருந்த நகரம் லுட்விக்ஸ்ரட். Lüdwigstadt .Germany

மாலை நேரங்களில் எமக்கு கேக்கும் நாம் கேட்கும் யேர்மன் மொழிக்கு அர்த்தமும் சொல்லித்தந்தவர் அந்த நகரத்தில் உயர் பள்ளி ஆசிரியர் திரு றைன்காட் லின்டிக் என்பவர். அவரும் அவரது மனைவியும் எம்மை அகதியாக இல்லாமல் ஒரு நாட்டில் இருந்து வந்த அதிதிகளாகப் பார்த்தனர். அவர்கள் என் கலையை இனம் கண்டு கொண்டனர்.

“மிளகாய்த்தூள் எங்குவேண்டுவது, பச்சை மிளகாய் எங்குகிடைக்கும், வேலை எங்கு செய்யலாம், தொலைக் காட்சிப் பெட்டி பழையது எங்கு வாங்கலாம்? இப்படிப் பல கேள்விகளும் அவரிடம் நாம் கேட்போம்.” கேட்கும் எங்களுக் குத்தான் கேள்வி விளங்குமே தவிர அவர்களுக்கு விளங்குவது குறைவு. இருந்தாலும் விட்டு விடுவோமா? மொழிக்கு அப்பால் நின்று வென்றுவிடுவோம் இப்படியாக நானும் சிலை செய்வதற்குரிய கருவிகளும், அதற்குரிய மூலப் பொருட்களும் எங்கு எப்படி வாங்கலாம், என்று கேட்டேன். இதனை அவரே எனக்கு தன் பெரு முயற்சியால் பெற்றுத்தந்தார். என் வாழ்வு கலையால் களைகட்டத் தொடங்கியது.



முதல் முதல் திரு லின்டிக் அவர்களுக்கு ஒரு சிலையினை வடித்துக் கொடுத்தேன். அவர்மிகவும் பாராட்டி 150 டீ.எம் தந்து சிலையை எடுத்துச் சென்றார்.

மறுநாள் காலையில் அவரது மனைவி அந்தச் சிலையொடு திரும்பிவந்தார்? அவ்வளவுதான் எனக்கு எங்கள் ஊர்புத்திதான் வந்தது.

“மனுஷன் தெரியாமல் இவ்வளவு காசை இந்தச் சிலைக்கு ஏன் கொடுத்தவர்” என்று பேசிப்போட்டு கணவனை வீட்டில் இருத்திவிட்டு வந்திருக்கிறார்.. இப்போது நான் ஊருக்கு அனுப்பலாம் என்று நினைத்த 150 டி.எம்மும் சரி என எண்ணிக் கொண்டேன். நான் போட்ட கோடு இப்படி இருக்க அவர்களின் கோலமோ .வேறாக இருந்தது.

நேராக நான் சிலைசெய்யும் இடத்திற்கு என்னையும் அழைத்துச் சென்றார்.. தான் கொண்டுவந்த எனது சிலையை வைத்துவிடடு அங்கும் இங்கும் ஒரு துப்பறியும் காவல் துறையினைரைப்போல் தேடினார். பின் சிரித்துக்கொண்டே அகப்பட்ட அந்த அச்சினை அதாவது சிலை செய்ய நான் அமைத்த அச்சினை எடுத்து “இது எவ்வளவு பணம்” எனக் கேட்டார். நான் இனி அந்த அச்சில் எத்தனை சிலைசெய்வேன் என்பது எனக்கே தெரியாது. நான் யோசிப்பதற்கு முன் அதனையும் தனக்குத் தரும்படி கேட்டு என்னிடம் மேலதிகமாக நூறு டி. எம் தந்தார்.

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. சரி சரி இனி தானே தன்பாட்டிற்கு இந்த அச்சில் சிலை செய்து விற்கப்போகின்றா? அவர்களுக்கு என்ன அவர்களுடைய நாடு மொழிப்பஞ்சம் இல்லை. வெளிநாட்டவர் என்றால் சும்மாவா? எம்மை எப்படி எல்லாம் சுறண்டினவர்கள். அந்த பெண்ணின் நடத்தைக்கு என் கோடுகள் இப்படிக் கோலம் இட்டன.

மறு நிமிடம் அங்கு இருந்த சுத்தியலால் அந்த அச்சினை அவ்விடத்திலேயே உடைத்துவிட்டு என் சிலையை மட்டும் எடுத்தச் சென்றர்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. மறுநாள் மாலை மீண்டும் அவர் கணவன் கேக்குடன் வந்தார். அப்போது சொன்னார் “அவள் ஒரு மாதிரி அவளுக்கு மாதிரிகள் பிடிக்காது. எனவேதான் உங்கள் அச்சு வேறுயாருக்கும் நீங்கள் பாவித்து சிலையைச் செய்து கொடுத்தால் தன் சிலையின் தனித்துவம் கெட்டுப்போகும் அல்லவா? எனவேதான் அப்படி நடந்து கொண்டாள்” என்னும் விளக்கத்தை தந்தார்.

இங்கே என் முதல்கோட்டின் கோலங்கள் இந்தநாட்டில் மாறுபட்டு நிற்பதை கண்டுகொண்டேன். கலையின் கோலத்தையும் ஆழத்தையும், தனித்து வத்தையும், புரிந்துகொண்டேன்.

**கண்ணா**


Wilhelm Str.09
33602 Bielefeld



Bielefeld நகரில்.... 3 in one

Lakshmi Jewellery &Silks

பழைய பவுனுக்கு புதிய பவுண் மாற்றிக் கொடுக்கப்படும்!

Asia super markt

தங்கள் மனங்கவர் டிசைன்களில் தங்க ஆபரணத் தெரிவுகளுக்கும், வண்ண வண்ண நவநாகரீக ஆடைத் தெரிவுகளுக்கும் நினைவில் நிற்க வேண்டிய ஸ்தாபனம்Lakshmi Jewellery &Silk

திங்கள்கிழமை முதல் சனிக்கிழமை வரை காலை 9.00 மணிமுதல் மாலை 7.00 மணிவரை


பலசரக்குப் பொருட்களையும் எம்மிடம் மலிவாகப்பெற்று பயன் பெறுங்கள்

தொலைபேசி: Ruban 0179 72 35 729
http://www.lakshmi-jewellerysilks.de
Tel:0521 4283 510



**வெற்றிமணி**

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
—கவிஞர்.வி.க


ஆரம்பம்:1950

ஸ்தாபகர்
அமரர் **மு.க.சுப்பிரமணியம்**
(முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
"ஓவியக்கலைவேள்"
கலாநிதி
**மு.க.சு.சிவகுமாரன்** B.F.A.

*Chief Editor:*
**Dr.M.K.S.Sivakumaran B.F.A.**



Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
0157 88 77 31 56

e-mail: vettimaniy@hotmail.com


QB 830

**"வெற்றிமணிமொழி"**
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது


பத்திரிகை வடிவம்
சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)




# ஜெனீவாவில் அமெரிக்கா சமர்ப்பிக்கவுள்ள பிரேரணையும், இந்தியத் தேர்தலும்

**கொழும்பில் இருந்து -அ.நிக்ஸன்-**



2014ஆம் ஆண்டு பிறந்து விட்டது. மூன்றாவது முறையாகவும் ஜெனீவா மனித உரிமைச் சபையில் அமெரிக்கா இலங்கைக்கு எதிரான பிரேரணையை சமர்ப்பிக்கவுள்ளது. ஆனால் அந்த பிரேரணை இலங்கை அரசாங்கத்தை கட்டுப்பாட்டில் கொண்டுவருமா என்பது தான் இங்கு கேள்வியாகும். இந்தியா சீனா போன்ற நாடுகளின் அரசியல் போட்டிகள் அதிகரித்துச் செல்லவுள்ள இந்த ஆண்டில் அமெரிக்கா எடுக்கும் முயற்சி எந்தளவுக்கு தமிழர்களுக்கு உண்மையாக இருக்கும்? இந்திய அரசாங்கம் என்பதை விட இந்திய கொள்கை வகுப்பாளர்களின் இலங்கை தொடர்பான பார்வையைத்தான் இந்திய அரசியல்வாதிகள் செயற் படுத்த வேண்டும். இது அமெரிக்காவுக்கு நன்றாக தெரியும். ஆகவே இந்திய கொள்கை வகுப்பாளர்களின் இலங்கை தொடர்பான நிலைப்பாட்டை மீறி அமெரிக்கா சமர்ப்பிக்கவுள்ள பிரேரணை ஈழத் தமிழர்களுக்கு சாதகமான ஒரு நிலையை தோற்றுவிக்குமா? இந்திய அரசியல் கட்சிகள்.

மார்ச் மாதம் ஜெனீவா மனித உரிமைச் சபை கூடவுள்ளது. ஏப்ரலில் இந்தியாவில் நாடாளுமன்ற தேர்தல் நடை பெறவுள்ளது. இந்த நிலையில் தமிழகத்தில் வாக்குகளை பெறும் நோக்கில் காங்கிரஸ் கட்சியும் பாரதிய ஜனதா கட்சியும் ஏட்டிக்கு போட்டியாக ஈழத் தமிழர் விடயத்தில் ஏதோ அக்கறை உள்ளவர்கள் போன்று பிரசாரங்களில் ஈடுபடுவார்கள். சிலவேளை அமெரிக்கா சமர்ப்பிக்கவுள்ள பிரேரணையை கடுமை யாக்கி இலங்கைக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுப்பதற் கான ஒரு முயற்சியிலும் இந்த இரு கட்சிகளும் ஈடுபடலாம்.

"தமிழ் ஈழம் வெகு தொலைவில் இல்லை" என இந்திய முன்னாள் வெளியுறவு அமைச்சர் யத்வன் சிங்ஹா கடந்த வாரம் கூறிய கருத்துக்கள் அதனை வெளிப்படுத்து கின்றன. ஆனால் இந்திய அரசியல் வாதிகளுக்கும் இந்திய கொள்கை வகுப்பாளர்களுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகளை அமெரிக்கா நன்கு அறிந்துள்ளது. கடந்த இரண்டு முறையும் அமெரிக்கா சமர்ப்பித்த பிரேரணையில் இருந்த கடும் வாசகங்களை இந்தியா அகற்றியிருந்தது. இம்முறை தேர்தல் நடைபெறவுள்ளதால் அமெரிக்கா சமர்ப்பிக்கவுள்ள பிரேரணையில் கூறப்பட்டுள்ள கடும் வாசகங்கள் தொடர்பாக இந்தியா மௌனம் காக்கக்கூடி நிலையும் எற்படலாம். ஆனாலும் இந்திய கொள்கை வகுப்பாளர்கள அதற்கு இடமாளிப்பார்களா என்பது கேள்விதான்? ஏவ்வாறாயினும் கடந்த முறையை விட இம்முறை இந்தியா மௌனம் காக்கக்கூடி நிலைதான் உண்டு.

தேர்தல் அதற்கு ஒரு காணரம் என்று கூறினாலும் இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகள் இந்திய கொள்கை வகுப்பாளர்களுக்கும் சலப்பை ஏற்படுத் தியுள்ளது. குறைந்த பட்சமேனும் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழான மாகாண சபைளை உரிய முறையில் செயற்படுத்த இலங்கை அரசாங்கம் விதிக்கும் தடை இந்தியாவுக்கு எரிச்சலாக இருக்கின்றது. அந்த அடிப்படையில் இம்முறை அமெரிக்கா சமர்ப்பிக்கும் பிரேரணை தொடர்பாக இந்தியா மௌனமாக இருக்கும் என்பதுடன் அதற்கு ஆதரவாகவும் செயற்படக்கூடி நிலைமைதான் உள்ளது. தொடர்ந்து பல்வேறு பரிமாணத்தில் தொடர்ந்துகொண்டே இருக்கின்றது என்பதற்கு நடைமுறை விடயங்கள் சான்றாகும். குறிப்பாக காணி அபகரிப்பு, பௌத்த சமயபரப்புரைகள், புத்தர்சிலை வைத்தல் இனவிகிதாசாரத்தை குறைத்தல், இராணுவ கிராமங்களை உருவாக்குதல், தமிழர்பிரதேச எல்லை களை சிங்கள பிரதேசங்களுடன் இணைத்து தமிழர்களை நிலத்தொடர்பில்லாமல் பிரித்தல், நில உரிமைகளை பறித்தல் என்று வடக்கு கிழக்கில் புற்றுநோய்போன்று மறைமுக யுத்தம் நடந்துகொண்டேயிருக்கின்றது. இலங்கையின் அரசியலமைப்பு தமிழர்களுக்கு சமநீதி வழங்கவில்லை என்பது பொதுவான குற்றச்சாட்டு. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் 1883இல் முதன் முதலாக உருவாக்கப்பட்ட கோல்புறூக் அரசியல்யாப்பு முதல் இலங்கை 1948இல் சுதந்திரமடைந்து 1972இல் இறைமை அடைந்து உருவாக்கப்பட்ட யாப்புகள் வரை தமிழர்களுக்கு சமநீதி இல்லை என்பது வரலாறு.

**சமநீதியற்ற அரசியல் யாப்புகள்**

1978ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இரண்டாம் குடியரசு அரசியல் யாப்பு 18திருத்தங்களுடன் தற்போதும் நடைமுறையில் இருக்கின்றது. இந்த யாப்பில் 1987இல் செய்யப்பட்ட 13ஆவது திருத்தம்தான் அதிகாரப் பரவாலக்கல் முறையாகும் இதுதான் தமிழர்களின் அரசியல் பிரச்சினைக்கான தீர்வாகவும் கூறப்பட்டது. ஆனால் நடைமுறையில் அந்த அதிகாரங்களை காணவில்லை.

இன்று 13ஆவது திருத்தம் பற்றி பேசினாலும் அரசியல் தீர்வு என்பது தற்போது நடைமுறையில் உள்ள அரசியல் யாப்பின் அடிப்படையில் செய்ய முடியாது என்பது தமிழத்தரப்பு வாதம். இதனை உலக நாடுகள் விளங்கிக்கொண்டுள்ள வேண்டும் என்பதும் தமிழர்களின் எதிர்ப்பார்ப்பு ஆனாலும் நேர்மையான தீர்வுக்கான நேரடி அழுத்தங்களை உலக நாடுகளினால் இலங்கை அரசுக்கு கொடுக்கமுடியாமல் உள்ளது. வெறுமனே கண்டன அறிக்கைகள் எச்சரிக்கைகள் மாத்திரம் அரசாங்கத்தை திருத்துவதற்கு அல்லது வழிக்கு கொண்டு வருவதற்கு போது மானவையல்ல. 60ஆண்டுகாலம் தமிழர்கள் கண்ட துன்பங்களுக்கு இலங்கை அரசாங்கத்தை நோக்கிய உலக நாடுகளின் கண்டன அறிக்கைகள் ஒரு ஆறுதல் மாத்திரமே. அது அரசியல் தீர்வு அல்ல.


கடந்தகால வரலாறுகளை மீள்பார்வை செய்து தமிழர் களுக்கான சம அந்தஸ்தை உறுதிப்படுத்தும் வேலைத்திட்டங்களை உலக நாடுகளினால் முன்னெடுக்க முடியும்

தொடர்ச்சி 27ம் பக்கம்




# சரியான தயார்ப்படுத்தல் இல்லாவிடின் ஜெனிவாவில் இலங்கைக்கு நெருக்கடி!

## எச்சரிக்கிறார்!!! தயான் ஜயதிலக்க



ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் சபையின் கூட்டத்துக்கான தயார்ப்படுத்தல்களை இலங்கை முன்னரை விட அதிகமாக மேற்கொள்ள வேண்டும் என அரசியல் விமர்சகரும் முன்னாள் இராஜதந்திரியுமான கலாநிதி தயான் ஜயதிலக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

இல்லாவிட்டால் பிரதிபலன்கள் மிகவும் கடுமையானதாக இருக்கக்கூடும் எனவும் அவர் கூறியுள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

ரோம் இணக்கப்பாடுகளில் இலங்கை கையயழுத்திடவில்லை என்பதால் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய முடியாது எனச் சிலர் கூறுகின்றனர்.

இவை அறியாமல் கூறும் கதைகள். உலகில் இருப்பது ஒரு சர்வதேச நீதிமன்றம் அல்ல. யூகோஸ்லாவியாவின் முன்னாள் ஜனாதிபதி சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லப்படவில்லை. இதற்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட நீதிமன்றத்துக்கே அவர் கொண்டு செல்லப்பட்டார்.

சுமார் ஒரு வருடத்துக்கு முன்னர் தொலைக்காட்சி ஒன்றில் பேசிய சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் பிரதான பணிப்பாளர் மொரோனோ ஒக்கம்போ இலங்கைக்கு எதிரான வழக்குக் கோப்பு ஒன்று ஏற்கனவே திறக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

அதேவேளை போர்க்குற்றங்கள் மற்றும் ஏனைய மனித உரிமை மீறல்கள் தொடர்பில் எதிர்வரும் மார்ச் மாதத்திற்கு முன்னர் வெளிப்படையான சுயாதீனமான விசாரணை நடத்தப்படவில்லை என்றால் இலங்கை தொடர்பாக கடுமையான யோசனை முன்வைக்கப்படும் என பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்திருந்தார்.

இதனைச் சிறிய விடயமாக கருதிவிட முடியாது. கமரூன் கோமாளி அல்ல. அத்துடன் அவர் தனக்கு தெரியாமல் கடிதங்களை எழுதும் செயலாளர்களையும் அதிகாரிகளையும் வைத்திருப்பவர் அல்ல.

இலங்கை தொடர்பில் அவர் பிரிட்டன் நாடாளுமன்றத்தில் கருத்துக்களை முன்வைக்கும் போது இது அவரது அரசியல் கௌரவம் தொடர்பான பிரச்சினை.

## மண்டேலாவின் பாடங்களை மறந்த இலங்கை அரசியல்வாதிகள்“- சந்திரிகா

மறைந்த நெல்சன் மண்டேலாவுக்கு உலகெங்கிலுமிருந்து அரச தலைவர்கள், முன்னாள் அரச தலைவர்கள் உள்ளிட்ட பல்வேறு சர்வதேச பிரமுகர்களும் தங்களின் புகழஞ்சலிகளை செலுத்தி வருகின்றனர்.

அவரிடமிருந்து அரச தலைவர்கள் என்ன வகையான பாடங்களைக் கற்றுக்கொள்ள முடியும் என்று இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிபிசியிடம் தனது எண்ணங்களைப் பகிர்ந்து கொண்டார்.

இலங்கையின் தற்போதைய நிலைமையை பார்க்கும்போது, “அதிகாரத்தில் இருக்க வேண்டும் என்பதற்காக சில அரசியல்வாதிகள் மற்ற இனத்தைச் சேர்ந்த மக்களைக் கொல்லவும், தாக்கவும் எரிக்கவும் தயாராக இருக்கிறார்கள்“ என்று கூறினார் சந்திரிக்கா குமாரதுங்க.

தாங்கள் சிங்கள பௌத்த தேசத்துக்கு மட்டுமே பிரதிநிதிகள் என்று காட்டுவதற்காகவே மற்ற சமயங்களை, இனங்களை, சமூகங்களை ஒடுக்கும் நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டுள்ளதாகவும் சில அரசியல்வாதிகள் கூறுகின்றனர்.




# அகதிகளை விரட்டுகிறது பிரித்தானியா!

இளைய அப்துல்லாஹ்




பிரித்தானியாவில் அகதிகள் ஒரு முற்றுகையில் இருப்பதாகவே தெரிகிறது. கோ ஹோம் வேன் (GO HOME VAN) என்ற பெயருடைய விளம்பர வாகனங்கள் பல தொடர்ச்சியாக லண்டன் தெருக்களில் ஓடிக்கொண்டே இருக்கின்றன. இது அகதிகளை அல்லது விசா இல்லாதவர்களை "வந்து சரணடையுங்கள்" என்று அழைக்கிறது. அப்படி இல்லாவிடில் நீங்கள் கைதுசெய்யப்பட்டு, நாடு கடத்தப்படுவீர்கள் என்று அச்சுறுத்துகிறது.

இங்கிலாந்திலும் இலங்கையைப் போலவே...

இங்கு லண்டனில் வோல்தம்ஸ்டோ, கென்சல் கிறீன், ஸ்ரட்போட், ஈஸ்ட்ஹாம் போன்ற பகுதிகளில் அதிகாலை 7 மணிக்கே சுரங்க ரயில் நிலையங்களைச் சுற்றி டஜன் கணக்கான பிரிட்டிஷ் குடிவரவு (இமிக்ரேஷன்) அதிகாரிகள் வந்து நிற்கிறார்கள். வெள்ளை நிறம் தவிர்ந்த ஏனைய நிறமுடையவர்களை மறித்து விசா கேட்கிறார்கள். இங்கு வெளிநாட்டவர்கள், அகதிகள், மாணவர்கள் போன்றவர்கள் விசா அட்டை ஒன்றை வைத்திருக்க வேண்டும் என்ற நடைமுறையை பார்டர் ஏஜன்ஸி அண்மையில் கொண்டுவந்தது. முதலில் எல்லா பிரித்தானியரும் அந்த அட்டை எடுக்க வேண்டும் என்று இருந்ததைப் பின்னர் ஐரோப்பியர் அல்லாத வெளிநாட்டுக்காரர் எடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். ஐரோப்பியர் அந்த அட்டையை ஏற்கெனவே அவர்கள் நாடுகளில் வைத்திருக்கிறார்கள்.

மாணவர் விசா, வேலை விசா விண்ணப்பிக்கும்போது இப்போது அட்டையில்தான் விசாவைப் பதிவுசெய்து வழங்குகிறார்கள். அதில் கண்விழி அடையாளம்கூட பதிந்திருக்கிறது. அதனை அதிகாரிகள், 'அடையாள அட்டை' போல சோதனையின்போது கேட்கிறார்கள். அந்த அட்டை இல்லாதவர்கள் விசாவில் குளறுபடி உள்ளவர்கள் என்று அவர்களைக் கைதுசெய்து தடுப்பு முகாமுக்கு அனுப்புகிறார்கள்.

இலங்கையில்தான் அடையாள அட்டையை சிங்கள ராணுவத்தினரிடம் காட்டிக் காட்டி நொந்துபோனோம் இப்போது லண்டனில் அடையாள அட்டை காட்ட வேண்டிய அவலம் வந்துவிட்டது என்று ஈழத் தமிழர் ஒருவர் சொன்னார்.

## கருப்பு நிறம் என்றால் மோசடியா?

கருப்பு நிறமுடையவர்களை மறித்து விசா கேட்பது இப்போது குடிவரவு-குடியகல்வு அமைச்சுக்குப் பெரும் சவாலாக மாறியிருக்கிறது. இது நிறவெறி சம்பந்தப்பட்ட பிரச்சினை என்று மனித உரிமை அமைப்புகள் கண்டனம் தெரிவித்திருக்கின்றன. வெள்ளை நிறமுடையவர்கள் விசா மோசடி செய்ய மாட்டார்களா என்ற கேள்வி எழுப்பப்படுகிறது. ஆனால், வெள்ளைக் காரர்களுக்கு விசா மோசடி செய்ய வேண்டிய தேவை இல்லை.

இராக்கியர், இந்தியர், வங்கதேசியர், ஆப்கானிஸ்தான்காரர், இலங்கையர், ஆப்பிரிக்க நாட்டவர்தான் விசா இல்லாமல் இங்கு பிரித்தானியாவில் தங்கியிருக்கின்றனர். எனவே, அவர்களைத்தான் தாங்கள் சோதனை செய்ய வேண்டும் என்று குடிவரவு அதிகாரிகள் சொல்கின்றனர்.

தினமும் இங்கே இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், வங்கதேசத்தில் இருந்து வரும் மாணவர்கள் விமான நிலைய இமிக்ரேஷனில் கடும் சோதனைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள்.

## மாணவர் விசா

பொய்யான கல்லூரிகளைக் காட்டி விசா எடுத்தவர்கள் பிடிபடுகிறார்கள். நிறைய பணம் கொடுத்துப் பொய்யான கல்லூரிகள் பெயரில் விசா விண்ணப்பம் போட்டு இங்கு வந்து வேலை செய்யலாம் என்று வரும் இளைஞர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். இங்கு, இப்போது மாணவர் விசாவில் வருபவர்கள் வேலை செய்யவே முடியாது அவர்களுக்கு இன்சூரன்ஸ் நம்பர் கிடைக்க மாட்டாது. படிக்க என்று வருபவர்கள் முழுமையாகப் பணத்தைச் செலுத்திப் படிக்க வேண்டும்.

அப்படி மாணவர் விசாவில் வந்து இன்சூரன்ஸ் நம்பர் இல்லாமல் களவாக வேலை செய்து பிடிபட்டால் வேலை கொடுத்தவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் அபராதம் ஒரு ஆளுக்கு இருபதாயிரம் பவுண்டுகள். பிரித்தானியாவில் வரி கட்டாமல் வேலை செய்வது கிரிமினல் குற்றமாகும். அப்படிப் பிடிபட்டவர்களின் விசாக்கள் உடனடியாகவே ரத்துசெய்யப்பட்டு அவர்கள் நாடுகடத்தப்படுவார்கள்.

## கன்டெய்னருக்குள் கரியமில வாயு!

இப்போது ரஷ்யா போன்ற நாடுகளிலிருந்து இங்கு கன்டெய்னரில் களவாக வருபவர்களைக் கண்காணிக்க என்று குடிவரவுப் படை விசேடமாக அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் படை துறைமுகத்துக்கு வரும் அனைத்து கன்டெய்னர்களையும் முழுமையாகச் சோதனை செய்கிறது. சோதனை எவ்வளவு கடுமை என்றால் கன்டெய்னருக்குள் கரியமில வாயு (கார்பன்டை ஆக்சைடு) இருக்கிறதா என்று கருவி வைத்து சோதிக்கிறார்கள். அகதிகள் இங்கு வந்து பொருளாதாரத்தில் முன்னேறிவிடலாம் என்று நினைக்க கூடாது என்று உள்துறை அமைச்சர் நேரடியாகவே சொல்கிறார்.

## நிரூபியுங்கள்!

இப்போது ஈழத்தமிழ் அகதிகள் லண்டன் தெருக்களில் நடமாடவே அச்சப்படுகின்றனர். எந்த நேரமும் கைதுசெய்யப்படலாம் அல்லது நாடு கடத்தப்படலாம் என்ற அச்சம்தான் அது. தங்கள் அரசியல் தஞ்ச விண்ணப்பம் நிராகரிக்கப்படும் பட்சத்தில் அவர்கள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படும் அபாயம் காணப்படுகிறது. அவர்கள் அங்கு திருப்பி அனுப்பப்படும் பட்சத்தில் தங்கள் உயிருக்கு ஆபத்து இருக்கிறது என்பதை இங்கு அதிகாரிகளிடம் நிரூபிக்கப் பெரும் பிரயத்தனப்படுகிறார்கள். அவ்வாறு உறுதியாக நிரூபிக்காவிட்டால் அவர்கள் உடனடியாக நாடுகடத்தப்படுகிறார்கள்.

கொழும்பில் கைது செய்யப்படலாம் என்பதை இங்குள்ள அதிகாரிகளுக்கு எப்படி உறுதிப்படுத்துவது? அதனால் அவர்கள் அடைத்து வைக்கப்படுகிறார்கள்.

இங்கு ஈட்டன் ஹவுஸில் அகதிகளை உடனடியாகக் கொண்டுசெல்வதற்கு வாகனங்கள் தயார் நிலையில் இருக்கின்றன.

ஒரு மாற்றமும் வராது

தொடர்ச்சி 6ம் பக்கம்

திருக்கணித ஜோதிடம்

ஜாதகக் குறிப்பு எழுதுதல்
விவாகப் பொருத்த நிச்சயம்
சுபமுகூர்த்தம் வைத்தல்
ஜோதிட ஆலோசனைகள்
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
புண்ணியாகவாசனம்
சிரார்த்தம்
கடைத்திறப்பு விழா
கோயிற்கிரியைகள்
கிரகசாந்தி




சிவஸ்ரீ க.சபாநாதகுருக்கள்
Kreuzeskirchstr. 40
45127 Essen
Tel: 0201-652450

ASIJAH EUROPE
Tel: +31 511 76 00 06
Tel: +31 511 76 00 07
Fax: +31 511 76 00 08
Mobile: +31 6 12 17 55 99
புதிய முகவரி:
VOORSTRAAT 32
9291 CK KOLLUM
THE NETHERLANDS
Email: info@asijah.com
Email: asijaheurope@hotmail.com



ASIJAH EUROPE
Wholesale Distributors of finest Sri Lankan Grocery Foods
ஐரோப்பா எங்கும் இலங்கை இந்திய மளிகைப்பொருட்கள் மொத்த விற்பனை செய்கின்றோம்.
Web: asijah-europe.com

# அகதிகளை விரட்டுகிறது பிரித்தானியா!

5ம் பக்கத் தொடர்ச்சி

## ஒரு மாற்றமும் வராது

வெளிநாட்டிலிருந்து இங்கு வருகின்றவர்கள்மீது அதிகாரிகளின் கண் பின்தொடர்ந்து கொண்டே இருக்கிறது. நான் எனது வீட்டிலிருந்து லண்டன் நகரத்துக்குப் போகும்போது ஆயிரக் கணக்கான கமெராக்கள் என்னைக் கண்காணிக்கின்றன என்பது எனக்குத் தெரியும். ஆனால் அது ஒரு அகதிக்கு ரண வேதனை.





பிரித்தானிய பிரதமர் யாழ்ப்பாணத்துக்குப் போய்வந்ததன் பின்னர் அகதிகள் தொடர்பான கொள்கைகளில் மாற்றம் வரும் என்று சிலர் எதிர்பார்க்கின்றனர். ஆனால் மாற்றத்தை எதிர்பார்க்க முடியாது என்று சொல்பவர்கள்தான் அதிகம். ஏனெனில், பிரித்தானியா தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் (அறிக்கை) அகதிகளைக் கட்டுப்படுத்துவதாகச் சொல்லியிருக்கிறது. அதுதான் நடைமுறையில் இருக்கும் கெடுபிடி என்று அரசியல் ஆய்வாளர்கள் சொல்கிறார்கள்.

உண்மையான அகதிகளுக்கு பிரித்தானியா எப்போதும் விசா வழங்கும் என்று குடிவரவு அமைச்சர் சொல்கிறார். பிரச்சினைகளை இங்குள்ள அதிகாரிகளுக்கு எழுத்துபூர்வமாக நிருபிப்பதற்காகப் படாத பாடு பட வேண்டியிருக்கிறது.

## ஓரின உறவாளரென்றால் சரி

ஆனால் அகதிகளாகப் பதிவுசெய்வதற்கு இன்னொரு முறையையும் பிரித்தானியா சொல்கிறது. ஓரின உறவாளராக இருப்பவர்கள் (ஆண்களாக இருந்தாலும் சரி,

பெண்களாக இருந்தாலும் சரி) தங்கள் நாடுகளில் வாழ்வதற்கு முடியாமல் இன்னல் அனுபவித்தால், பகிரங்கமாக வாழ முடியாதுபோனால் இங்கு பிரித்தானியாவில் சரியான ஆதாரத்தைக் காண்பித்து அகதி அந்தஸ்துக்கு விண்ணப்பிக்கலாம். ஆதாரபூர்வமாக தாங்கள் ஓரின உறவாளர்கள் என்று நிருபிக்க வேண்டும்.

# குதிக் காலில் வலி ஏன் வருகின்றது?




குதிக் காலில் வலி என மருத்துவர்களிடம் வருபவர்கள் பலர் காலையில் படுக்கையிலிருந்து எழுந்து நடக்க ஆரம்பிக்கும்போது அல்லது ஓய்வாக இருந்துவிட்டு நடக்க ஆரம்பிக்கும்போது வலி என்பார்கள்.

குதிக் கால்வாதம் எனப் பலரும் சொல்வார்கள். வாதம் என்று சொன்னாலும் இது பொதுவாக மூட்டு நோய் அல்ல. பொதுவாக தசைகள் சவ்வுகளில் ஏற்படும் அழற்சிகளால் ஏற்படுகின்றன.

குதிக் காலில் வலி வருவதற்கான முக்கிய காரணங்கள் எவை?

மிக முக்கிய காரணம் பாதத்தின் அடிப் பாகத்தில் இருக்கும் சவ்வுகளில் ஏற்படும் அழற்சியாகும்.

நடக்கும்போது ஒருவரின் பாதங்கள் சரியாக நிலத்தில் பதியாமல் உட்பக்கமாகவோ வெளிப்புறமாகவோ சற்று சரிந்து நடந்தாபல் அவ்வாறான வலி ஏற்படலாம்.

பாதத்தின் குதிப் பகுதியில் உள்ள கல்கேனியம் என்ற பிரதான எலும்பில் வழமைக்குமாறான எலும்புத் துருத்தல் இருந்தால்.

கெண்டைக் காலின் பிரதான சவ்வான அக்கிலிஸ் ரென்டனில் ஏற்படும் அழற்சியும் வலியை ஏற்படுத்தலாம்.

பாதத்தின் மூட்டுகளில் ஏற்படக் கூடிய காயங்கள், உருக் குலைவுகள், ரூமற்ரொயிட் வாதம் அல்லது வேறு ஏதாவது நாட்பட்ட நோய்கள் காரணமாகவும் வரலாம்.

உங்கள் வலி எங்கு எந்நேரத்தில் எவ்விடத்தில் வருகிறது போன்ற விடயங்களை சரியாக அவதானித்து மருத்துவருடன் கலந்து ஆலோசித்து, நோய்கான அடிப்படைக் காரணத்தைக் கண்டறிந்து சுகம் காணலாம்.

டொக்டர்.எம்.கே.முருகானந்தன்.MBBS(Cey), DFM (Col), FCGP (col)



# நீங்கள் வாழ்வில் போட்ட புள்ளிகளை முறையாகத் தொடுத்தால்! நீங்கள் பெரும் புள்ளி!

**அப்பிள் படைப்புக்குச் சொந்தக்காரரான Steve Jobs அவர்களது வாழ்க்கைப் பாடம்! உங்களுக்கும் ஒரு பாடமாகலாம்!!**

**சிவஜெனனி அரவிந்தன்**




சின்னவயதில் நாம் படிக்கும் காலத்தில் விளையாட்டாகவே படிப்பை மேற்கொள்வோம். அதாவது எது பிடிக்கிறதோ அதில் இருந்து படிப்பை ஆரம்பிப்போம். அப்படி முதலில் நாம் விளையாட்டாகப் போட்டது இந்த புள்ளிகளைத் தொடுக்கும் விளையாட்டு. சரியாக முறையாக கவனமாகத் தொடுத்தால் அப்புள்ளிகளுக்கு இடையில் ஓர் உருவத்தை எம்மால் உருவாக்கமுடியும். மாங்காய், மனிதன், மீன், பறவை, கொக்கு, சிங்கம், என அடுக்கிக்கொண்டே போகலாம். இவை நாம் இனம் கண்டு தொடுத்து முடித்து வெளியேற்றிய உருவங்களின் பட்டியலை.
சரி இப்படி முறையாக நாம் வாழ்வில் இட்டு வந்த புள்ளிகளையும், சரியாகத் தொடுத்தால், ஓர் உருவம் நமக்குக்கிடைக்கும். அதுதான் எங்களது ஆக்கபூர்வமான உருவம். அதனைச் செதுக்கிவிட்டோம் என்றால் இவ்வுலகில் நாம் பெரும் புள்ளியாகிவிடலாம்.

இதற்கு உதாரணமாக இன்று மனிதவர்க்கத்தையே வியப்பில் ஆழ்த்தி மகிழும் அப்பிள் படைப்புக்குச் சொந்தக்காரரான Steve Jobs அவர்களது வாழ்வைப் பார்ப்போம்.

அப்பிளைக் கண்டுபிடித்த Steve Jobs அமெரிக்காவில் பெயர்பெற்ற பல்கலைக்கழகமான Stanford University இல் 2005 ஆண்டு பட்டமளிப்பு விழாவில் ஆற்றிய உரை இது.

இவர்தான் அப்பிள் Apple prototypes இனைக் கண்டு பிடித்தவர். அந்நேரத்தில் அப்பிள் வாசிப்பு எழுத்து 4Kb-20 செக்கனில் இருந்தது. அது தான் அப்போது மிகவும் துரிதமானதாகவும் இருந்தது. இப்போது அது 20,000 மடங்கு மெதுவானதாக இருக்கின்றது. 80 நடுவில்தான் Macintosh Personal PC செய்யப்பட்டது. அதே போல் Mouse ம் கண்டுபிடிக்கப்பட்டது. இவர்தான் Pixar அனிமோசன் கண்டுபிடிப்பாளர். 2 அனிமோசன் படங்களைத் தயாரித்தவர். 1.Toy Story 2.Finding Nemo
இவ்வளவு சிறந்த அறிவுப் பெட்டகத்தின் வாழ்வு எப்படி ஆரம்பமானது என்பதனை தனது உரையில் அங்கு குறிப்பிட்டார்...

உண்மையில் நான் ஒருபோதும் பட்டம் வாங்கவில்லை. இன்று எனது வாழ்வின் மூன்று கதைகளை சொல்லப்போகின்றேன். 1. ஒரு புள்ளியில் இருந்து புள்ளிகளுக்குத் தொடர்புபடுதல். நான் college குச் சென்று சிலமாதங்களிலேயே விலகினேன். அதன் பின்பு 18 மாதங்கள் College இல் சும்மா அலைந்து திரிந்தேன். ஏன் விலகினேன்? என்னைப் பெற்ற அம்மா திருமணம் செய்யாத ஒரு பட்டதாரி மாணவி. அவர் என்னைத் தத்துக் கொடுக்கவிரும்பினார். ஆனால் தத்தெடுப்பவர்கள் படித்தவர்களாக இருக்கவேண்டும் என்று விரும்பினார். தத்தெடுக்க விரும்பிய எல்லோரும் இறுதிநேரத்தில் பெண் குழந்தைதான் வேண்டும் என்று என்னைத் தத்தெடுக்க மறுத்துவிட்டனர்.




கடைசியாக என்னை வேறு ஒரு குடும்பம் தத்தெடுத்தது. ஆனால் அவர்கள் படிக்கவில்லை என்பதனால் என்னைப்பெற்றதாய் கையொப்பமிட மறுத்துவிட்டார். ஆனால் அவர்கள் என்னைப் படிக்கவைப்போம் என்று கூறியதால் தாயார் ஒப்புக்கொண்டு என்னைக் கொடுத்தார்.
17 வருடங்களின் பின்பு நான் college குச் சென்றேன். ஆனால் அந்த college மிகவும் முதன்மையானதும் செலவு கூடியதுமானதாக இருந்தது. எனது வளர்ப்பு தாய், தந்தையரின் சேமிப்பு சிறிதுநாட்களிலேயே முடிந்துவிட்டது. எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அதனால் என் நிலை மிகவும் பயங்கரமாக இருந்தது. எனக்கு இருக்க ஓர் அறையில்லை. எனது நண்பர்களது அறைகளில் தரையில் படுத்துறங்கினேன். கோலாப் போத்தல்களைப் பொறுக்கி, விற்றுச் சாப்பிட்டேன்.

## -ஹரே ராமா ஹரே கிருஷ்ணா- கோவிலுக்குச் சென்று சாப்பிட்டேன். அது எனக்கு அமிர்தமாக இருந்தது!

ஞாயிற்றுக்கிழமைகளில் 7 மைல் தூரம் நடந்து, -ஹரே ராமா ஹரே கிருஷ்ணா- கோவிலுக்குச் சென்று சாப்பிட்டேன். அது எனக்கு அமிர்தமாக இருந்தது! எனது வாழ்க்கையின் தொடக்கம் நன்றாக அமையவில்லை. நான் இப்போது திரும்பிப்பார்க்கிறேன். நான் College விட்டது நான் செய்த மிகநல்லமுடிவாக இருந்தது. நான் விலகியபின்பும் எனக்குப் பிடித்த பாடங்களுக்குச் சென்று வந்தேன். எனக்குப் பிடித்த பாடம் Calligraphy (எழுத்துவடிவங்கள் Fonds) Typography எனக்கு அது பிடித்திருந்தது. ஆனால் இது உண்மையில் அந்நேரம் ஏன், எதற்கு என்று தெரியவில்லை. ஆனால் நாங்கள் Macintosh செய்யும்போது எனக்கு ஞாபகம்வந்தது. அவற்றை அந்த Mac க்கு பிரயோசனப் படுத்தினோம்.
அது மிகச்சிறந்த Computer. நான் அந்தக் College க்குப் போவில்லை என்றால் Mac ன் எழுத்துவடிவம் இப்படி அமைந்திருக்காது. Windows,Mac ஐ copy பண்ணியதால் சாதாரண Computer வந்தது. ஆனால் அந்நேரம் எதற்கா ஏன் செய்கிறோம் என்று தெரியாமல் செய்கின்றோம். ஆனால் 10 வருடங்களின் பின் பார்க்கும் போது அது பிரயோசனமாக இருக்கும். ஆகையால் நமக்கு ஏதாவது ஒன்றில் நம்பிக்கை இருக்கவேண்டும். அந்தப்புள்ளிகள் தொடுக்கப்படும் என்ற நம்பிக்கை இருக்கவேண்டும். அப்படி இருந்தால் தான் தன்னம்பிக்கை வரும். **தொடரும் புள்ளிகள்....**



# கொழும்புக் கோட்டையில் கோமணத்துடன் ஆர்ப்பாட்டம்!


வரவு செலவுத் திட்டத்தை எதிர்த்து விவசாயிகள்

நிவாரணம் இல்லாத வரவு - செலவுத்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று (12.12.2013) மாலை 4 மணியளவில் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்று அகில இலங்கை கமநல சம்மேளனத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வரவு - செலவுத்திட்டத்திற்கு முன் நிதி அமைச்சு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றாமை மற்றும் வரவு - செலவுத்திட்டத்தில் விவசாயிகள் மறக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே இவ்வார்ப்பாட்டம் முன்னெடுக் கப்பட்டுள்ளது.

இந்நிலையில், "விவசாயிகளுக்கு ஓய்வூதியம் வழங்கும் வயதை 60 இல் இருந்து 63 ஆக அதிகரித்தமையை உடனடியாக இரத்துச் செய்", " விவசாயிகளின் நிலுவை யான ஓய்வூதியத்தை செலுத்துவதற்கு நிதி ஒதுக்கு" போன்ற கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காக இவ்வார்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. பெண்கள் தெருவில் இவர்களது ஆர்பட்டத்தால் கூச்சப்பட்டு சென்றதை அவதானிக்க முடிந்தது.



# அல்ப்ஸ் மலைத்தொடரில் கயிற்றில் நடந்து மலைக்கவைக்கும் மனிதன்!

வயிற்றுக்காக கயிற்றில் நடக்கிறான் பாரு! இறங்கிவந்தா அப்புறம் தாண்ட சோறு! என்று ஒரு பாடல் எம்.ஜி.ஆர் பாடியது (நல்லநேரம் படத்தில்) நினைவுக்குவருகிறது.

அது சோத்துக்காக கயிற்றில் நடந்தது இது சோவுக்காக (சாதனைக்காக) கயிற்றில நடப்பது, எதுவானாலும் கரணம் தப்பினால் மரணம்தான் இதோ….

ஐரோப்பாவில் உள்ள மிகப்பெரிய மலைத்தொடர்களில் ஒன்றான அல்ப்ஸில் கயிற்றினூடாக அந்தரத்தில் நடந்து பிரான்ஸ் நாட்டுப் பிரஜையொருவர் சாதனை நிகழ்த்தியுள்ளார். அல்ப்ஸ் மலைத்தொடரில் உள்ள சுமார் 1200 அடி உயரமுள்ள மொன்ட் பிளெங்க் என்ற மலையையே இவர் கடந்துள்ளார்.

ஜூலியன் மில்லொட் என்ற நபரே இவ்வாறு சாதனை படைத்தவராவார். இவர் 2 அங்குல கயிற்றில் நடந்து சென்ற காட்சியைக் கொண்ட புகைப்படங்களும் காணொளிகளும் இணையத்தில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளன.



27 ஆண்டுகள் காத்திருந்த ஞானி







நெல்சன் மண்டேலா அடைக்கப்பட்ட தென்னாப்பிரிக்க விக்டர் வெர்ஸ்டர் சிறையும், கல்லுடைத்த இடமும், அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா பார்வையிடுகின்றார். 7.06.2013



தென்னாபிரிக்கத் தலைவர் நெல்சன் மண்டேலா தென்னாப்பிரிக்காவின் வெள்ளையர் அரசாங்கத்தை எதிர்த்தமைக்காக 1964ல் சிறையில் அடைக்கப்பட்டார். மண்டேலா தனது வாழ்க்கையில் 27 ஆண்டுகளை சிறையில் கழித்த பின்னர், தனது 71ஆவது வயதில் சிறையில் இருந்து விடுதலை பெற்றார். (1990 ஆம் ஆண்டு பெப்ரவரி 11 நாள்) தென்னாபிரிக்காவில் நிறவெறி ஆட்சி ஒழிய வேண்டும் என்ற விடுதலை வீரர்களின் கனவு மெய்ப்படவும், நான்கு ஆண்டுகள் கழித்து தென்னாப்பிரிக்காவில் ஜனநாயகம் மலரவும் மண்டேலாவின் விடுதலை வழிவகுத்திருந்தது. விடுதலைக்குப் பின்னர் நாட்டில் இனவெறி ஆட்சியை அகற்றுவது தொடர்பான பேச்சுவார்த்தைகளில் அவர் மிக முக்கியப் பங்காற்றினார். தென்னாப்பிரிக்காவில் ஜனநாயக முறையில் தேர்தல்கள் நடக்க இவை வழி வகுத்தன.(1994)

1994 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவின் முதல் கருப்பின அதிபரானார் நெல்சன் மண்டேலா.

# கோபத்தை ஆக்கப்பூர்வமாக மாற்றியவர் மண்டேலா!

## வெள்ளையர் ஆதிக்கத்தையும், கருப்பர் ஆதிக்கத்தையும் எதிர்த்துப் போராடியவர் மண்டேலா - ஒபாமா

ஜோஹன்னஸ்பர்க்: 9வெள்ளையர் ஆதிக்கத்தை மட்டுமல்லாமல், கருப்பர் ஆதிக்கத்தையும் எதிர்த்துப் போராடியவர் நெல்சன் மண்டேலா என்று கூறியுள்ளார் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா. ஜோஹன்னஸ்பர்க்கில் 09.12.2013 நெல்சன் மண்டேலாவுக்கு இரங்கல் தெரிவிக்கும் நிகழ்ச்சி நடந்தது. அமெரிக்க அதிபர் ஒபாமா உள்ளிட்ட பல்வேறு நாட்டுத் தலைவர்கள் கலந்து கொண்டனர். 06.12.2013 மறைந்த மதிப்புக்குரிய நாயகன் நெல்சன் மண்டேலாவிற்கு, இரங்கல் உரை நிகழ்த்தினார். அவரது உரையிலிருந்து சில பகுதிகள்..

மண்டேலா ஒரு நல்ல மனிதராக, மகனாக, கணவராக, தந்தையாக, நண்பராக விளங்கியவர்.சாதிக்காதது ஏதுமில்லை அவர் சாதிக்காதது ஏதுமில்லை. எதையும் சாதிக்க முடியாது என்று கூற முடியாது என்பதற்கு அவர்தான் சரியான உதாரணம். அவரிடமிருந்து கற்க நிறைய உள்ளது.

### செயல் வீரர் மண்டேலா

ஒரு நல்ல செயல் வீரர். பேச்சோடு நிற்காமல் செயல்பட்டுக் காட்டியவர். கோபத்தை ஆக்கப்பூர்வமாக மாற்றியவர் கோபத்தை கொந்தளித்து வெடிக்க விடாமல் அதை ஒருமுகப்படுத்தி அதை ஆக்கப்பூர்வமான பாதையில் திருப்பியவர் மண்டேலா. கடவுள் நமக்குக் கொடுத்த உரிமைகளை, ஆண்களும், பெண்களும் சமமாக நுகரும் வழியை ஏற்படுத்திக் கொடுத்தவர். அதற்காக தீரத்துடன் போராடியவர்.

இருவரையும் எதிர்த்துப் போராடியவர் வெள்ளையர் ஆதிக்கத்தை எதிர்த்து அவர் போராடினார். அதேபோல கருப்பர்களின் ஆதிக்கத்தையும் எதிர்த்து அவர் போராடினார்.

கொள்கை வீரர் கொள்கைக்காக வாழ்ந்தவர் மண்டேலா. கொள்கைக்காக உயிர் விடவும் தயாராக இருந்தவர். கொள்கைகளின் முக்கியத்துவத்தை நமக்கு உணர்த்தியவர். வாதமாக இருந்தாலும் காரணத்திற்காக வாதாடியவர். சிறைக்குள் ஞானோதயம் சிறைக்குள் நீண்ட காலம் அடைபட்டுக் கிடந்தாலும் தனது கொள்கைளை பட்டொளி வீசிப் பறக்க விட்டார். உறுதி குலையாமல் இருந்தார்.

### உண்மையான ஹீரோ


உண்மையான ஹீரோவாக வாழ்ந்தவர் மண்டேலா. அவரது வாழ்க்கை ஒரு சரித்திரம். அனைவருக்கும் நல்ல பாடமாக அவர் மாறியிருக்கிறார். அவர் காட்டிய வழியில் "மண்டேலா காட்டிய வழியில்" அனைவரும் போராடுவோம். நீதிக்காகவும், தர்மத்திற்காகவும் என்றார் ஒபாமா.






KIOSK & ASIAN MARKT
Lebensmittal
பசுமையான மரக்கறிகள்
கடல் உணவு வகைகள்
இன்னும் பலசரக்குப் பொருட்கள்
அனைத்தும் தரமாகவும் மலிவாகவும் கிடைக்கும்.
Tel:02332 50 97 568
Hagener Str.158
58285 Gevelsberg
உரிமையாளர்: த.மனோகரன்

யேர்மனியில் சிறந்த மணவறைக்கு நாடுங்கள்!
THUSHI DEKO GERMANY
New in Germany
THUSHI DEKO GERMANY
T.Thiruselvam:
Tel: 02305-85945
0176-60810813
www.thushi-deko.de



# ரஜினியின் அதிரடி வசனங்கள் சில !

## லகலகலக... இது ஒரு வசனம்கூட இல்லை.ஆனால் அது பட்டைகிளப்பியது தெரிந்ததே!

சூப்பர் ஸ்டார் ரஜினியின் ஒவ்வொரு படமும் ஏதோ ஒரு விதத்தில் தனித்துத் தெரிய வேண்டும் என்பதற்காக கவனமெடுப்பார்கள். ரசிகர்கள் மறக்க முடியாத அளவுக்கு ஒரு சிறப்பான விஷயம் அதில் இருக்க வேண்டும் என்று நினைக்கும் ரஜினி, அதற்காக தானே சிலவற்றைச் சேர்ப்பதும் உண்டு. ஹவ்வீஸ் இட் தொடங்கி, அந்த கதம் கதம், லகலகலக வரை சொல்லிக் கொண்டே போகலாம். அவற்றில் சிலவற்றை இங்கே தொகுத்திருக்கிறோம்.




இதெப்டி இருக்கு! ரஜினிக்கு அவரது முதல் படத்தில் அவ்வளவாக வசனங்களில்லை. ஆனால் இரண்டாவது படமான மூன்று முடிச்சு தொடங்கி வசனங்களில் பின்னியிருப்பார். ரஜினி நடித்த பதினாறு வயதினிலேவில் அவருக்கு வில்லன் வேடம். சில காட்சிகள்தான். ஆனால் பளிச்சென்று தெரிவது அவர்தான். குறிப்பாக அந்த வசனம் "இதெப்டி இருக்கு!" சீவிடுவேன்... முரட்டுக்காளையில் ரஜினியின் புகழ்பெற்ற வசனம் "சீவிடுவேன்!" பின்னாளில் எந்திரன் படத்தில் இதே வசனத்தை ரஜினி எதிரில் கலாபவண் மணி பேசிக் காட்டுவார்! ஹவ்வீஸ் இட்... இது வீராவில் ரஜினி பயன்படுத்திய முத்திரை வசனம். அதை அவர் உச்சரித்த அழகே தனி. நான் ஒரு தடவ சொன்னா... தமிழ் சினிமா ரசிகர்களின் மனதில் நீங்காத இடம்பெற்ற வசனம், "நான் ஒரு தடவ சொன்னா நூறு தடவ சொன்ன மாதிரி..". பாட்ஷாவில் இடம்பெற்ற இந்த வசனம் கிட்டத்தட்ட ஆட்சி மாற்றத்துக்கே வழிவகுத்தது.





ஆண்டவன் சொல்றான்... ஆண்டவன் சொல்றான் அருணாச்சலம் முடிக்கிறான்... இது அருணாச்சலம் படத்தில் இடம்பெற்ற படு பாப்புலர் வசனம். நான்கு வார்த்தைகளுக்குள் ஏகப்பட்ட அர்த்தங்களை உள்ளடக்கிய வசனம் இது. என்வழி தனீ வழி... படையப்பாவில் இடம்பெற்ற இந்த வசனத்தை ஒவ்வொரு முறை சொல்லும்போதும், ஆங்கிலத்தில் ஒரு இணை வசனத்தைச் சொல்வார் ரஜினி. வெகு ஈர்ப்புடன் அமைந்த வசனம். நான் எப்போ வருவேன்... முத்து படத்தில் காட்சியோடு இணைந்து வரும் "நான் எப்ப வருவேன், எப்டி வருவேன்னு தெரியாது.. ஆனா வரவேண்டிய நேரத்துக்கு கரெக்டா வருவேன்," என்று ரஜினி பேசியதற்கு பல அரசியல் அர்த்தங்க்கள் கற்பிக்கப்பட்டன. இன்னும் கூட இந்த வசனம் உயிர்ப்புடன்தான் உள்ளது! கதம் கதம் பாபா படத்தின் இந்த வசனத்தை, அந்தப் படம் வெளியானபோது பிறந்திருக்காத சின்னஞ்சிறுசுகளும்கூட இன்று பாபா முத்திரையுடன் சொல்லிக் காட்டுவதே இந்த வசனத்தின் சிறப்பு. லகலகலக... இது ஒரு வசனம்கூட இல்லை. தன் எள்ளலைக் காட்ட ரஜினி பயன்படுத்திய ஒருவித ஒலி. அதற்குக் கிடத்த வரவேற்பு வரலாறு காணாதது. ச்சும்மா அதிருதில்ல... சிவாஜியில் இடம்பெற்ற வசனம் இது. நிஜமாகவே சினிமாவை அதிரவைத்தது, அதன் வீச்சு. அடேங்கப்பா... பல படங்களில் ரஜினி இந்த சொல்லைப் பயன்படுத்தும் விதம், அதை உச்சரிக்கும் தொனி... அடேங்கப்பா!



## "மாடு நீ ! நீ முன்னாலே போற மனுஷன் நான் உன் பின்னால வாறேன்"

# மனிதனை முட்டாளாக்கிய நீதி தேவதை!



அது ஒரு வயல் காளை மாடு முன்னாலே போக ஏரின் நுகத்தடியை தன் கைகளால் அழுத்தியபடி பின்னாலே ஒரு விவசாயி....காளை மாட்டுக்குக் கஷ்டம் தெரியக் கூடாதே என்று பேசிக் கொண்டே உழுகிறார் விவசாயி

"மாடு நீ ! நீ முன்னாலே போற ...மனுஷன் நான் உன் பின்னால வாறேன் ......
பார்த்தியா....இது தான் தலை எழுத்து....விவசாயம் என்ற தொழில்லையே நீ முன்னால நான் பின்னால" என்று இனிக்க பேசினார் விவசாயி .

கொம்பைக் கொம்பை ஆட்டிக் கொண்டு விவசாயியை அங்கீகரித்தது காளை மாடு .பாராட்டுக்கு எந்த மாடு தான் மயங்காது! அடடா.... இந்த மனித ஜாதிதான் எவ்வளவு மேலானது . நம்மை மனம் விட்டுப் பாராட்டுகிறதே என்று குளிர்ந்து போய்தன் மேல் தோலை ஒரு முறை சிலிர்த்துக் கொண்டது!

"பாராட்டுவதே ஒருவரை மேலும் மேலும் அடிமையாக்க" என்பது மனித ஜாதியின்சமர்த்தியம். அது மாட்டுக்கு எங்கே புரியப் போகின்றது? விவசாயி தொடர்ந்தார்.

"நீயும் நானும் இந்த விவசாயத்தில் கூட்டாளி ! அதனால வர்ர விளைச்சல் உனக்குபாதி, எனக்குப் பாதி ." காளை மாட்டுக்குத் தலை சுற்றியது. ஆஹா ..மனித ஜாதிக்குளவ்வளவு நேர்மை! பாதிப் பாதி பங்கு தர எவருக்கு மனசு வரும்' என்று மகிழ்ந்து போனது.

"பாதிப் பாதின்னா எப்படிப் பங்கு வைக்கலாம்.. நீ முன்னால போறதால முன்னால கிடைக்கிறது முன்னால வளர்றது எல்லாம் உனக்கு. நான் பின்னால வர்றதாலே பின்னாலே வர்றது எனக்கு. ..சரிதானா? "என்றார் விவசாயி.

முன்னால,.பின்னால என்ற அளவு கோலை விவசாயி துல்லியமாகப் பிடித்தது குறித்து மாட்டுக்குச் சந்தோஷம் . "முதல்ல வரப் போவதெல்லாம் எனக்கா? " என்று கண்ணை மலங்க மலங்க விழித்தது மாடு. வஞ்சனையாக நமட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டான் மனிதன் விதையிட்டு நாற்று நட்டு சில காலத்தில் பச்சைப் பசேல் என்று இலை விரித்தது வயல் மாட்டுக்கு வாயெல்லாம்' எச்சில் !எஜமானனைப் பார்த்து அவசரப்படாதே இந்த இலை எல்லாம் உனக்கு! உனக்குத்தான் அப்புறமா தார்ரேன் "முதல்லே இலை வந்தது..இது உனக்கு இதிலே அப்புறமா ஒண்ணு வரும் அது எனக்கு " என்றார் சமர்த்தியமான மனிதர்.

இலைக்கு மத்தியில் குலை குலையாய் நெல் அரும்பு கட்டி குதிரைப் பிடரி மாதிரி குவிந்து சாய்ந்தது.
அறுவடை செய்ததும் வைக்கோல் மாட்டுக்கு! நெல் முழுவதும் மனிதனுக்கு முதலில் வந்த வைக்கோல் முன்னால் போன மாட்டுக்கு! பின்னால் வந்த நெல்லோ பின்னால் போன மனுஷனுக்கு !மாடு என்ன கோட்டுக்கா போக முடியும்?

**ஆக்கம்: சுகி.சிவம்**

பாகப் பிரிவினையில் அநீதி இருக்கின்றது என்று விவசாயியைப் பரிதாபமாக பார்த்தது மாடுகவலைப்படாதே ! நெல்லில் பங்கு தர்ரேன் அதிலையும் பாதி எனக்கு மீதி உனக்கு முன்னால் வர்ரது உனக்கு பின்னால் வர்ரது எனக்கு என்று உலக உத்தம மானுட ஜாதி நீதி சொன்னது. நெல்லை உலர வைத்து உடைத்து புடைத்ததும் முன்னால் வந்தது உமி..தவிடு அதெல்லாம் மாட்டுக்கு பின்னால் வந்தமுத்து முத்தான அரசிமுழுவதும் நீதி மான் மனிதனுக்கு!

பங்கீட்டிலும் நியாயமில்லை என்று பரிதாபமாக எஜமானரை பார்த்தது மாடு " கவலைப்படாதே அரிசியைச் சோறாக்கி அதிலே பங்கு தர்றேன் என்றது மனித ஜாதி சோறாக்கி வடித்த போது முன்னால வந்த கஞ்சி முவதும் மாட்டுக்கு முத்து முத்தான அரிசிச் சோறு மனிதனுக்கு ! மாடு முரண்டு பிடித்தது.முன்னால பின்னால எனற பங்களிப்பில் மனித ஜாதி தனக்குஅநீதி இழைப்பதாக வருந்தியது ஒரு முறையாவது முன்னால மனிதனுக்கு பின்னாலமாட்டுக்க என்று நீதி வழங்கு என்று மாடு போராடியது.

அடுத்த முறை முன்னால எனக்கு பின்னால உனக்கு என அறிவித்தது மனித ஜாதி. !அதை அப்படியே கடைப்பிடித்தது! பொங்கல் பண்டிகை வந்தது முதல் நாள் பொங்கல் மனிதனுக்கு மறுநாள் பொங்கல் மாட்டுக்கு.....எப்படிநியாயம் ?

மாட்டு ஜாதிக்கு மனித ஜாதி நீதி வழங்குகிற மாதிரி அனீதி வழங்கியது! நீதி தேவதையோ மனிதனை முட்டாளாக்கி மாட்டுக்கு நீதி வழங்கியது. எப்படி? நார்ப் பொருள் இலைப் பொருள் உள்ள வைக்கோலை தள்ளிவிட்ட மனித ஜாதி மலச்சிக்கல் என்ற நோய்க்கு அடிமையானது.! மாடோஅந்தத் துன்பம் இன்றி ஆரோக்கியம் பெற்றது ! சத்தில்லாத முனைமுறிந்த அரிசிச் சோற்றைத் தின்று வயிறு பெருத்து முதுமை உற்றது மனித ஜாதி. எண்ணைப் பசையும் வைட்டமின்களும் உடைய தவிட்டைத் தின்று பளபளப்பும் இளமையும் பெற்றது மாட்டு ஜாதி.



சத்துமிக்க அரிசிக் கஞ்சி மாட்டுக்கு.சக்கையாய் போக சாதம் மட்டும் மனிதனுக்கு. சுயநலம் மிக்க மனித ஜாதியின் ஒவ்வோர் அநீதியிலும் நீதி தேவதை குறுக்கிட்டு மாட்டு ஜாதிக்கு நீதி கொடுத்தது!

நீதி தேவதை யார்? சூரியன் தான் நீதி தேவதை அற ஆழி என்றும் தர்மச் சக்கரம் என்றும் 'சூரியனைத்தான் நமது நூல்கள் சிறப்பிக்கின்றன. முந்நூற்று அறுபத்தைந்து ஆரக்கால்களையுடைய தர்மச்சக்கரம் என்று மகாபாரதம் சூரியனைக் குறிப்பிடுகின்றது

**படித்ததில் பிடித்தது! கலாநிதி**




T.T.S.Brothers GmbH&Co.KG

உங்கள் வீட்டு தேவைக்கான அனைத்து மளிகை பொருட்கள்-ஆடை அணிகலன்கள் மற்றும் உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவது முதல் அனைத்து தேவைகளுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

தைப்பொங்கலை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை!
பொங்கல் வரை...

RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288

Helmholtz Str.11
46045 Oberhausen
Tel:0208 202829

Garten Str.29
48147 Münster
Tel: 0251 2301184

Johannes Str.35
53225 Bonn Beuel
Tel. 0228 40377846





# தூங்கும் முறை பற்றி சித்தர்கள் கூறும் அரிய விளக்கம்..!!!

மனிதனின் அடிப்படைத் தேவைகளில் முக்கியமான ஒன்றுதான் உறக்கம் எனும் தூக்கமாகும். இது உடலின் ஆரோக்கி யத்தைக் காப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

மனிதனின் வாழ்நாளில் மூன்றில் ஒரு பங்கு தூக்கத்தில் தான் கழிகின்றது. உடலிலுள்ள கோடிக்கணக்கான செல் களை தினமும் புதுப்பிக்கவும், உடலின் சோர்வு நீங்கி புத்துணர்வு பெறவும், உடல் வளர்ச்சி ஜகுறிப்பிட்ட வயது வரை ஸபெறவும், தூக்கம் இன்றியமையாததாக உள்ளது.

இரவில் தூங்கும் போதுதான் உடலின் வளர்ச்சி அதிகரிக்கின்றது என்று இன்றைய அறிவியலாளர்கள் கூறுகின்றனர்.

தூங்குவதைப் பற்றியும் அதில் உள்ள அறிவியல் உண்மைகளையும் சித்தர் பெருமக்கள் தங்கள் நூல்களில் வடித்துள்ளனர்.

தூங்குவதற்கு ஏற்ற காலம் இரவு மட்டும் தான் என்பது இயற்கையின் விதிகளில் ஒன்று. பூமியின் தட்ப வெட்ப நிலைகள் மாறி இரவில் குளிர்ச்சி பொருந்திய சூழ்நிலைதான் தூங்குவதற்கு ஏற்ற காலமாகும். ஆனால் இன்றைய நாகரீக உலகில் இணையதள நிறுவனங்களில் வேலை பார்க்கும் பலரும் இரவில் கண் விழித்து பகலில் தூங்குகின்றனர். இதனால் என்ன தீமைகள் விளையும் என்பது பற்றி சித்தர் பாடல் ஒன்று.

**சித்த மயக்கஞ் செறியும் புலத்தயக்க மெத்தனுக்**
**கமைந்த மென்பவை களித்தமுற வண்டுஞ் சிலரை**
**நாயாய்ப் பன்னோய் கவ்வுமிராக் கண்டுஞ் சிலரை**
**நம்பிக் காண்**

இதன் விளக்கம் :-

இரவில் நித்திரை செய்யாதவர்களிடத்தில் புத்தி மயக்கம், தெளிவின்மை, ஐம்புலன்களில் ஜஉடலில்ஸசோர்வு, பயம், படபடப்பு, அக்னி மந்தம், செரியாமை, மலச்சிக்கல், போன்ற நோய்கள் எளிதில் பற்றும்.

வேட்டைக்குச் செல்லும் வேடருடைய நாய்கள் இரையைக் கவ்வுதல் போல் இரவில் நித்திரையில்லாதவரை பற்பல நோய்கள் கவிக் கொள்ளும்.

எந்த திசையில் தலை வைத்து படுக்க வேண்டும் என்பதை சித்தர்கள் அன்றே தெளிவாகக் கூறியுள்ளனர்.

உத்தமம் கிழக்கு, ஓங்குயிர் தெற்கு, மத்திமம் மேற்கு, மரணம் வடக்கு.

கிழக்கு திசையில் தலை வைத்து படுப்பது மிகவும் நல்லது. தெற்கு திசையில் தலை வைத்துப் படுத்தால் ஆயுள் வளரும். மேற்கு திசையில் தலை வைத்துப் படுத்தால் கனவு,அதிர்ச்சி உண்டாகும். வடக்கு திசையில் ஒரு போதும் தலை வைத்து தூங்கக் கூடாது.

இதனை விஞ்ஞான ரீதியாகவும் ஒப்புக்கொண்டுள்ளனர். வடக்கு திசையில் இருந்து வரும் காந்தசக்தி தலையில் மோதும் போது அங்குள்ள பிராண சக்தியை இழக்கும். இதனால் மூளை பாதிக்கப் படுவதுடன், இதயக் கோளாறுகள், நரம்புத்தளர்ச்சி உண்டாகும்.

மேலும் மல்லாந்து கால்களையும், கைகளையும் அகட்டி வைத்துக் கொண்டு தூங்கக் கூடாது. இதனால் இவர்களுக்குத் தேவையான ஆக்ஸிஜன் ஜபிராண வாயுஸ உடலுக்குக் கிடைக்காமல் குறட்டை உண்டாகும். குப்புறப் படுக்கக் கூடாது, தூங்கவும் கூடாது.

இடக்கை கீழாகவும், வலக்கை மேலாகவும் இருக்கும்படி கால்களை நீட்டி இடது பக்கமாக ஒருக்களித்து படுத்து தூங்கவேண்டும். இதனால் வலது மூக்கில் சுவாசம் சூரியகலையில் ஓடும். இதில் எட்டு அங்குலம் மட்டுமே சுவாசம் வெளியே செல்வதால் நீண்ட ஆயுள் வளரும். மேலும் இதனால் உடலுக்குத் தேவையான வெப்பக்காற்று அதிகரித்து பித்தநீரை அதிகரிக்கச்செய்து உண்ட உணவுகள் எளிதில் சீரணமாகும். இதயத்திற்கு சீரான பிராணவாயு கிடைத்து இதயம் பலப்படும்.

வலது பக்கம் ஒருக்களித்து படுப்பதால் இடது பக்க மூக்கின் வழியாக சந்திரகலை சுவாசம் ஓடும். இதனால் பனிரெண்டு அங்குல சுவாசம் வெளியே செல்லும். இதனால் உடலில் குளிர்ச்சி உண்டாகும். இரவில் உண்ட உணவு சீரணமாகாமல் புளித்துப் போய் விஷமாக நேரிடும். சித்தர்கள் தான் அன்று சிறந்த விஞ்ஞானிகள். அவர்கள் மெய் ஞானத்தால் உணர்ந்ததை இன்று விஞ்ஞானத்தால் உணர்கின்றான் மனிதன். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்




# ”சேர்ப்பிறைஸ் விசிட்”



கே.எஸ்.சுதாகர்

நாளாந்தம் பழகும் சில நண்பர்கள் உறவினர்களிடமிருந்து சிலவேளைகளில் சொல்லாமல் கொள்ளாமல் தொலைபேசி அழைப்புகள் நின்றுவிடுவதுண்டு. எங்காவது வெளிநாட்டுக்குப் பயணம் செய்வதற்காகவோ அல்லது தங்கள் பிள்ளைகளுக்கு திருமணம் பேசும் தருணங்களாகவோ அல்லது இன்னும் ஏதாவது பூடகமான விஷயங்களாகவோ அவை அமையலாம். சில பொழுதுகளில் எல்லாவற்றையும் முடித்துக் கொண்டு ஒன்றுமே நடவாதது போல முன் வந்து நிற்பார்கள்.

அப்படித்தான் ஒருநாள் இராசலிங்கமும் அவர் மனைவி சுலோசனாவும் திடீரென்று, நினையாப் பிரகாரமாக சிறீதரனின் வீட்டிற்கு தரிசனம் கொடுத்தார்கள். சிறீதரனின் மனைவி சுகந்தினி முகத்தை “உம்“மென்று வைத்துக் கொண்டு அவர்களை வரவேற்றாள்.

”கனகாலமா வரேல்லைத்தானே! அதுதான் சும்மா ஒருக்கா வந்திட்டுப் போவம் எண்டு” என்று “சும்மா“வைச் சற்று அழுத்திச் சொன்னான் இராசலிங்கம். தொடர்ந்து,

”அப்பிடியெண்டில்லை. இனி ஈஸ்ரேண் சபேப்பிலையிருந்து வெஸ்டேர்ண் சபேப்பிற்கு வாறதுக்கு பத்துப் பதினைஞ்சு டொலர் பெற்றோலு மெல்லே செலவாகுது” காசைக் காரணம் காட்டினாள் சுலோசனா.

”நாங்கள் நினைச்சோம்... உங்களிலை ஆரோ ஒருத்தருக்கு வேலை பறிபோட்டுதோ எண்டு” உதட்டுக்குள் சிரித்தாள் சுகந்தினி.

அதன் பிறகு கோபம் நீக்கி சம்பிரதாயமான உரையாடல், சுகம் விசாரிப்பு, தேநீர் விருந்துபசாரம். மேற்கொண்டு நேரம் நகராத வேளையில் சுலோசனா இராசலிங்கத்தைப் பார்த்து கண்ணை வெட்டினாள். இராசலிங்கம் உதட்டுக்குள் சிரிப்பொன்றைத் தவழவிட்டார். ஏதோவொன்றை முடிச்சவிழ்க்கும் முஸ்தீபில் செருமினார்.

”உங்களுக்கொரு சேர்ப்பிறைஸ் விஷயமொண்டு சொல்லவேணும். மவுன்ற் டண்டினோங்கிலை (*Mount Dandenong)* நாங்கள் ஒரு புது வீடொன்று கட்டி இருக்கிறம்” சுப்பர்மார்க்கெட்டில் அரிசி சீனி வாங்கியது போலச் சொன்னார் இராசலிங்கம்.

”எங்களுக்கும் காத்துவாக்கில உந்த விஷயம் கசிந்தது” என்றாள் ஆச்சரியப்படாமல் சுகந்தினி.

”இஞ்சாருங்கோ! நாங்கள் காதும் காதும் வச்சமாதிரித்தானே கட்டினனாங்கள். என்ன மாதிரி இவைக்கு” சொல்லி முடிப்பதற்குள்,

”தண்ணிக்கு அடியிலை “காஸ்“ விட்டாலும் மேலுக்கு வரத்தானே செய்யும்” என்றாள் சுகந்தினி.

”அதில்லை. எங்களுக்கு ஒண்டைச் சொல்லிப் போட்டு செய்தால் பெரும்பாலும் சரிவாறேல்லை. அதுதான் உங்களுக்கும் சொல்லேல்லை. தயவு செய்து குறை நினைச்சுப் போடாதையுங்கோ”

”மலையிலை அந்தரத்திலை நிக்கிற மாதிரி கட்டியிருக்கிறியள் எண்டு கேள்விப்பட்டோம்” சுகந்தினி சொல்ல சுலோசனா பூரித்துப் போனாள்.

”அதிலை ஒரு சங்கதி இருக்குப் சுகந்தினி. போன வருஷம் குவீன்ஸ்லண்டிலை *(Queensland)* நடந்த வெள்ளைப் பெருக்கிலை எங்கடை அண்ணையின்ரை வீட்டை வெள்ளம் அள்ளிக் கொண்டு போட்டுது. லட்சங்களைக் கொட்டிச் சிந்தி ஆற்றோரமா வியூ பாத்துக் கட்டின வீடு அது. அப்படியொரு அனர்த்தம் எங்களுக்கும் வரப்படாதெண்டுதான் மலையிலை கட்டியிருக்கிறம்.”

”நாங்களும் ஒரு புது வீடு வாங்கியிருக்கிறம்” சிறீதரன் கொடுத்த திடீர் அதிர்ச்சியில் முகம் கறுத்து உறைந்து போனார்கள் இராசலிங்கமும் சுலோசனாவும்.

”எவ்வளவுக்கு வாங்கினியள்?” என்று பாய்ந்தாள் சுலோசனா.

”நீங்கள் எவ்வளவுக்கு கட்டினதெண்டு முதலிலை சொல்லுங்கோ” விடவில்லை சுகந்தினி.

”ஆறு.”

”எங்கடை எட்டு.”

”அப்பாடா!” பெருமூச்சு விட்டாள் சுலோசனா.

அடுத்த கேள்விக்கணையைத் தொடுப்பதற்கு முன் இராசலிங்கத்தைப் பார்த்து திரும்பவும் கண் சிமிட்டினாள் சுலோசனா. இங்கே ஒவ்வொரு கண் அசைவிற்கும் ஒவ்வொரு அர்த்தம் இருக்கின்றது. அது அது அவரவர்க்குத்தான் விளங்கும்.

”நீங்கள் எங்கை வாங்கியிருக்கிறியள்?”

”இதே இடத்திலைதான். நம்பர் 18. த குளோஸ். ஆனா அதை இப்ப நாங்கள் வாடகைக்கு விட்டிருக்கிறம். அந்தப் பெரிய வீட்டிலை நாங்கள் குந்தியிருக்க விசரா எங்களுக்கு. நல்ல கொழுத்த பிஸ்னஸ் ஆளாப் பாத்து குடுத்திட்டம். அவர் எங்கடை மோட்கேஜ்ஜைக் கட்டிக் கொண்டிருக்கிறார்.”

”என்ன ஒரு சத்தத்தையும் காணேல்லை” சிறீதரன் இராசலிங்கத்தைப் பார்த்துக் கேட்டான். அந்த நேரத்தில் அவர்கள் சொன்ன முகவரியை வாகாகச் சுருட்டி மூளைக்குள் பதிய வைத்துக் கொண்டிருந்தான் இராசலிங்கம். பின்னர் அவசர அவசரமாக சிறீதரனின் வீட்டிலிருந்து விடை பெற்றுக் கொண்டார்கள். நேரே அந்த முகவரியை நோக்கிக் கார் பறந்தது.

அது அழகானதொரு மான்சன் ஹவுஸ் *(Mansion house).* முன்னே ஆளளவு உயரத்திற்கு தண்ணீர்க்குடத்தை ஏந்தியபடி நிர்வாண கோலத்தில் அழகான ஒரு பெண் சிலை. சரிந்த குடத்திலிருந்து தண்ணீர் சலசலத்தோடியது. அழகான லாண்ட்ஸ்கேப் *(land scaping).* இரவில் மின்னி அழகு காட்டுவதற்காக தங்களைத் தயார் செய்து கொண்டிருக்கும் சோலர் விளக்குகள் (*Solar lights).* இரத்தினக்கற்கள் போல பளபளத்து நிறப்பிரிக்கை காட்டும் குறுணிக்கற்கள்.

வேகத்தைக் குறைத்து காரை நிறுத்துவதற்கிடையில் கதவைத் திறந்து விழுந்து காலில் அடிபட்டுக் கொண்டாள் சுலோசனா.

”இஞ்சை ஐஞ்சு கராஜ் இருக்கு!” என்று கத்தியபடியே உள்ளே ஓடினாள். சுலோசனாவின் சத்தத்தைக் கேட்டு ஜன்னலிற்குள்ளால் ஒரு ரீன் ஏஜ் பெண் எட்டிப் பார்த்தாள்.

”பிள்ளையள் மூண்டு, அவையள் இரண்டு. ஐஞ்சு பேருக்கு ஐஞ்சு கராஜ்” என்று முணுமுணுத்தான் இராசலிங்கம்.

திரும்பவும் கார் நிற்கும் இடத்திற்கு பதகளிப்பட்டு வந்து சேர்ந்தாள் சுலோசனா.

”கமராவைத் தாருங்கோ படம் எடுக்க வேணும். நீங்களும் இருக்கிறியளே...! ஒரு ஓட்டை வீட்டைக் கட்டித் தந்து போட்டு... இருங்கோ சளுக்கப் பணிய உதிலை” கமராவை வாங்கிக் கொண்ட சுலோசனா மரம் செடி கொடி என அங்கிருந்த எல்லாவற்றையும் படம் பிடித்தாள். சுலோசனாவின் குணம் அறிந்து ஒடுங்கிப் போயிருந்த இராசலிங்கம் காரை விட்டு இறங்கவில்லை.

வீட்டிற்குள்ளிருந்து தொந்தி முதலிலும் உருவம் பின்னருமாக புஸ் புஸ் என்று இரைந்தபடி ஒரு மனிதர் வெளியே வந்தார்.

*"Who are you? What are you doing here?"*

என்ரை பிரண்டின்ரை வீட்டிலை றென்றுக்கு இருந்து கொண்டு என்னை ஆரெண்டு கேட்கிறான் - தமிழில் கறுவிக் கொண்டாள் சுலோசனா.

*"I am Suganthinii's friend. Do you know Suganthini? Suganthini is Sri's wife, Owner of this house!"* என்றாள் சுலோசனா.

*"What a nonsense you are talking..."* கத்தத் தொடங்கினான் அவன். பிரச்சனை உச்சத்திற்குப் போவது கண்ட இராசலிங்கம் காரை விட்டு இறங்கினான். *"Sorry... Extremely sorry"* என்று அந்த மனிதனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். சுலோசனாவை இழுத்துக் கொண்டு காருக்குள் ஏறினான்.

தொடர்ச்சி 14ம் பக்கம்





Kaneen electronics

www.kaneenelectronics.de

புதியதோர் தொழில் நுட்பம்!!!!! புதியதோர் வாய்ப்பு!!.

Full HD,SDமுறையில் அனைத்து நிகழ்வுகளையும் Video-Photo செய்யவும்,சிறந்த முறையில் படத்தொகுப்பு செய்யப்பட்டு, Blue Ray DVD பதிவுக்கும்அனைத்து நிகழ்வுகளை விழா நடக்கும் இடத்தில் இருந்து செய்மதிமூலம் உலகெங்கும் நேரடி ஒளிபரப்பு செய்வதற்கும் மற்றும் சகல sat,Receiver,Camera-Alam கருவிகள் கொள்வனவு செய்வதற்கும் பொருத்துவதற்கும் இவை அனைத்தும் மாதாந்த தவணை முறையில் வங்கியூடாக பெற்றுக் கொள்வதற்கும்

Schevenhoferweg-24 42111 Wuppertal
Tel: 02053 423 740 Fax: 2053 423 741
Mobil: 0172 2931266- info@ kaneenelectronics.de

## சேப்பிறைஸ் விசிட்...

13ம் பக்கத் தொடர்ச்சி....

"சுலோ உனக்கொண்டு புரிய வேணும். உம் முடைய பிரண்டின்ரை வீடெண்டாலும், ஆர் வீட்டிலை றென்றுக்கு இருக்கினமோ அவைதான் வீட்டுக் பொறுப்பு. சிறீ நினைச்சாக்கூடி தன்ரை வீட்டை உடனடியாக வந்து பார்க்க முடியாது. இதுதான் அவுஸ்திரேலியாச் சட்டம். வீட்டைப் பாக்கிறதெண்டா, 24 மணித்தியால நேர அவகாசம் அவைக்குக் குடுக்க வேணும்."

அவர்கள் அந்த இடத்தை விட்டு அவசரமாக வெளியேறினார்கள். ஐந்து கிலோ மீட்டர்கள் தூரம் ஓடியிருக்கமாட்டார்கள், ஒரு பொலிஸ் கார் அவர்களைப் பின் தொடர்ந்தது.

"பின்னாலை ஒரு பொலிஸ்காரன் எங்களைத் தொடர்ந்து வாறான்" என்றாள் சுலோசனா.

"நான் ஐம்பது ஓடவேண்டிய இடத்திலை ஐம்பதிலை ஓடுறன், அறுபது ஓடவேண்டிய இடத்திலை அறுபதிலை போறன். பிறகேன் உவனுக்குப் பயப்பிட வேணும்"

பொலிஸ்காரன் சமிஞ்சை விளக்கைப் போடுவதும் பின்னர் சைரன் அடிப்பதுமாக அவர்களைக் கலைத்தான். இராசலிங்கம் எதுவுமே நடவாதது போல தொடர்ந்தும் நிதானமாக காரைச் செலுத்திக் கொண்டிருந்தான். மேலும் இரண்டு கிலோமீட்டர்கள் தூரம் இந்த விளையாட்டுத் தொடர்ந்தது.

பொறுமையிழந்த பொலிஸ்காரன் வேகத்தை அதிகரித்து ஒரு வெட்டு வெட்டி தனது காரை அவர்களின் காரிற்கு முன்பாக நிறுத்தினான். அதற்குள் இன்னுமொரு பொலிஸ்காரன் ஒளிந்து இருந்தான். இராசலிங்கம் ஐந்தும் கெட்டு அறிவும் கெட்டு காரை நிறுத்தினான். இராசலிங்கத்தை காரை விட்டு இறங்க வேண்டாமென்று சுலோசனா கண்டிஷன் போட்டாள். இராசலிங்கம் லைசென்சை எடுத்து பொலிஸ்காரனிடம் நீட்டினான். அவன் அதை வாங்கி அதிலுள்ள படத்தையும் இராசலிங் கத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தான்.

"நீங்கள் சற்று நேரத்திற்கு முன்னர் ஒரு வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்துள்ளீர்கள். அங்கு படம் எடுத்துள்ளீர்கள். உங்களை களவெடுக்கும் கும்பலைச் சேர்ந்தவர்கள் என்று சந்தேகப் படுகின்றோம்" என்றான் பொலிஸ்காரன்.

"அது எங்களது நண்பனின் வீடு. வேண்டுமென்றால் அவர்களைக் கேட்டுப் பாருங்கள்" - இராசலிங்கம்.

"அப்படியில்லை... அது அங்கு குடியிருப்ப வர்களின் சொந்த வீடு" - பொலிஸ்காரன்.

"இந்தாருங்கள் எனது நண்பனின் ரெலிபோன் நம்பர்" பொலிஸ்காரனிடம் ரெலிபோன் நம்பரைக் கொடுத்தான் இராசலிங்கம்.

பொலிஸ்காரன் தனது மொபைல்போனை எடுத்தான். "ஸ்பீக்கரில் போடுகின்றேன். அமைதி யாகக் கேளுங்கள்" என்று சொல்லிக் கொண்டே சிறீதரனுடன் தொடர்பு கொண்டான். சிறீதரன் அது தனது வீடில்லை என்று சொல்லத் தொடங்கியதும் சுலோசனா "பொய் சொல்லுகின்றார்கள்... பொய்... நம்பாதீர்கள்" என்று கத்தத் தொடங்கினாள். பொலிஸ்காரன் தனது ரெலிபோனை இராசலிங் கத்திடம் கொடுத்து சிறீதரனிடம் கதைக்கச் சொன்னான். "நாங்கள் உங்களுக்கு சும்மா பகிடிக்காகச் சொன்னனாங்கள். நீங்களும் சும்மா குழந்தைப்பிள்ளை மாதிரி நம்பி விட்டீர்கள். ஏன் இப்ப என்ன நடந்து விட்டது?" என்று வடிவேலு பாணியில் சொன்னான் சிறீதரன்.

பொலிஸ்காரன் ரெலிபோனை வைப்பதற்குள் சுலோசனா முந்திக் கொண்டாள், "அதுதானே பாத்தன். உவங்களாவது வீடு வாங்கிறதாவது! முதலிலை இருக்கிற வீட்டின்ரை ஜன்னல் கதவு களை திறந்து மூடப் பழக வேணும். வீடு கிடக்கிறகிடை."

பொலிஸ்காரன் அவர்களிடமிருந்த கமராவை வாங்கி மெமறிக் கார்டை(memory card) எடுத்துக் கொண்டான். "நாளைக்கு சண்சைன் பொலிஸ் ஸ்ரேசனுக்கு நீங்கள் இருவரும் வந்துவிட்டுப் போங்கள்" என்றான். "உவன் இன்னுமொரு பதினைஞ்சு டொலருக்கு எனக்கு அழிவு வைக்கப் போறான்" என்றாள் சுலோசனா."சுலோ... அவன் பொலிஸ்காரன் இல்லையப்பா! என்னை, உனக்கு ஆரெண்டு அடையாளம் காட்டின தெய்வம்!!" என்றான் இராசலிங்கம்.



## நட்பை நேசிப்போம்!

நட்பின் மேன்மையைச் சொல்ல, தனது நண்பர்களில் ஒருவரான கலைப்புலி தாணுவின் முதல் படம் "யார்?" வெற்றி விழாவில் ரஜினி சொன்ன குட்டிக் கதை இது. (இந்த விழாவுக்காக மும்பையில் தனது இந்திப் பட ஷூட்டிங்கை ரத்து செய்துவிட்டு வந்ததாக தாணு சொல்லி நெகிழ்ந்தார்... ஆண்டு 1985.)

ரஜினி சொன்ன கதைகள்: நல்ல நண்பர்களைச் சேர்த்துக்கொள்ளுங்கள்!

விழாவில் ரஜினி சொன்ன கதை இது:

ஒரு பணக்காரனுக்கு ஏழை நண்பன் ஒருவன் இருந்தான். ஒரு சமயம் பணக்கார நண்பனுக்கு கொஞ்சம் பணத்தட்டுபாடு வந்துடுச்சி.

அந்த நேரத்துல அங்கு வந்த ஏழை நண்பன், எரிச்சலும், கவலையோடும் இருக்கும் தன் பணக்கார நண்பனைப் பார்த்து எப்பிடி டா இருக்கே என்று வழக்கம் போல கேட்டான்.

எரிச்சலான மனநிலையில் இருந்த பணக்கார நண்பன், "எனக்கு உடனே இருபது லட்சம் ரூபாய் தேவை. உன்னால் முடியுமா?" என்று கோபமாக கேட்டு விட்டு தன் அறைக்குள் சென்றான் .

அவன் பின்னாடியே போன ஏழை நண்பன், "அரை மணி நேரத்தில் பணம் கிடைத்தால் பரவாயில்லையா?" என்று கேட்டான்.

பணக்கார நண்பனுக்கு ஒரே அதிர்ச்சி.

ஏழை நண்பனை ஏளனமாக பார்த்தான்.

அரைமணி நேரத்தில் பணம் வந்தது.

பணக்கார நண்பனுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

பணத்தை குடுத்தவாறு ஏழை நண்பன் சொன்னான்:

நீ எப்போ பார்த்தாலும் அதிகமா பணத்தைத்தான் சேர்த்தாய் நண்பா.. நல்ல நண்பர்களை சேர்க்க மறந்துவிட்டாய். நான் அதைச் சம்பாதித்து கொண்டேன்டா!", என்றான்.

இருவரும் கட்டித் தழுவிக் கொண்டார்கள்.

இந்த உலகத்திலே எதை சேர்ப்பதைக் காட்டிலும் உண்மையான நண்பர்களைச் சேர்ப்பதுதான் உயிருக்கு பலம் தரும்... ஆகவே நட்பையும் நேசிப்போம்!"

### ஓராண்டு நினைவு அஞ்சலி



**அமரர் திருமதி பார்வதி அம்மா செல்லத்துரை**

மண்ணின் மடியில் 06.03.1930-விண்ணின் அடியில் 18.12.2012


ஏழாலையைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்ட திருமதி பார்வதி அம்மா செல்லத்துரை அவர்கள் யேர்மனியில் 18.12.2012 இல் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார்
பாசமிகு அன்னையாய்
பழகுவதற்கினிய மாமியாய்
பேரன்பு மிக்க பேத்தியாய்
வாழ்ந்து அமரரான அன்னையே
உங்கள் நினைவோடு வாழ்கின்றோம்.

பிள்ளைகள் மருமக்கள் பேரப்பிள்ளைகள்.

தகவல்:கனேஷ்
Asia Bazar Mönchengladbach
Tel:02161 20 83 03 Tel: 02431-6573


விநாயகர் துணை






ஓம் சக்தி ஜோதிட நிலையம்

Pandit:JAGANATH

OM SHAKIHI JOTHIDA NILAYAM

ஜேர்மனி வாழ் தமிழ்மக்களுக்கு ஓர் நல்ல செய்தி
அகில உலக பிரசித்தி பெற்ற இந்திய ஜோதிடர் பண்டிற் ஜெகநாத் அவர்களின் வருகை



வாழ்வு மேன் மேலும் வளம்பெறவும் தடையாகவுள்ள திருமணங்கள் - காதல் விவகாரங்கள் வியாபார வெற்றியை தரக்கூடிய பலனையும், மற்றும் குடும்பத்தினரிடையேயுள்ள கருத்து முரன்பாடுகளை நீக்கியும், குழந்தை செல்வங்கள் தடைப்பெறும் சர்ப்பதோஷம் ராகு கேது தோஷ நிவர்த்தி பொருட்டு பரிகாரங்களையும் வழங்கியும், வேலைவாய்ப்பு நோய் நொடி, பிணி, கடன் தொல்லைகளில் இருந்து விலக்கி வெற்றிபெறவும், பணம் பொருள் வீடுவாசல் பெற்று வாழ்வில் பயன்பெற நாடுங்கள் ஜோதிடர் பண்டிற் ஜெகநாத்திடம். உங்கள்வசம் ஜனன ஜாதக குறிப்பில்லாவிடின் அவற்றினை கணித்து பலன் சொல்லப்படும் இல்லையேல் கை ரேகையின் மூலமும் பலன் சொல்லப்படும். தொடர்புகளுக்கு நாடவேண்டிய தொலைபேசி இலக்கங்கள்:-

+49(0) 201 999 79 882 Mobile + 49(0)1521 666 1106

Am 09.00 to 08 .00 Pm

Heintzmannstraß-26
(Altendorfer Straße)
45143 Essen
Germany

# பியர் போத்தலில் ஆடும் சிவபெருமானின் படம்!








பியர் போத்தலில் நடனம் ஆடும் சிவபெருமான் - அமெரிக்க நிறுவனத்தின் புதிய தயாரிப்பு

இந்துக் கடவுள்களுக்கு பலகரங்கள் கடவுளின் பலத்தையும் செயற்பாட்டையும் விளக்கக் குறியீட்டு வடிவங்களாக அமைந்து இருப்பதை, வியாபார ஸ்தாபனங்கள் அதனை தங்கள் வியாபரத்துக்கு ஏற்றவகையில் அக்குறியீடுகளை உபயோகிக்கத் தொடங்கி உள்ளன. இன்று நேற்று அல்ல பலகாலமாக நடைபெற்று வருவம் ஒன்றே இத் திருவிளையாடல்கள்.

பராக் ஒபாமாவின் சக்தியைக்காட்டவும், அவருக்கு பலகரங்கள் இருப்பது போன்று இந்துக்கடவுளின் உருவத்தை இணைத்து அன்று படங்கள் வெளியாகின. அதே போன்று விமானப் பணிப்பெண் ஒரே சமயத்தில் பல வேலைகள் செய்யும் அழகி என்பதைக்காட்ட சரஸ்வதி போல் பல கரங்களுடன் படங்கள் வந்தன.

நோக்கங்கள் பலவாக இருந்தாலும் மக்கள் உடன் திரும்பிப்பார்க்கும் வண்ணம் விளம்பரங்கள் இருக்க, இந்த இந்துக்கடவுள்கள் அவர்களுக்கு கரம் கொடுக்கிறன. இந்த வகையில் ஆடும் சிவனையும் பியர்போத்தலில் போட்டு, அதற்கு சிவா என்று பெயரும் வைத்து ஆடவைத்துளனர். உடுக்குவைத்திருக்கும் கரங்களில் ஊற்றிய பியர்கிளாசுடன் ஆடும் சிவநடனம்! இதோ.....

பீருக்கு இந்து கடவுளான சிவனின் பெயரை வைத்ததுடன் அவரது புகைப்படத்தை போத்தலில் ஒட்டியுள்ளதற்கு உலக இந்துக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க, அவுஸ்திரேலிய நிறுவனங்கள் தங்களின் பீயர் பாட்டில்களில் இந்து கடவுள்களின் புகைப்படங்களை போட்டு சர்ச்சையில் சிக்கின. பின்னர் அதற்காக மன்னிப்பும் கேட்டுக் கொண்டனர். இந்நிலையில் அமெரிக்காவின் வட கரோலினாவில் உள்ள ஆஷ்வில் ப்ரூயிங் கம்பெனி புது சர்ச்சையில் சிக்கியுள்ளது. ஆஷ்வில் ப்ரூயிங் கம்பெனி தயாரித்துள்ள பீர் ஒன்றுக்கு இந்து கடவுளான சிவனின் பெயரை வைத்து சிவா பீர் என்ற பெயரில் விற்பனை செய்கிறது.

பீருக்கு சிவனின் பெயரை வைத்து அவரின் புகைப்படத்தை ஒட்டியுள்ளதற்கு இந்துக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இதுகுறித்து இந்து அரசியல் தலைவர் ராஜன் ஜெட் கூறுகையில், இந்து மதத்தில் சிவன் போற்றப்படும் தெய்வம். அவரை கோவில்களிலும், பூஜை அறைகளிலும் வைத்து பூஜிக்க வேண்டுமே தவிர வியாபார பேராசையால் அவரது பெயரையும், படத்தையும் பீருக்கு பயன்படுத்தக் கூடாது என்று கூறியுள்ளார்.

# இலங்கை மக்கள் தொகையில் 31 லட்சம் பேர் தமிழர்கள்!

## சும்மா! தெரிந்துகொள்ளுங்களேன்!!

கொழும்பு: இலங்கையின் மக்கள் தொகையில் 31 லட்சத்து 13 ஆயிரத்து 247 பேர் தமிழர்கள் என மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரங்கள் துறை தெரிவித்துள்ளது.

இலங்கையில் மக்கள் தொகை கணக்கெடுப்பு பணி அண்மையில் தொடங்கியது. 2011 - 2012ம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட மக்கள் தொகை மதிப்பீட்டிற்காக 173 கோடி ரூபாய் செலவாகியுள்ளது. கணக்கெடுப்பு பணியில் 99 ஆயிரம் பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பிரதேச செயலகங்களும், புள்ளி விபரத் துறையும் இணைந்து மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளன.

இலங்கையின் மொத்த மக்கள் தொகை 2 கோடியே இரண்டு லட்சத்து 63,723 எனத் கூறப்பட்டுள்ளது

இதில் ஒரு கோடியே 51 லட்சத்து 73,820 பேர் சிங்களர்கள். 31 லட்சத்து 13 ஆயிரத்து 247 பேர் தமிழர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

18 லட்சத்து 69,820 பேர் சோனகர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 33,061 பேர் பர்கர் இனத்தவர்கள். 40,189 பேர் மலே இனத்தவர்கள்.

பௌத்தர்களின் எண்ணிக்கை ஒரு கோடிய 42 லட்சத்து 21 ஆயிரத்து 844 ஆகும். இந்துக்களின் எண்ணிக்கை 25 லட்சத்து 54 ஆயிரத்து 606 ஆகும்.

முஸ்லிம்களின் எண்ணிக்கை 19 லட்சத்து 67 ஆயிரத்து 227 ஆகும் என புள்ளி விபரவியல் ஆணையம் அறிவித்துள்ளது.

ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை 15 லட்சத்து 9 ஆயிரத்து 606 என அறிவித்துள்ளது.






வாழ்க்கையின் அடிப்படை ஆனந்தம் குடும்பங்களில் தான் கட்டியெழுப்பப் பட வேண்டும். வாழ்வின் முதல் சுவடு குடும்பங்களில் தான் துவங்குகிறது. முற்றத்தில் துவங்கி, முற்றத்தில் முடியும் வாழ்க்கையே குடும்ப வாழ்க்கை. அந்த வாழ்க்கை தான் வெற்றியாளர்களை உருவாக்குகிறது. அந்த வாழ்க்கை தான் தலைவர்களை உருவாக்குகிறது. அந்த வாழ்க்கை தான் தலைமுறைகளையே உருவாக்குகிறது.

குடும்ப வாழ்க்கை தனது அர்த்தத்தை இழக்கும் போது குடும்பங்கள் பலவீனமடைகின்றன. குடும்பங்கள் பலவீனமடையும் போது சமூகம் பலவீனமடைகிறது. சமூகங்கள் பலவீனமடையும் போது தேசம் பலவீனமடைகிறது. அதே நேரம், குடும்பம் ஆனந்தமாகவும், மகிழ்ச்சியாகவும், நிம்மதியாகவும் இருக்கும் போது அந்த வாசனை வீதிகளிலும், சமூகத்திலும், தேசத்திலும் வளர்ச்சிக் காற்றை வாரி இறைக்கிறது. எனவே குடும்பத்தின் வெற்றி என்பது தனி மனித வெற்றியல்ல, அது ஒரு சமூக வெற்றி !

குடும்பங்களைக் கட்டியெழுப்புவோம். இன்றைய உலகம் அவசரங்களின் உலகம். அவர்களுக்கு திருமண வாசனை அகலும் முன் மணமுறிவு சிந்தனைகள் முளைவிடுகின்றன. புரிதலும், அன்பு புரிதலும் இல்லாமையே அதன் காரணம். குடும்ப வாழ்க்கை தோல்வியடைந்தால் வாழ்க்கை தனது ஆனந்தத்தையும், அர்த்தத்தையும் இழந்து விடும். வாழ்வின் அற்புத தருணங்கள் நிலைகுலைந்துபோய்விடும். எனவே குடும்பங்களைக் கட்டியெழுப்புவோம், வலுவாக, இனிமையாக. அன்பின்றி அமையாது குடும்பம். இந்தத் தொடரில் குடும்ப உறவுகளைக் கட்டியெழுப்ப என்னென்ன செய்யலாம் என்பதை அலசுவோம், வாருங்கள்.

அன்புடன்
சேவியர்

## கணவன் , மனைவி மற்றும் சில ஆலோசனைகள்.

நேரம் !!!! நம்பினால் நம்புங்கள், கணவன் மனைவியரிடையே உள்ள பிரச்சினைகளின் மையம் இந்த விஷயம் தான். ”எனக்காக அவரு டைம் ஸ்பென்ட் பண்ண மாட்டேங்கறாரு” !
ஆண்களுடைய விருப்பங்களும் பெண்களுடைய விருப்பங்களும் தனித்தனியானவை. ஆண்களுக்கு கிரிக்கெட் மோகம் இருக்கும் போது, பெண்களுக்கு சீரியல் மோகம் இருக்கும். ஆண்கள் தூங்கி ஓய்வெடுக்க விரும்பும் போது பெண்கள் பேசிக்கொண்டிருக்க விரும்புவார்கள். ஆண்களுக்கு ஷாப்பிங் அலர்ஜியாய் இருக்கும். பெண்களுக்கோ அது தான் எனர்ஜியாய் இருக்கும். இப்படி மாறி மாறி இருக்கின்ற ரசனைகள் ஒரு கூரையின் கீழ் வந்து சேர்வது தானே குடும்பம் ! இந்த இடத்தில் ரசனைகள் முட்டிக் கொள்ளாமல் எப்படி இணைந்து பயணிக்கின்றன என்பது தான் கவனிக்க வேண்டிய விஷயம்.

“அவருக்கென்ன, ஆபீஸே கதின்னு கட்டிகிட்டு அழுவாரு” என மனைவி புலம்பினால் உடனே எகிறிக் குதிக்காதீங்க. ஒரு நிமிடம் அப்படியே நின்று நிதானித்துப் பாருங்கள். உண்மையில் எனது நேரத்தில் எத்தனை சதவீதம் வேலைக்காய் அல்லது வேலை சார்ந்த விஷயங்களுக்காய் செலவிடுகிறேன். அந்தப் பட்டியல் உண்மையானதாய் இருக்கணும். நீங்க வீட்டில் உட்கார்ந்து செல்போனில் ரெண்டு மணி நேரம் ஆபீஸ் விஷயங்களை அரட்டையடிக்கிறது கூட இந்த பட்டியல்ல தான் வரணும். !

இப்போ அப்படியே மனைவியர் ஒரு நிமிஷம் யோசிங்க. உங்களுடைய நேரத்தில் கணவனுக்காக ஸ்பெஷலாய் நீங்கள் ஒதுக்கும் நேரம் எவ்வளவு ? சீரியல் பார்ப்பது, வீட்டு வேலைகளில் ஈடுபடுவது, குழந்தைகளைக் கவனிப்பது எனும் விஷயங்களைத் தாண்டியும் நீங்கள் கணவனோடு நேரம் செலவிடுகிறீர்களா என்பது ஒரு குட்டிக் கேள்வி.
எல்லாவற்றையும் விட முக்கியமான விஷயம் ஒன்றுண்டு ! செலவிடும் நேரம் ”குவாலிடி டைம்” ஆக இருக்க வேண்டும். அரை மணி நேரம் ரெண்டு பேரும் பேச உக்கார்ந்து குற்றம் சொல்ல ஆரம்பித்தால் எல்லாம் போச்சு. கிடைக்கிற அந்த அரை மணி நேரத்தை எப்படி ஒரு அற்புத நேரமாய் செலவிடுகிறீர்கள் என்பதில் ரொம்பவே கவனமாய் இருங்கள். ஒரு ஐந்து நிமிட உரையாடல் கூட உங்களுடைய ஒரு நாளை ஆனந்தமாக வைத்திருக்க முடியும். ஒரு நிமிட சண்டை கூட உங்களுடைய ஒரு வார கால நிம்மதியை புதைகுழிக்குள் போட்டு மிதிக்கவும் முடியும்.

கணவனும் மனைவியும் மாறி மாறிக் குற்றம் சொல்லத் தொடங்கினால், தோற்றுப் போவது கணவனுமல்ல, மனைவியுமல்ல, தாம்பத்யம் தான். ஒரு ஸ்பெஷல் நேரத்துக்காக ஒரு சீரியலை கட் செய்வதோ, ஐ.பி.எல் மேட்சை ஆ.:.ப் பண்ணி வைப்பதோ தாம்பத்யத்தைத் தழைக்க வைக்கும் !
ரெண்டு பேருக்குமே ஒரு குறிப்பிட்ட நேரம் ஃபிரியா இருக்க வாய்ப்பு இல்லாத பட்சத்தில் ஒருவர் அட்ஜஸ்ட் செய்து கொள்வது நல்ல பழக்கம். அது ஏதோ ஒரு தியாகம் மாதிரி, ”உனக்காக என் வேலையை விட்டுட்டு வந்திருக்கேன். இப்போ பேசு” என சொன்னால் எல்லாம் போச்சு. விட்டுக் கொடுத்தலின் முக்கிய அம்சமே, தான் விட்டுக் கொடுத்தது அடுத்த நபருக்குத் தெரியாமல் இருப்பது தான். அதில் தான் உண்மையான அன்பு ஒளிந்து இருக்கிறது !

அதை விட்டு விட்டு, “நான் பிரியா இருக்கும்போ நீ பிஸியாயிடறே, நான் பிஸியா இருக்கும்போ நீ ஃபிரீ ஆயிடறே” அப்புறம் எப்போ பேசறதாம் ? என புலம்புவதிலும் அர்த்தம் இல்லை. கணவன் மனைவி இணைந்து அதிக நேரத்தைச் செலவிட்டால் அந்த குடும்பங்கள் ஆரோக்கியமாக இருக்கும் என்பது குடும்ப இயலின் பால பாடம் ! அத்தகைய தம்பதியருக்கு வருகின்ற சிக்கல்களெல்லாம் விரைவிலேயே மறைந்து விடுகின்றன. சந்தேகம் இருந்தால் உங்கள் தாத்தா, பாட்டிகளிடம் கேட்டுப் பாருங்கள். எப்போதும் சுற்றிச் சுற்றி வரும் அன்யோன்யமும், சேர்ந்தே ஊட்டி, உண்டு, சிரித்துக் களிக்கும் மாலைப் பொழுதுகளும் தங்களையறியாமலேயே குடும்ப வாழ்க்கையை எத்தனை ஆரோக்கியப் படுத்தியிருக்கின்றன என்பதை !
கணவன் மனைவி சேர்ந்து செலவிட எப்படி டைம் கண்டு பிடிப்பது ? அல்லது நேரத்தை எப்படி உருவாக்குவது ? அதற்கு சில வழி முறைகள் உண்டு.

1. இருவருக்குமே பிடித்தமான ஒரு பொதுவான ஹாபி, அல்லது விருப்பத்தை வைத்துக் கொள்ளுங்கள். சேர்ந்து நேரம் செலவிட இது ஒரு அற்புதமான வழி. அது விடிகாலை ஜாகிங் ஆனாலும் சரி, தோட்டத்தைப் பராமரித்தல் ஆனாலும் சரி, அல்லது இசை, நடனம் எதுவானாலும் சரி, இணைந்தே பயணிக்கும் ஒரு ஹாபி இருவரையும் வெகுவாக இணைக்கும். சேர்ந்து செலவிடும் நேரத்தை உருவாக்கிக் கொடுக்கும் !
2. ஏதோ ஒரு குறிப்பிட்ட நேரத்தை இருவரும் பேசுவதற்காய் ஒதுக்குங்கள். அது காலையில் கா.:.பி போடும் நேரமானாலும் சரி, மாலையில் ஓய்வாய் இருக்கும் நேரமானாலும் சரி. உங்கள் வேலைக்குத் தக்கபடி ஒரு நேரத்தை ஒதுக்கிப் பாருங்கள். அந்த நேரத்தை உங்கள் மனம் திறந்த பகிர்தலுக்காய் ஒதுக்குங்கள். நிச்சயம் உறவு வலுப்படும்.
3. இணைந்தே பிரார்த்தனை செய்கிறீர்களா ? உங்கள் வாழ்க்கை வலுப்படும் என்பதில் ஐயமில்லை. இறைவனுக்கு முதலிடம் தரும் இல்லங்களில் ஈகோ விலகி விடுகிறது, விட்டுக் கொடுத்தலும், மன்னித்தலும் தவழ்கிறது அதனால் குடும்ப உறவு ஆழமும், அர்த்தமும் அடைகிறது. இணைந்தே பிரார்த்தனை செய்வதும், அடுத்தவருக்காய் பிரார்த்தனை செய்வதும் உறவை வலுப்படச் செய்யும் விஷயங்கள்.

GAAYATREE PARTY SERVICE
உங்கள் விருப்பம்போல் இலங்கை இந்தியா சீனா மலேசியா நாட்டு உணவுகள் அனைத்துக் கொண்டாட்டங்களுக்கும் சுத்தமாகவும் சுவை ஆறாது தயாரித்து விருப்பம்போல் பரிமாறுகின்றோம்.
கொத்துரொட்டி
புரியாணி
நூடில்
தந்தூரிச்சிக்கன்
இறால் சம்பல்
இறால் கறி
இன்னும் பல சுவையான உணவுகளும் உண்டு இவை அனைத்தும் வெளிநாட்டு மக்களுக்கும் ஏற்ற வகையில் பரிமாறக் காத்திருக்கின்றோம்.
e.mail:gaayatree-cs@live.de
TeL:07021 99 39 363
Mobile:0152 17 50 77 40
73230 Kirchheim-Unter-Teck

Gaayatree Party Service

சரஸ்வதி கல்யாணமாலை
இதோ ஒரு திருமணசேவை! பெற்றோர்களே கவலையைவிடுங்கள்! உங்கள் பிள்ளைகளுக்கு மணமகனையோ மணமகளையோ தேடிகஸ்டப் படாதீர்கள். கலாச்சார மேம்பாட்டனும் சாதகக் குறிப்புகளுடனம் நீங்கள் விரும்பியபடி மணமக்களை சிறப்பாகத் தேர்ந்தெடுக்க எம்மை நாடுங்கள்.

தொடர்புகளுக்கு: செல்வி:
0173 27 50 457- Tel: 02333 86 93 159
02333 86 93 165

# தலைவலி தீர சில ஆலோசனைகள்.

'ஒரே தலைவலி' இந்த வார்த்தையைக் கேட்காமல் கடந்து போன நாட்கள் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அந்த அளவுக்கு மனிதனோடு செம்புலப் பெயல் நீர் போல கலந்து இழையோடுகிறது தலைவலி.
தலைவலி மிகவும் கடினமானது, விரும்பத்தகாதது என்பதில் சந்தேகமில்லை, ஆனால் அது வராமல் தடுக்க முடியும் என்கின்றனர் மருத்துவர்கள்.
கீழ்க்கண்ட எளிய வழிகளைக் கடைபிடித்துப் பாருங்கள். தலைவலி உங்கள் பக்கம் தலைவைத்துக் கூட படுக்காது.

1. கண்ணுக்கும் தலைவலிக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. கண்ணுக்கு அதிகப்படியான அழுத்தம் கொடுக்கும் போது தலைவலி வரும் வாய்ப்பு அதிகரிக்கிறது. கண்ணின் பார்வை குறைவு படும்போது கண் மருத்துவரை அணுகி கண்ணாடி போட்டுக் கொள்வது முக்கியமானது.

2. படுத்துக் கொண்டு படிக்காதீர்கள், பயணத்தின் போது படிக்காதீர்கள், மிக அதிக வெளிச்சம் மிகக் குறைந்த வெளிச்சம் ஆகிய சூழலில் படிக்காதீர்கள், மிகச் சிறிய எழுத்துரு கொண்ட புத்தகங்களைப் படிக்காதீர்கள், தெளிவான எழுத்துக்களற்ற ஒளியச்சுப் பிரதிகளைப் படிக்காதீர்கள்.

இவை எல்லாமே கண்ணை அதிக அழுத்தத்திற்குள் தள்ளி தலைவலிக்கு அழைப்பு விடுக்கும். தொலைக்காட்சி பார்க்கும் போதோ, கணினியில் வேலை செய்யும் போதோ அறையில் போதிய வெளிச்சம் இருக்க வேண்டும். இருட்டு அறையில் இவற்றைச் செய்வது கண்ணை மிகவும் பலவீனப்படுத்தும்.

அதிக வெளிச்சமானவற்றை நேரடியாய்ப் பார்ப்பதைத் தவிர்க்க வேண்டும்
.

3. கண்ணுக்கு அதிக வேலை கொடுக்கும் பணியெனில் ஐந்து நிமிடத்திற்கு ஒரு முறை கண்ணுக்கு ஓய்வு கொடுங்கள். காண்டாக்ட் லென்ஸ் பயன்படுத்தினால் அதை அடிக்கடி சரிபார்த்துக் கொள்ளுங்கள்.

இருபது நிமிடங்களுக்கு ஒருமுறை இருபது வினாடிகள் இருபது அடி தொலைவிலுள்ள பொருளைப் பாருங்கள். கண்ணின் மேல் வெள்ளரிக்காயை வட்ட வடிவில் வெட்டி வைத்து கண்ணை இதப்படுத்துங்கள்.

கண்ணுக்கு பயிற்சி கொடுங்கள். கருவிழிகளை மேல், கீழ், இடம், வலம் என எல்லைகளுக்கு அசைத்தும், மூக்கை நோக்கிக் குவித்தும் பயிற்சி கொடுங்கள். இவையெல்லாம் கண்ணை புத்துணர்ச்சியுடன் வைத்திருக்க உதவும். தலைவலி வரும் வாய்ப்பும் குறையும்.

4. கண்ணைப் போலவே, பல்லும் தலைவலிக்கு காரணகர்த்தாவாகி விடும் வாய்ப்பு உண்டு. உங்கள் பல்லை அடிக்கடி பரிசோதித்துக் கொள்ளுங்கள். பல் சரியில்லாமல் இருந்தால் உடனே அதற்குரிய மருத்துவம் செய்யுங்கள். அடுத்தபடியாக காதைக் கவனியுங்கள். அதிக சத்தம் தலைவலிக்கு துணைவன். அதிக சத்தத்தை தவிர்க்க வேண்டும். சத்தமான சூழலில் வேலை செய்ய வேண்டிய கட்டாயம் இருந்தால் சத்தம் கேட்காதபடி காதில் எதையாவது மாட்டிக் கொள்தல் உசிதம்.




5. சரியான நேரத்தில் உண்ணுங்கள். ஒவ்வாமை ஏற்படுத்தாத உணவுகளை தேர்ந்தெடுத்து உண்ணுங்கள். சிலருக்கு தயிர் சாதம் சாப்பிட்ட உடன் தலைவலி வரும் எனில் அதை விட்டு விடுங்கள். நிறைய காரெட் சாப்பிடுங்கள். கண்ணுக்கு அது மிகவும் நல்லது. அதிலுள்ள வைட்டமின் எ கண்ணை ஆரோக்கியமாக வைத்திருக்கும்

கா.ஃபைன் மூலக்கூறுகளை விலக்கி விடவேண்டும். கா.ஃபி, குளிர்பானங்கள், சாக்லேட் போன்றவற்றில் கா.ஃபைன் இருக்கிறது என்பது கவனிக்கத் தக்கது.

தேவையான அளவு தண்ணீர் குடியுங்கள். குறைந்த பட்சம் இரண்டு லிட்டர் தண்ணீர் குடிக்க வேண்டும். தண்ணீருக்கும் தலைவலிக்கும் தொடர்பு இருக்கிறது என்பது வியப்பூட்டும் செய்தி. உடலில் தேவையான அளவு தண்ணீர் இல்லாமல் போகும் போது தலைவலி வெகுண்டெழுகிறது

6. புகை பிடித்தலை தவிர்க்க வேண்டும். புகை மூளையில் மெல்லிய துளைகள் வழியே பயணிக்கும். தலைவலியை தருவிக்கும் முக்கிய காரணியாக புகையின் நிக்கோட்டின் உள்ளது என்பதை நினைவில் கொள்ளுங்கள். அதேபோல தூசு கூட தலை வலி வருவிக்க வல்லது. எனவே சுத்தமான இடங்களில் நடமாட முயலுங்கள். வீட்டை தூய்மையாக வைத்திருங்கள். வாசனைப்பொருட்கள் சிலருக்கு ஒவ்வாமையையும் தலைவலியையும் உண்டாக்கும். ஏதேனும் வாசனை உங்களை அசௌகரியப் படுத்துவதாய் நீங்கள் உணர்ந்தால் அதை நிச்சயமாய் விலக்கி விடுங்கள்
.

7. தலைவலி வருமோ, வருமோ என கவலைப்படாதீர்கள். தலைவலியைக் குறித்தே நினைத்துக் கொண்டிருந்தால் தலைவலி வரும் வாய்ப்பு அதிகரிக்கும் என்பது உளவியல் உண்மை. கவலை தலைவலியின் நெருங்கிய தோழன். கவலை வந்தால் கூடவே தலைவலியும் தோழனைப் பார்க்க வந்து விடும். எனவே மனதையும், உடலையும் இயல்பாக, இறுக்கமற்று வைத்திருங்கள். உங்களை எரிச்சலடையச் செய்யும் நிகழ்வுகளையோ, மனிதர்களையோ தவிருங்கள். யோகா, தியானம் போன்றவற்றைப் பின்பற்றலாம்.

8. இருக்கையில் நேராக அமராமல் இருப்பது கூட தலைவலியை தருவிக்க வல்லது. எனவே இருக்கையில் அமரும் போது சரியான முறையில் அமருங்கள்.

# குடும்ப வெற்றியின்....

4. மனைவியோ, கணவனோ ஒரு வேலை செய்யும் போது அந்த வேலையைப் பகிர்ந்து செய்யுங்கள். அப்போது ஒரே இடத்தில் ஒரே வேலையைச் செய்யும் போது இருவரும் இணைந்து கொஞ்சம் நேரத்தைச் செலவிடும் சூழல் தோன்றும். அது வேலையைத் தாண்டி சுவாரஸ்யத்தை அதிகரிக்கும் !

5. எல்லா வேலையையும் செய்து முடிச்சப்புறம் தான் குடும்பம், எனும் அக்மார்க் மடத்தனத்தைச் செய்யவே செய்யாதீர்கள். உங்கள் பட்டியலில் குடும்பத்துக்காக நேரம் செலவிடுதல் டாப் 2 க்குள் நிச்சயம் இருக்கட்டும்.

6. இது தொழில்நுட்ப யுகம், சோசியல் நெட்வர்க் காலம். உங்கள் போனிலும், கம்ப்யூட்டரிலும் உள்ள இணையத்தை எட்டிப் பார்க்காமல் இருந்தாலே போதும் கொஞ்சம் நேரத்தை நீங்கள் உங்கள் வாழ்க்கைத் துணைக்காக உருவாக்கி விட முடியும் ! சந்தேகம் இருந்தால் முயற்சி செய்து பாருங்கள்.

7. மாலையில் செய்ய வேண்டிய சில வேலைகளை விடியற்காலையில் முடித்து விட முடியுமா என பாருங்கள். அந்த நேரத்தில் நீங்கள் முக்கியமான சில அலுவல்களை முடித்தால் மாலை நேரம் கொஞ்சம் ரிலாக்ஸ் ஆகவும், குடும்பத்தினருடன் பேசவும் ஒரு வாய்ப்பை உருவாக்கித் தரும்.

8. யார் என்ன கேட்டாலும், "ஓகே..." என தலையாட்டும் பழக்கத்தைக் கடாசுங்கள். குடும்பத்தினருடன் செலவிடும் நேரத்தை தேவையற்ற கமிட்மென்ட்களுக்காக கை கழுவி விடாதீர்கள். மிக முக்கியமான விஷயங்கள் தவிர மற்றவையெல்லாம் "சாரி.. நோ..." எனும் உங்கள் பதிலுடன் விடைபெறட்டும் !

9. தனியே செலவிடும் நேரங்களை சும்மா சினிமா பாக்கவோ, சீரியல் பாக்கவோ செலவிடாதீர்கள். அது ஒருவகையில் தோப்பிலே இருந்தாலும் ஒவ்வொரு மரமும் தனிமரம் தான் - கதை தான். அதை விட, சேர்ந்து நடப்பது, பேசுவது, ஒரு புதிர் விளையாட்டு விளையாடுவது, கேரம் போன்ற விளையாட்டுகள் விளையாடுவது என செலவிட முயலுங்கள்.

10. மனைவிகள் அன்பானவர்கள். நீங்கள் அவர்களுடன் பேசிக்கொண்டே இருக்காவிட்டால் கூட வீட்டில் இருக்கிறீர்கள் எனும் உணர்வே அவர்களுக்கு நிம்மதியையும், பாதுகாப்பையும், நிறைவையும் தருவதுண்டு. எனவே தேவையற்ற நண்பர் சகவாசங்களைக் குறைத்து வார இறுதிகளிலெல்லாம் வீட்டிலேயே இருங்கள்.

டைம் இல்லை என்பதெல்லாம் அக்மார்க் பொய். எல்லோருக்கும் 24 மணி நேரம் தான் உண்டு. அதை எப்படிச் செலவிடுகிறீர்கள் என்பது தான் முக்கியம். அதில் எவ்வளவு மணி நேரம் உங்கள் மனைவிக்காகவோ, கணவனுக்காகவோ ஆனந்தமாய்ச் செலவிடுகிறீர்கள் என்பது தான் கேள்வி ! மீண்டும் ஒரு முறை சொல்கிறேன், அழுத்தமாக. உங்கள் வாழ்க்கைத் துணைக்காக நேரம் ஒதுக்குங்கள், அது ஆரோக்கிய வாழ்வுக்கு அடிப்படை.


இரகசியம் தொடரும்....

பிருந்தா
Pirruntha Silk House
Textile & Jewellery
தங்க நகைகள் நீங்கள் விரும்பும் இரகங்களில் பெற்றுக் கொள்ளலாம். திருமண பட்டுப் புடவைகள் மற்றும் ஆடவர் மங்கயர் உடைகளுக்கும் நாடுங்கள்.
Tel : 0711/ 61 58 976 Fax: 0711-61 42 663
Ludwig str. 92
70197 Stuttgart
Handy :01703344059



Nimal வீடியோ அன் போட்டோ
Professional Video Movie
கலை விழாக்கள்...
உங்கள் இல்லத்தில் நிகழும் மங்கல நிகழ்வுகள் எதுவானாலும் மனதோடு நிற்க நமது ஒளிப்பதிவு கைகொடுக்கும்...
சிறந்த முறையில் உங்கள் மங்கல விழாக்களை வீடியோ மற்றும் புகைப்படம் எடுக்க எம்மை நாடுங்கள்
தொடர்புகளுக்கு: கபிலன்
Tel: 0152 33 83 29 55 Tel:01776794261








# யேர்மனி ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்ற பிள்ளையார் பெரும் கதை விரதம்!

பிள்ளையார் கதை விரதம் இந்து மக்களினால் கடைப்பிடிக்கப்படும் விநாயக விரதங்களுள் ஒன்று. இது கார்த்திகை மாத தேய்பிறைப் பிரதமை முதல் மார்கழி மாத வளர்பிறைச் சட்டித் திதி வரையுள்ள இருபத்தொரு நாட்கள் அனுட்டிக்கப்படும் விரதமாகும். இதை பெருங்கதை விரதம், விநாயக சட்டி விரதம் எனவும் அழைப்பர்.ஈழத்தில் உள்ள விநாயகர் ஆலயங்களில் இவ்விரத காலங்களில் வரதபண்டிதரின் பிள்ளையார் கதை, விநாயக புராணம் என்பவற்றைப் பாராயணம் செய்யும் வழக்கம் நெடுங்காலமாகப் பேணப்பட்டு வருகின்றது. அவை இன்று புலம்பெயர் நாடுகளிலும் இந்து ஆலயங்களில் சிறப்புற நடைபெற்று வருகின்றன. மேற்படி பிள்ளையார் கதை விரதம் யேர்மனி சுவெற்ரா நகரில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. இறுதிநாள் (07.12.2013) நிகழ்வின்போது பிள்ளையார் சந்தணக்காப்பு அலங்கரத்தில் அழகுறத் திகழ்வதையும் பூஜை நிகழ்வையும் படத்தில் காண்க.

# யேர்மனி நாட்டின் டோட்முண்ட் மாநகரத்தில் நடைபெற்ற திருக்குறள் மனனப் போட்டி!


















யேர்மன் நாட்டின் டோட்முண்ட் நகரத்தில் அமைந்து, தமிழ் வளர்க்கும் பணியில் ஈடுபட்டுவரும் வள்ளுவர் தமிழ்ப் பாடசாலை வருடாந்தம் நடாத்தும் திருக்குறள் மனனப் போட்டி கடந்த (16.11.2013) திகதி வெகு சிறப்பாக நடைபெற்றது. எட்டாவது முறையாக நடைபெற்ற, இத்திருக்குறள் போட்டி பலரது பாராட்டையும், நன்மதிப்பையும் பெற்றுக் கொண்டது. குறிப்பாகப் பெற்றோர்களினதும், தமிழ்மொழி வளர்ச்சியில் ஈடுபடுவோரினதும் பெரும் பாராட்டைப் பெற்றுக் கொண்டது என்றால் மிகையாகாது. கீழ்ப்பிரிவு தொடக்கம் அதிமேற்பிரிவு வரையான ஏழு பிரிவுகளை ஏற்படுத்தி, ஆறு வயது தொடக்கம் பதினெட்டு வயதிற்கு மேற்பட்டவர் என, யாவரும் பங்குபற்றும் முறையில் போட்டிகள் நடைபெற்றன. இப்போட்டியில் ஐம்பதிற்கு மேற்பட்ட பிள்ளைகள் பங்குபற்றினர்.

திருக்குறள் போட்டிகளுக்கு நடுவர்களாக ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவையின் செயற்குழு உறுப்பினர்களான திரு.வ.சிவராசா, திரு.பொ.புத்திசிகாமணி, திரு.அ.புவனேந்திரன், ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவையின் உப தலைவர் திருமதி.கலாதேவி மகேந்திரன், எழுத்தாளர் திருமதி.சந்திரகௌரி சிவபாலன், ஆசிரியை திருமதி.பத்மாசினி மாணிக்கரட்ணம், ஆசிரியை திருமதி.சிவசக்தி ஜெயதேவன், சங்கீத ஆசிரியை திருமதி. ஞானாம்பாள் விஜயகுமார், ஆசிரியை திருமதி.இராஜேஸ்வரி சிவராசா ஆகியோர் செயற்பட்டனர். பாடசாலையின் பொறுப்பாசிரியர் திரு.பொ.சிறீஜீவகன் தலைமையுரை நிகழ்த்தினார்.




ஓம் பராசக்தி ஜோதிடம்

மலயாளபகவதி பூஜாஜ்
உலக புகழ் பெற்ற இந்தியா ஜோதிடர்
பண்டிதர் சங்கர்

Astrology Predication is god gift,
passed down from generation to generation
Meet me once & change your future


30 வருட அனுபவம் பெற்றவர்

இவர் அமெரிக்கா, கனடா, லண்டன், நியூசிலாண்ட், சிங்கப்பூர் , மலேசியா முதல் தடவையாக ஜேர்மனியில் சந்திக்கவுள்ளார்.

Rheinische str 98
44 137 Dortmund,
Germany.

ஆலோசனை மற்றும் தீர்வுகள்

வியாபாரங்கள் - எதிரிகள்
உடல்நிலை - வேலை
குழந்தையின்மை - திருமணம்
பணம் - குடிபோதை
காதல் - விவாகரத்து
வழக்குகள் கண் திருஷ்டி
குடும்ப ஒற்றுமை
படிப்பு வாகனப் பொருத்தம்
மற்றும் பல.....பிரச்சனைகளுக்கு



Mobile
0174 6400 418,
0151 71 200 666


அனைவருக்கும் எங்கள் இனிய தைப்பொங்கள் வாழ்த்துக்கள்



# இராவணன்

## கேள்வியாயும்...உண்மையாயும் ஒரு தேடல்!

**ஏலையா க.முருகதாசன்**

மிகப் பழமையான தமிழர்கள் தென்னமெரிக்காவில் வாழ்ந்தார்கள் என்பதற்கு மாயா இனத்தவர்கள் சான்றாக இருக்கிறார்கள். இதிகாசங்களில் வல்லமை பொருந்திய மனிதர்கள் இடம்விட்டு இடம் நகர்வதற்கு பல்வேறுவிதமான கருவிகளை பன்படுத்தப்பட்டிருக்கின்றன. அவை விஞ்ஞான அறிவின் மூலமாகவே சாத்தியப்பட்டிருக்கின்றது.

எனவே மனிதகுலம் தனது ஆற்றல்களை, ஆரம்பம் பின்னர் அதன் உச்சம் என்பதை ஒரு முறை சந்திக்கவில்லை. ஆரம்பம், உச்சம் என்பது பலமுறை நிகழ்ந்திருக்கின்றது. அந்த பலமுறைகளில் ஒருமுறைதான் இராவணனின் ஆற்றல் வெளிப்பட்டு நின்ற காலம். இராவணனை மாயா இனத்தமிழன் என்று சொல்லலாம்.

இராவணனை பத்துத்தலைகள் உள்ளவன் என்பது அவனது பத்துவிதமான ஆற்றல்களை குறிப்பிடுவதேயன்றி இராவணனுக்கு பத்துத்தலைகள் இல்லையென்பதும் அவன் இலங்கையை ஆண்ட காலத்தில் இலங்கை புதிய கண்டுபிடிப்புகளை கண்டுபிடித்த காலமாகவும் அதன் ஒரு வெளிப்பாடே புஸ்பகவிமானத்தின் கண்டுபிடிப்பாகும் என்பது நிரூபணமாகின்றது.

இலங்கையின் ஆதிக் குடிகள் இயக்கர், நாகர், வேடர் என்பதற்கு பலவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இராவணன் காலத்திலிருந்து பார்க்கும் போது இலங்கையை ஆண்டவர்கள் தமிழர்கள் என்பதும், இராவணன் சைவன் என்பதால் இராவணன் காலத்தில் இலங்கை என்றழைக்கப்படுமஇ இலங்காபுரி எங்கும் சைவசமயமே பரவியிருந்தது. ஆகையால் இலங்கை சிவபூமி என்பது நிரூபணமாகின்றது.

மனித வரலாற்றைக் கூறும் போது எந்த ஒரு நூலாலுமே மனித வரலாற்றின் ஆரம்பமே இதிலிருந்துதான் என்று கூற முடியாது, கூறவுமில்லை. எனவே மாயா இனத்தவரின் மரபணுத் தொடர்பு உள்ளவர் இராவணன் என்பதை மறுக்க எந்தவிதமான ஏதுவுமில்லை.

மனித இனம் தனது ஆய்வுக்குட்படுத்திய எந்தவொரு ஆய்வுகளிலும் அந்தந்த காலகட்டங்களுக்குரிய நிகழ்வுகளையும், எவ்வளவு தூரம் பின்னோக்கிப் போய் அந்நிகழ்வுகளுக்குரிய ஆதராங்களைத் திரட்டி மட்டுமே பதிவு செய்து வந்திருக்கின்றன.

ஒரு இனத்தின வரலாற்று ஆரம்ப அடிச்சுவட்டு ஆவணங்கள் மண்ணோடு மண்ணாக கலந்தும் உருக்குலைந்து உக்கிப் போய் தூசியாகி காற்றோடு கலந்தாகிவிட்டது. இந்நிகழ்வின் காரணத்தால் ஒரு இனமே இந்த உலகில் உருவாகி வாழவில்லையென்று சொல்லிவிடவே முடியாது. தொடர் சிந்தனையும் தேடலும் அதிக தூரம் செல்லக்கூடியவையே. ஓட்டுமொத்தமான தமிழர் வரலாற்றில் தமிழர்களின் அதிதூர தொன்மைத்தன்மையை நிலைநிறுத்தும் ஒரு வரலாறாக இராவணன் வரலாறு இருந்து வருகின்றது. சீதையைச் சிறைபிடித்தான் என்பதற்காக தமிழர்கள் இராவணன் என்ற ஒரு சிவபக்த தமிழனை மறந்துவிட்டு தமிழர் வரலாறு பற்றிச் சிந்திப்பதே தவறு. சீதையை ஏன் சிறைபிடித்தான் என்பதற்கான காரண காரியங்களை மிக ஆழமான பார்வையுடன் ஆய்வுக்குட்படுத்த வேண்டும். அது இன்னொரு தளப்பயணம்.

இராவணன் ஆற்றல்மிக்க விஞ்ஞானபூர்வமான அரசனாக இருந்தமையும், அவன் தனது வாகனமாக காற்றால் இயங்கும் புஸ்பகவிமானத்தைப் பயன்படுத்தினான் என்பதும் உண்மையே. இதுவும், காழ்ப்புணர்ச்சி கொண்டு மட்டுமல்ல தமிழின அரசன் உலகில் மேலோங்குவதா என்ற எண்ணமே அவனை அழிக்க வேண்டும் என்ற எண்ணத்தை மற்றவர்களுக்கு ஏற்படுத்தியிருக்கலாம் அல்லவா. மனித குலத்தின் தொன்மையான வரலாற்றுக் காலத்தில் பூமியெங்கும் வாழ்ந்த தமிழர்கள் ஒருவரோடொருவர் தொடர்புகளை பேணிக் கொள்ளும் சாத்தியங்கள் இருந்திருக்கின்றன. கண்கள் பார்க்கும் தூரத்திற்கப்பாலும், போகப் போக கண்களால் பார்க்கின்ற எல்லைகள் போன்றே, சிந்தனையால் ஏற்படும் தேடல்களும் தேடத் தேட எல்லைகள் விரிந்து சென்று கொண்டேயிருக்கும். அது போன்றதே வரலாற்றின் தூரமுமாகும், தமிழர்களின் வரலாறும் அது போன்றதே



### ஏட்டுச்சுவடிகள்

மனிதன் தன்னைச் சார்ந்தும், தன்னைச் சுற்றிய நிகழ்களையும் பதிவு செய்வதற்கு பதிவுத்தளங்களாக குகைகள்,கற்பாறைகள் எனத் தொடங்கி மரப்பட்டைகள், ஏடுகள் என்ற ஊடகப் பயணத்தில் தொடங்கி இன்று காகிதம் என்ற தாள் நிலை தாண்டி இன்று பதிவுத்தளமாக கணினி வளர்வுரப் பெற்றுள்ளது.

இந்தியாவும் இலங்கையும் பதிவுத்தளங்களின் தொடர் வளர்நியையில் ஓலைகளைப் பயன்படுத்தி வந்தமையையும், அவற்றில் பனை ஓலைகள் அதிகம் இடம்பெற்றிருந்தமையையும் அறிய முடிகின்றது. இன்றைய மருத்துவ விஞ்ஞானம் உடலுறுப்புகளை ஆயந்தறிந்து கண்டறிந்து கொண்டிருக்கும் நோய்களை, தேவையான அளவு சமநிலை அளவுகளை கிராமங்கள் தோறும் வாழ்ந்த பரியாரி என்றழைக்கப்படுகின்ற ஊர் வைத்தியர்கள் துல்லியமாகவே அறிந்து வைத்திருந்தார்கள்.( பரிகாரி என்பது நல்ல தமிழ்ச் சொல்லாகும். பரிகாரம் என்பதே திரிபுபட்டு பரியாரியானது. பரிகாரம் என்பது மாற்றுமுபாயம் என்பதாகும் )

நோய்களுக்கான மருந்துகள் யாவும் மூலிகைகளாக அவனுக்கருகிலேயே இருந்தன. உணவே மருந்தென்பதை சித்தவைத்தியம் திடமாவே கூறியிருக்கின்றன. சூரியனிலிருந்தே மற்றைய கோள்கள் உருவாகின என்பதை விஞ்ஞானம் நிரூபித்திருக்கின்றது. மனிதனின், மற்றைய உயிரினங்களின், தாவர சங்கமங்களின் உருவங்கள் பூமியின் கனிமங்களான மூலப்பொருட்களினாலேயே உருவாக்கப்பட்டன. ஆதலால் பூமியிலிருக்கின்ற அனைத்து உயிரினங்கள்,தாவர சங்கமங்கள் யாவுமே ஒன்றுக்கொன்று தொடர்புடையனவே. இந்தத் தொடர்புக் கூறுகளே மனிதனின் நோய்க்கான பரிகாரத்தை அவனோடு வாழுகின்ற தாவரசங்கமங்கள் என்கின்ற புல், பூண்டு, கொடி, செடி போன்றவற்றிலிருந்து, அதன் மருத்துவத் தன்மைகளை ஆய்ந்து கண்டறிந்து செய்ய முடிந்தது.

தொடர்ச்சி 20 ம் பக்கம்



உங்கள் அனைத்துக் காப்புறுதிகளுக்கும் அதிக பணம் செலுத்துவதாக உணர்கின்றீர்களா?
உங்களுக்கு உகந்த காப்புறுதி எதுவென்று தெரிந்து அதை நான் உரிய முறையில் செய்துதரக்காத்திருக்கின்றேன்.
அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்.



Thuvaragan Nesapalan
Telefon: 0202/5270-250
Mobil: 0171/6412008
www.rmb3.de
Düsseldorfer Str. 128
42115 Wuppertal

rmb³ VERSICHERUNGSKONZEPTE FINANZDIENSTLEISTUNGEN

rmb³ ist Partner der Gothaer

HK Hammacher
வாகனச் சாரதி பயிற்சி நிலையம்

ஆங்கிலம், யேர்மன், பிரஞ், துருக்கி மொழிகளில் வகுப்புக்கள் உண்டு. பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள் கார் மற்றும் மோட்டோசைக்கிளிற்கும் சிறப்பாகத் தெரிவுசெய்து கற்பிக்கப்படும்.



தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651

MPU
ASF
ASP
இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!

# அட! இனி விமானத்திலும் இருந்தபாடில்லை!

## பறந்து கொண்டே பேச அனுமதி.... அமெரிக்க தொலைத் தொடர்பு ஆணையம் பரிந்துரை



வாஷிங்டன்: விமானத்தில் பறக்கும் போது செல்போன் மற்றும் இணையத்தை பயன் படுத்த தொடரும் தடையை நீக்க அமெரிக்க தொலைத் தொடர்பு ஆணையம் முடிவு செய்துள்ளது. அடுத்தமாதம் நடைபெற உள்ள கூட்டத்தில் இது குறித்து பரிசீலிக்கப் பட உள்ளது.

3,048 மீட்டர் உயரத்துக்கு மேல் விமானம் பறக்கும் போது, அதில் பயணம் செய்யும் பயணிகள் செல்போனில் பேசவும்,டேப்லெட், கணினிகள் ஆகியவற்றில் அகன்ற அலைவரிசைச் சேவைகளைப் பயன்படுத்தி இணையதளங்களைப் கையாளவும் அனுமதிப்பது குறித்து அமெரிக்க தொலைத் தொடர்பு ஆணையம் பரிந்துரை செய்துள்ளது.

இது குறித்து அமெரிக்க மத்திய தொலைத் தொடர்பு ஆணையத் தலைவர் தனது சுற்றறிக்கையில் தெரிவித்திருப்பதாவது, 'நவீன தொழில்நுட்பங்கள் விமானப்பயணத்தின் போது பாதுகாப்புடனும், நம்பகத்தன்மையுடனும் செல்போன் சேவைகளைப் பயன்படுத்த வாய்ப்பளிக்கின்றன.

எனவே, நமது பழைய காலாவதியாகிவிட்ட கட்டுப்பாடுகளை மறுபரிசீலனை செய்ய வேண்டிய தருணம் இது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

விரைவில் நடைபெறவுள்ள கூட்டத்தில் இப்பரிந்துரை ஏற்றுக் கொள்ளப் பட்டால், பின்னர், அது பொதுமக்களின் கருத்துக்கேட்புக்கு விடப்படும்.

ஆனால், விமானம் வானில் ஏறும்போதும், தரையிறங்கும் போதும் செல்போன்களைப் பயன்படுத்த விதிக்கப்பட்டுள்ள தடை நீடிக்கும் எனத் தெரிகிறது.

அட! டா! இதுவரை காலமும் விமானத்தில்தான் தொலைபேசித் தொல்லை இல்லை! என்று பார்த்தால் இனி அங்கும் வந்து,தொலைக்கப் போகிறதே! இனி விமானப்பணிப்பெண் தேவை இல்லை! அம்மாவே மகனே!! பெல்ட் போட்டிருக்கிறியா என்று, பரிவுடன் போனில் கேட்பா!

# இராவணன்

19ம் பக்கத் தொடர்ச்சி....



மனிதனின் உடலில் இருக்கும் மூலக்கூறுகளே மற்றைய உயிரினங்களிலும், மரம், செடி, கொடி, புல், பூண்டு எல்லாவற்றிலும் உண்டு. இதனடிப்படையில் பார்க்கும் போது, பூமியில் தோன்றிய அனைத்துமே உறவினர்களே.

இவற்றையெல்லாம் நமது முன்னோரின் சிந்தனையாளர்கள் ஏட்டுச்சுவடிகளில் பதிவு செய்தார்கள். அன்றைய காலகட்டங்களில் இருந்து மொழி வழமைக்கும், வழக்கத்திற்கும் ஏற்ப குறியீடுகளாகவும் படங்களாகவும் இவை பதியப்பட்டன.

மருத்துவக் குறிப்புகள் மட்டுமல்ல, ஆய கலைகள் என்று சொல்லப்படும் 64 அறிவியல் பகுதிகள் பதியப்பட்டிருந்தன. ( ஆய என்ற சொல் விஞ்ஞான பூர்வமாக சிந்திக்கப்பட்டு பகுதி பகுதியாக தொகுத்தவை என்பதாகும்.)
இவ்வாறு தமிழர்களால் வகுத்து தொகுக்கப்பட்ட பல இலட்சக்கணக்கான ஏட்டுச்சுவடிகளில, அந்த ஏட்டுச்சுவடிகளில் என்னென்ன அறிவுப் பொக்கிசங்கள் இருக்கின்றன என்பவை கண்டறியப்படாமலே அடுத்தடுத்த பரம்பரைகள் அவற்றை ஏறெடுத்தும் பார்க்காது தேடுவாரற்று சிதிலமடைந்து சீரழிந்தன, மிகுதியானவற்றை வேண்டாத குப்பை என நாங்களே குப்பையோடு குப்பையாக எருவாக்கினோம் எரித்தோம்.
தமிழர்களின் வரலாற்றை அணுவணுவாக துல்லியமாக ஆய்ந்தறிந்த ஐரோப்பியர்கள் எந்தவிதமான பரபரப்பையோ, உற்றுக்கவனித்து உள்வாங்களையோ வெளிப்படையாக காட்டிக் கொள்ளாது.

கல்வியாலர்கள், ஆய்வாளர்கள், துறைசார்கல்விப்படிப்பாளர்கள், சுற்றுலாப் பயணிகள் என்ற தனிநபர் நிலைகளில் தமிழர்களின் ஏட்டுச்சுவடிகளை வேண்டிச் சென்றனர். அந்த அறிவின் ஆரம்பத்தளமே இன்றைய விஞ்ஞான நடவடிக்கைகள் எனலாம். மாயா இனம் தமிழர்களாக இருக்கக்கூடிய சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் பார்க்கும் போது மாயா இனத்தவரின் அறிவாற்றல்களே காலப்போக்கில் வழக்கொழுகி வழிவந்து ஏட்டுச்சுவடிகளில் பதியப்பட்டிருக்கின்றன என்பதாகும். ஆற்றல்மிகு இனமாக பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் தன்னிடம் இருந்த அறிவியல் செல்வத்தின் பெறுமதியை உணராமையுடன் அடுத்த கட்டத்திற்கு அதனை விரிவடையச் செய்வதற்கான சூழ்நிலைமையை அமைத்துக் கொள்ளாத அலட்சியம் என்ற வறுமை நிலையுமே காரணமாகலாம்.






# லண்டன் தேம்ஸ் நதியில் ஓர் விமானநிலையம்!

மாதங்கி

மாலைதீவில் எங்கு பார்த்தாலும் நீர்தான். அதனால் தேடிப்பிடித்து ஒரு திடலை ஓடுபாதையாக்கி விமானநிலையங்கள் அமைத்துள்ளன. அங்கு விமானங்கள் தரை இறங்குகின்றன.

ஆனால் இப்போ தரைக்கு பஞ்சமில்லதா இடங்களிலும், தரைமுழுக்க மக்கள் செறிந்து வாழத்தலைப்பட்டதால், குறிப்பாக பட்டினங்களில் அங்கு தரைப்பஞ்சம் தலைவிரித்து ஆடுகிறது. அங்கு எதாவது நவீன வசதிகளுடன் செய்வது என்றால், மக்கள் அன்றாட இயக்கம் தடைப்படும். வெய்யில் உதிக்கத்தொடங்க, தெருக்களின் திருத்தவேலையும் கூடவே குதிக்கும். அதனால் மக்கள் படும் அவஸ்தை சொல்லமுடியாது.




A Rooftop Circular Airport from Illustrated London News, 18 October 1919

தெருக்கள் பாடு இப்படி என்றால். விமா நிலையங்களின் நிலை சொல்ல முடியாது. லண்டன் விமான நிலையங்கள் நிமிடத்திற்கோ! செக்கனுக்கோ 3 என்று சொல்லி இப்ப மழைபோல் வந்து இறங்குகின்றன விமானங்கள்.
இப்படி ஒரு நிலமை வரும் என்று அன்றே சிந்திக்கத்தலைப்பட்டனர். விமானத்தைக் பெரிய மாடிகளின் கூரையில் இறக்கவா அல்லது கடலில் இறக்கவா என சிந்திக்கும் அளவிற்கு விஞ்ஞானிகளின் பார்வை விரிவாகவே இருந்தது.



ஒன்று பெரிய கட்டிடங்களின் கூரையில் வட்டமாக விமான நிலையம் அமைத்தல். மற்றது நீரின் மீது அதாவது நதிகள் கடல்கள் மேல் விமான நிலையம் அமைப்பது.இப்படியான பல திட்டங்கள் பலநாடுகளிலும் தீட்டப்பட்டது. குறிப்பாக 1919 இல் இருந்து இந்தச்சிந்தனை வலுப்பெறத் தொடங்கிவிட்டது. இதற்கு ஆதரமான படங்களை இங்கு காணலாம்.




தொடர்ச்சி 22ம் பக்கம்

An airport above the Thames between the Lambeth Bridge and Westminster Bridge, from Popular Science Monthly, January 1934

சுஜிதா நிறுவனத்தினர். கடந்த 10 வருடங்களுக்கு மேலாக தரத்திலும் சுவையிலும் தடம் பதித்துள்ளனர்.

Sujitha Frozen Food

சுவையான உணவிற்கு சுஜிதா

அனைத்து தமிழ் வர்தக நிறுவனங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

அனைவருக்கும் எங்கள்
இனிய தைப்பொங்கல்
வாழ்த்துக்கள்

S.J.N Imports

Lambertusstr.58
52441 Linnich


Tel.024625557
Handy.01773268150,01638883308
Email.sjnfastfood@yahoo.de, web:- www.sujitha.eu



## லண்டன் தேம்ஸ் நதியில் ஓர் விமானநிலையம்!

21ம் பக்கத் தொடர்ச்சி...




An airport above London, from Modern Mechanix, September 1931

2012 ஆண்டு லண்டனில் தேம்ஸ் நதிமீது விமான நிலையம் அமைக்கும் திட்டம் ஓரளவு நிறைவு பெற்றது. இத்திட்டம் சரியாக நடைமுறைப் படுத்தினால் 2030 ஆண்டு லண்டன் தேம்ஸ்நதியில் விமானங்கள் இறங்கும்.

.உலகிலேயே மிகவும் ஆரவாரமான விமான நிலையங்களில் ஒன்று தான் ஹீத்ரு விமான நிலையம். இங்கிலாந்தை பொருத்தவரையில் கடந்த 2002ம் ஆண்டில் 7.23 கோடி பேர் விமானத்தில் பயணம் செய்துள்ளனர்.

ஆனால் கடந்தாண்டில் மட்டும் 11.5 கோடி பேர் விமானத்தை பயன் படுத்தியுள்ளனர், இது 60 சதவிகிதத்துக்கும் அதிகமாகும்.

இந்த எண்ணிக்கை அடுத்த 15 ஆண்டுகளில் மிகவும் அதிகரிக்கும் என போக்குவரத்துத் துறை கணக்கிட்டுள்ளது.

விரிவுபடுத்துவது குறித்து இங்கிலாந்து போக்குவரத்துத்துறை ஆலோசித்து வருகிறது.


ஹீத்ரு விமான நிலையத்தில் 3வது ஓடுதளத்தை ஏற்படுத்துவதற்கே ஏராளமான கிராமங்களை முற்றிலும் அழிக்க வேண்டும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே மாற்று ஏற்பாடுகள் குறித்து அதிகாரிகள் ஆலோசித்து வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக புகழ்பெற்ற தேம்ஸ் நதியில் மிதக்கும் விமான நிலையத்தை அமைப்பது குறித்து தேம்ஸ் நதி ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் போக்குவரத்துத் துறைக்கு அறிக்கை அளித்துள்ளது.

இதற்காக மாதிரி விமான நிலையத்தை அந்த நிறுவனம் உருவாக்கியுள்ளது. எதிர்கால தேவையை கருத்தில் கொண்டு படிப்படியாக விமான நிலையத்தை விரிவுபடுத்துவதற்கும் தேவையான ஆலோசனைகளை அந்த நிறுவனம் தனது அறிக்கையில் கூறியுள்ளது.

A giant circular aerodrome over the city, from Mechanix Illustrated, July 1938



Proposes Orientable Roof-Top Airports For Cities

PROPOSED as a solution to the problem of locating an airport in the heart of any big city, a design for a long orientable run-way, which would be mounted on circular tracks atop tall buildings, as sketched above, has been conceived by a French engineer.

பிரிட்டானியா என்று பெயரிடப்பட்டுள்ள இந்த விமான நிலையத்தை உருவாக்க ரூ.10.7 லட்சம் கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இப்போது பிறக்கும் குழந்தைகள் நிச்சயமாக இந்த பிரிட்டானியா விமான நிலையத்தில் வந்து இறங்குவார்கள் என்று நம்பலாம்.







# எம்.ஜிஆரின் ஆயிரத்தில் ஒருவன் படம் டிஜிட்டலில் வெளியாகிறது!




மக்கள் திலகமும் நம்பியாரும் தோன்றும் ஒரு காட்சி.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா இணைந்து நடித்த எவர்கிரீன் ப்ளாக் பஸ்டரான ஆயிரத்தில் ஒருவன் படம், 49 ஆண்டுகளுக்குப் பிறகு டிஜிட்டலில் புதுப்பிக்கப்பட்டு மீண்டும் வெளியாகிறது. ஏற்கனவே கர்ணன், பாசமலர், நினைத்தாலே இனிக்கும் உள்ளிட்ட படங்களை டிஜிட்டலில் புதுப்பித்து வெளியீடு செய்தனர். ரசிகர்கள் இப்படங்களை ஆர்வமாக பார்த்தார்கள். கர்ணன் படம் நல்ல வசூலைக் குவித்தது. எம்ஜிஆரின் ஆயிரத்தில் ஒருவன் படம் டிஜிட்டலில் வெளியாகிறது! தை 17ம் திகதி மக்கள் திலகத்தின் பிறந்தநாள்.

முதல் முறையாக இதுவரை எம்ஜிஆரின் படங்கள் புதிய பிரிண்ட் போட்டு மட்டுமே வெளியிடப்பட்டு வந்தன. ஒரு வாரம் இரு வாரங்கள் ஓடினாலும் போட்ட காசை விட பலமடங்கு அதிகமாக வசூலிக்கும் "கோல்ட்" எம்ஜிஆரின் படங்கள். இப்போதுதான் முதல் முறையாக ஆயிரத்தில் ஒருவன் படத்தை டிஜிட்டலுக்கு மாற்றி வெளியிடுகிறார்கள். 49 ஆண்டுகள் கழித்து ஆயிரத்தில் ஒருவன் படம் 1965-ல் வெளியானது. எம்.ஜி.ஆருடன் தற்போதைய முதல்வர் ஜெயலலிதா, நாகேஷ், எம்.என்.நம்பியார், ஆர்.எஸ். மனோகர் போன்றோரும் நடித்து இருந்தனர். பி.ஆர். பந்துலு இயக்கினார். விஸ்வநாதன் ராமமூர்த்தி இசையமைத்திருந்தனர். 49 ஆண்டுகள் கழித்து இந்தப் படம் டிஜிட்டலில் வெளியாகிறது. அதோ அந்தப் பறவை போல... கொடுங்கோல் மன்னனை எதிர்த்து போராடும் ஒரு வீரமிக்க மருத்துவரின் கதை. கடலிலும் தீவுகளிலும் பிரமாண்டமாக படமாக்கி இருந்தனர். இந்த படத்தில் இடம் பெற்ற ஆடாமல் ஆடுகிறேன், அதோ அந்த பறவை போல, நாணமோ இன்னும் நாணமோ, ஓடும் மேகங்களே ஒரு சொல் கேளீரோ, பருவம் எனது பாடல், உன்னை நான் சந்தித்தேன், ஏன் என்ற கேள்வி போன்ற பாடல்கள் பட்டிதொட்டியெங்கும் ஒலித்து இன்றைக்கும் விரும்பி கேட்கப்பட்டு வருகிறது. அடுத்த மாதம் ஆயிரத்தில் ஒருவன் படத்தை டிஜிட்டலில் புதுப்பிக்கும் பணிகள் விறுவிறுப்பாக நடந்து வருகிறது. ஒலி ஒளியும் மெருகேற்றப்படுகிறது. அடுத்த மாதம் (ஜனவரி) இப்படம் தமிழகம் முழுவதும் வெளிவருகின்றது.

# ஒரு பெண்ணின் ஆழுமையைக் குறிக்கும் குறிப்பு இது!





பில் கிளின்டனும் ஹிலாரி கிளின்டனும் காரில் சென்று கொண்டிருந்தார்கள். பெட்ரோல் போடுவதற்கு ஒரு பங்க் சென்ற போது அங்கிருந்த ஒரு நபரை அடையாளம் கண்டு கொண்ட ஹிலாரி, அவரை தனது கணவருக்கு "இவர் ஹென்றி, என்னுடைய கல்லூரித் தோழர்" என அறிமுகம் செய்து வைத்தார். திரும்பி வரும்போது பில் கிளின்டன் "நீ அவரை திருமணம் செய்து கொண்டிருந்தால், இந்நேரம் ஒரு பெட்ரோல் போடுபவரின் மனைவியாக இருந்திருப்பாய்" எனப் புன்னகையோடு சொல்ல, அதற்கு ஹிலாரி கிளின்டன் சொன்ன பதில்....

"இல்லை நான் அவரை திருமணம் செய்து கொண்டிருந்தால், **அவர் அமெரிக்காவின் ஜனாதிபதி ஆகியிருப்பார்!**

படித்ததில் பிடித்தது...வதனி-குமார்





# ஒளி இழந்வவர் வாழ்வில் ஒளி ஏற்றும் ஒளி விழா

கடந்த 8.12.2013 யாழ்ப்பாணம் வாழ்வகத்தில் நடைபெற்ற ஒளிவிழாவில் இருந்து சிலகாட்சிகள்.ஒளியிழந்தவர் வாழ்வில் ஒளியேற்றும் நிகழ்வாக இவ்விழா அமைந்தது. தகவல்: அ.இரவீந்திரன்.(தலைவர் - வாழ்வகம்)

BCN Travals
நம்பிக்கையான விமானச் சேவை
Consulting Network(TBW)UG
இலங்கை இந்தியா கனடா அமெரிக்கா அவுஸ்த்திரேலியா சிங்கப்பூர் மலேசியா ஐரோப்பா உட்பட அனைத்து நாடுகளுக்கும்சலுகை விலையில் விமானச்சீட்டுக்களைப் பெற்றுத்தருகின்றோம். அத்துடன் ஐரோப்பாநாடுகளுக்கான Euro Line சொகுசு பஸ் பயணச்சீட்டுக்களையும் இங்கே பெற்றுக்கொள்ளலாம்.மேலும்
இந்தியா செல்வதற்கான விசாவினைப் பெறுவதற்குரிய ஒழுங்குகள் செய்து தரப்படும்.
Tel:-0231-10876361
Handy.-0163-8714369
Tel 0231-98539416
Fax.- 0231.10876362
Web:www.bcnugonline.com
Adler str-30
44137Dortmund
மின்னஞ்சல் :-bcntravels@hotmail.de -



# திருமண வாழ்வின் மகிழ்வுக்கு குழந்தை சிறந்த பாலமாகலாம்!




குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதால் குடும்பத் தகராறுகள் குறையும் என்பதை அனுபவித்துப் பார்த்தால் மட்டுமே புரிந்து கொள்ள முடியும். இந்த மாறுபாட்டுடன் உங்கள் வீட்டிற்கு மகிழ்ச்சியை வரவழையுங்கள். இங்கே குழந்தை பெற்றுக் கொள்வதால் குடும்ப பிரச்சனைகளை களைவதற்கான சில மறைமுக யோசனைகளை கொடுத்துள்ளோம்.

## குடும்பத்தின் பிணைப்பை உறுதிப்படுத்துதல்

குடும்பத்தின் பிணைப்பை உறுதிப்படுத்துபவராக உங்கள் குழந்தை இருப்பதால் குழந்தை பெற்றுக் கொள்வது குடும்ப தகராறுகளை குறைக்கும். குடும்ப பிரச்சனைகளை சரி செய்ய நினைத்தால் குழந்தை பெற்றுக் கொள்ளுங்கள் மற்றும குடும்பத்துடன் அந்த குழந்தை கொண்டிருக்கும் தொடர்பை பலமாக வைத்திருங்கள்.

## பொறுப்பை அதிகரித்தல்

உங்களுக்கும், உங்கள் துணைவருக்கும் குழந்தை பிறந்த பின்னர் நீங்கள் குடும்பத்திற்கான பொறுப்புகளை சற்றே அதிகமாக யோசிக்க வேண்டியிருக்கும். பெற்றோர்களின் எண்ணங்களில் தாக்கத்தை ஏற்படுத்துவதில் குழந்தைகளின் பங்கு தலையாயது. குழந்தையை பார்த்துக் கொள்வதில் நீங்கள் எடுத்துக் கொள்ளும் பொறுப்பு, உங்கள் குடும்ப பிரச்சனைகளை தீர்க்கும்.

## கவனத்தை திசை திருப்புங்கள்

நாள் முழுவதும் பிஸியாக இருக்க சிறந்த வழிகளில் ஒன்று குழந்தை பெற்றுக் கொள்வது. இதன் மூலம் உங்கள் துணைவருடன் சண்டை போட காரணத்தைத் தேடும் நேரம் பெருமளவு குறைந்து விடும். உங்கள் குழந்தையுடன் நேரத்தை செலவிட தயாராகிக் கொண்டு, மண வாழ்வு தொடர்பான பிரச்சனைகளை மூட்டை கட்டுங்கள்.

## மென்மையான சூழலை உருவாக்குங்கள்

உங்கள் குழந்தையின் வரவால் நீங்கள் இருக்கும் சூழல் தற்செயலாகவோ அல்லது நோக்கத்துடனோ மென்மையானதாக மாறிவிடும். உங்கள் குழந்தையை தலையிடச் செய்வதன் மூலம் உங்களால் சில மண வாழ்க்கைப் பிரச்சனைகளுக்கு தீர்வு காண முடியும்.

## ஒரு முறைக்கு இரண்டு முறை யோசித்தல்

நாம் பேசும் உரையாடல்களின் தொணி எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை தீர்மானிப்பதில் குழந்தையின் வருகை முக்கிய பங்கு வகிக்கிறது. உங்களுக்கு குழந்தை இருந்தால் நீங்கள் ஒன்றுக்கு இரண்டு முறை யோசித்து தான் பேசுவீர்கள். இதன் காரணமாகவே உங்கள் பிரச்சனைகள் சமநிலைக்கு வரவும், மண வாழ்வு பிரச்சனைகள் தீர்க்கப்படவும் வாய்ப்புகள் உருவாகும்.

## நீங்களும் குழந்தையாக மாறுங்கள்!

உங்கள் குழந்தையுடன் நேரத்தை கழியுங்கள், உங்களுக்குள் உள்ள குழந்தை தானாக வெளிவரும். இதன் மூலம் உங்கள் மனது கனமாகும் சூழல்கள் குறைந்து, நீங்கள் ஒரு அற்புதமான துணைவராக வலம் வரத் துவங்குவீர்கள்.

## பொறுமை அதிகரித்தல்

நீங்களோ அல்லது உங்கள் துணைவரோ மண வாழ்க்கையில் பிரச்சனைகளை சந்திக்கிறீர்கள் என்றால் அதற்கு முதன்மையான காரணங்களில் ஒன்றாக அடிக்கடி கோபப்படும் குணம் இருந்தால், நீங்கள் குழந்தை பெற்றுக் கொள்வதில் எந்தவித தயக்கமும் கொள்ள வேண்டாம். குழந்தை உங்களுடைய பொறுமையை அதிகப்படுத்தவும், உங்கள் வாழ்வில் அதனை பிரதிபலிக்கவும் செய்யும்.

## மகிழ்ச்சியின் கதவு திறக்கட்டும்

உங்களுடைய மண வாழ்க்கையில் மகிழ்ச்சியின் கதவுகளை திறப்பதில் குழந்தை பெரும்பங்கு வகிக்கிறது. மண வாழ்க்கையின் பிரச்சனைகளை தாண்டி மகிழ்ச்சியை அனுபவிக்க வேண்டும் என்று நினைத்தால், உங்கள் துணையிடம் குழந்தை பெற்றுக் கொள்வதன் அவசியத்தை வலியுறுத்துங்கள்.

## ஒழுக்கம் மற்றும் கொள்கைகளை பின்பற்றுதல்




நீங்கள் செய்யும் ஒவ்வொரு செயலையும் உங்கள் குழந்தை பார்க்கவும், கற்றுக் கொண்டு திரும்பச் செய்யவும் கூடும். அவனுக்கு ஒரு முன்மாதிரியாக நீங்கள் இருக்கும் சூழல்களில், நீங்கள் ஒழுக்கத்தையும், கொள்கைகளையும் பின்பற்ற கற்றுக் கொடுக்கும் பொருட்டாக பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டியிருக்கும். இதன் மூலம் உங்கள் துணையும் மகிழ்ச்சியடைந்து மண வாழ்வில் இன்பம் பொங்கும்.

## சிறந்த மன ரீதியான பலமாக இருந்தல்

மண வாழ்வில் வரும் பெரும்பாலான பிரச்சனைகளை மன ரீதியான சச்சரவுகள் தான். ஒரு குழந்தையைப் பெற்றுக் கொள்வதன் மூலம் நீங்கள் மன ரீதியாக பலம் பெறுவீர்கள். எனவே, உங்கள் குழந்தையின் காரணமாக மண வாழ்வின் பிரச்சனைகள் தவிர்க்கப்படுவதுடன், மன ரீதியாகவும் நீங்கள் பலமானவராக விளங்குவீர்கள்.



இலக்கியத்தில் பொங்கல் இல்லத்தில் பொங்கல்

# பொங்கலோ! பொங்கல்!!



- முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்-

'பொங்கல்' என்ற தமிழ்ச்சொல் காதில் விழும்போது நமது வாயில் நீர் ஊறும். தமிழர் வாழ்வியலில் பொங்கல் ஒரு சிறப்பான உணவு மட்டுமல்ல பண்பாட்டின் குறியீடாகவும் உள்ளது. பொங்கல் என்ற சொல் தைத்திங்களோடு இணைந்து 'தைப்பொங்கல்' என்ற சிறப்புத் தொடராக இன்று விளங்குகிறது. தமிழர் வாழும் இடமெல்லாம் இன்று தைப்போங்கல் விழாவாகக் கொண்டா டப்படுகிறது. 'பொங்கல்' என்பது ஒரு சுவையான உணவு. அது எப்படி தைத்திங்களோடு இணைந்தது என்பது இன்றைய இளையவரது கேள்வி. இதற்கு மறுமொழியைத் தெளிவாகக் கூற முனைவதே இச்சிறு கட்டுரையின் இலக்காகும்.

ஏறக்குறைய 100 வருடங்களுக்கு முன்னர் இத்தகைய கேள்வி எழுவதற்கு இடமில்லை. ஏனெனில் தமிழர் வாழ்வியலில் தைப்பொங்கல் ஒரு காலத்தின் வருகையாக எல்லோராலும் நன்கு உணரப்பட்டிருந்தது. மனித உழைப்பின் பயனைச் சுவைக்கும் முதல் நாளாக இந்த நாள் முக்கியத்துவம் பெற்றிருந்தது. இன்று எந்திரங்களால் வேகமாகச் செய்யப்படும் உணவு வகையை சுவைக்கும் இளைய தலைமுறையினர் இந்த நாளை எதிர்பார்த்திருக்கும் நிலையிலும் இல்லை. அவர்கள் மூலப்பொருள் அறியும் வாய்ப்பை இழந்தவர்கள். அவர்களின் உணவுப் பண்டங்களின் மூலப்பொருள் பற்றி அறிவுறுத்தும் பண்பாட்டுப் பயிற்சியே தைப்பொங்கலாகும்.

பொங்கல் செய்வதற்குத் தேவையான பொருட்களில் முதன்மையானது அரிசி. இந்த அரிசியைப் பெறும் முயற்சியை இன்றைய தலைமுறை மேற்கொள்ளத் தயங்குகிறது. விஞ்ஞானத்தின் ஆற்றலால் தொழில்நுட்ப வளர்ச்சியால் எல்லாவற்றையும் ஆக்கலாம் என்ற நம்பிக்கை அவர்கள் உள்ளத்திலே ஊறிவிட்டது. ஆனால் நமது முன்னோர்கள் அரிசியைப் பெறும் முயற்சியில் பெரிதும் ஈடுபட்டிருந்தார்கள். அம்முயற்சி பற்றிய குறிப்புகள் ஏறக்குறைய 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட இலக்கியங்களிலே பதிவு செய்யப்பட்டுள்ளன. அப்பதிவுக் குறிப்புகளை அகழ்வாராய்வுச் சான்றுகளும் உறுதிசெய்துள்ளன.

பண்டைத்தமிழ் இலக்கியமான சங்கப்பாடல்கள் தமிழரது பண்பட்ட வாழ்வியல் பற்றிப் பல குறிப்புகளைத் தருகின்றன. அவற்றில் தமிழர்களது உணவுப் பண்பாடு பற்றிய விளக்கமான குறிப்புகளும் அடங்கியுள்ளன. அக்குறிப்புகளைத் தொகுத்து நுணுக்கமாக நோக்கும்போது இரு வகையான உணவுப் பண்பாட்டை அவர்கள் மேற்கொண்டிருந்தமையை அறிய முடிகிறது. ஒன்று தினையரிசிப் பண்பாடு. மற்றது நெல்லரிசிப் பண்பாடு.

தினையரிசிப் பண்பாடு

தமிழர் வாழ்விடங்கள் பற்றிய விளக்கமாக ஐவகை நிலங்களைச் சங்கப் பாடல்கள் காட்டுகின்றன. அவை வருமாறு அமையும்:

1.மலையும் மலை சார்ந்த இடமும் **குறிஞ்சி நிலம்**
2.காடும் காடு சார்ந்த இடமும் **முல்லை நிலம்**
3.வரண்ட இடைநிலம் **பாலை நிலம்**
4.வயலும் வயல் சார்ந்த இடமும் **மருத நிலம்**
5.கடலும் கடல் சார்ந்த இடமும் **நெய்தல் நிலம்**

இந்நிலங்களில் குறிஞ்சி நிலத்தில் வாழ்வோர் உணவுத் தேவைக்காக முதலில் வேட்டை யாடினர். நிலையாக ஓரிடத்தில் தங்கி வாழும்போது காட்டை எரித்து நிலத்தைப் பண்படுத்தித் தானியங்களை விதைத்தனர். தினை, சாமை, கொள்ளு, வரகு, எள்ளு, அவரை, உழுந்து, பயறு போன்ற சிறுபயிர்களை விதைத்து அவற்றின் கூலங்களை உணவாகப் பயன்படுத்தினர். இவற்றை விதைக்கும்போது தினையே பெரும் பயன் தரும் பயிராக இருந்தது. அதன் அரிசியை ஓராண்டு பழுதுறாமல் பயன்படுத்த முடிந்தது. வரகரிசியை விட சுவை மிகுந்ததாகவும் இருந்தது.

தினையரிசியிலே முதலில் பொங்கல் பண்பாட்டு நிலையில் செய்யப்பட்டுள்ளது. அதனைப் புறநானூறு 168ஆம் பாடல் பதிவுசெய்துள்ளது. இந்நடைமுறை 'புதிதுண்ணல்' எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. மலைச்சாரலில் கொழுவிய கிழங்குகளைக் கிழறிய பன்றியால் உழுது பண்படுத்திய நிலம். அந்த புழுதி நிலத்திலே நல்ல நாள் பார்த்து குறவர் அந்த நிலத்தை மீண்டும் உழுது பண்படுத்தாது சிறிய தினையை விதைக்கிறார்கள். அத்தினை வளர்ந்து முற்றிய கதிரை நல்ல நாளிலே கொய்து அரிசியாக்குகின்றனர். அந்த அரிசியைப் 'புதிதுண்ணல்' நடைமுறைக்காக மரையாவிலே கறந்த பாலை மான் இறைச்சி புழுக்கிய நிணம் தோய்ந்த வெளிய நிறமுடைய பானையிலே கழுவாது உலைநீராக வார்த்து அடுப்பிலே வைத்துச் சந்தன விறகால் எரித்து உருவாக்கப்பட்ட பாற்சோற்றை அகன்ற வாழையிலையிலே பலரோடு பகுத்து உண்கிறார்கள். இது தினையரிசிப் பொங்கல் விழாவாகும்.

பெரும்பாணாற்றுப்படையில் 'வரகரிசிப் பொங்கல்' பற்றிய பதிவு உள்ளது. மழைக்கால முகிலை ஒத்த வரகு வைக்கோல் வேய்ந்த குடிலின் முன்றிலில் வரகரிசியோடு அவரைப் பருப்பையும் சேர்த்து ஆக்குகின்ற இன்சுவை மூரல் உண்ணும் நடைமுறை குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இங்கு பொங்கல் என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை. ஆனால் அகநானூறு 393ஆம் பாடலில் "குடவர் புழுக்கிய பொங்கவிழ்ப் புன்கம்" என்ற தொடர் வரகரிசியிலே ஆக்கிய பொங்கல் பற்றிய விளக்கத்தைத் தந்துள்ளது. 'பொங்கு' என அடைமொழி நிலையில் பயன்பட்ட இச்சொல்லே பின்னர் 'பொங்கல்' என்ற உணவுச் சொல்லாக மாறியுள்ளது.

**நெல்லரிசிப் பண்பாடு**

தினைப்பயிர்ச்செய்கையோடு மலைச்சாரலிலே சிறிய அளவிலே நெற்செய்கை நடைபெற் றுள்ளது. ஏனைய நிலப்பகுதிகளும் நெற்செய்கையை மேற்கொண்டமைக்குப் பல இலக்கியச் சான்றுகளுள்ளன. நெல்லரிசியிலே பல்வேறு வகையான உணவுகள் ஆக்கி உண்ணும் நடைமுறைகளும் பதிவுசெய்யப்பட்டுள்ளன. அடிசில், அமுது, அமலை, அவிழ், உவியல், சொன்றி, சோறு, கூழ், பலி, புழுக்கல், புன்கம், மூரல் எனப் பல வகைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

தைமாதம் 'தையூண்' எனச் சிறப்பான உணவு உண்ணும் வழக்கம் பதிவுசெய்யப்பட்டுள்ளது. நற்றிணை 22ஆம் பாடல் 'தையூண்' இருக்கை பற்றிக் குறிப்பிடுகிறது. தைமாதம் நெற்பயிரச் செய்கையின் பயன்பெறும் மாதமாகும். வயலும் வயல் சார்ந்த இடமுமாகிய மருதநிலத்திலே ஆடிமாதம் நிலத்தை உழுது நன்கு பண்படுத்தி நெல்லை விதைப்பர்.

அது பயிராகி கார்காலம் கதிர் ஈன்று தைமாதம் அறுவடை செய்யும் நிலை பெறும். அக் கதிரை அறுத்து தைமாதம் பொங்கல் செய்து இறைவனுக்கு மடையிடுவர். இந்நடைமுறை 'தைப்பொங்கல்' எனச் சிறப்பாக இன்றுவரை தொடர்கிறது. இப்பொங்கல் அரிசியுடன் பயறும் பாலும் தேனும் சேர்த்து இனிய பொங்கலாக தமிழர் மரபுத் திங்களின் முதல் நாளிலே செய்யப்பட்டது.

தொடர்ச்சி 26ம் பக்கம்



## இலக்கியத்தில் பொங்கல் இல்லத்தில் பொங்கல்

25ம் பக்கத் தொடர்ச்சி



இப்பொங்கல் பின்னர் பூப்பு, திருமணம் போன்ற நடைமுறைகளிலும் மரபான உணவாக அமைந்தது. கோயில் வழிபாட்டிலும் மடைப்பொருளாகச் சிறப்புற்றது. நெல்லரிசியால் ஆக்கப் பெறும் உணவு வகைகளைப் பிற்காலத்தே தோன்றிய திவாகரம் நிகண்டு பின்வருமாறு குறிப்பிடு கின்றது. புன்கம், சோறு, பொம்மல், போனகம், அன்னம், ஓதனம், அயினி, அடிசில், பாளிதம், பொருவு, மிசை, பரல், துப்பு, அசனம், அமலை, உணவு, மிதவை, கவளம், சொன்றி, நிமிரல், மடை, கூழ், புழுக்கல், மூரல், பதம், வல்சி. இவ்வகைப்பாடுகள் நெல்லரிசிப் பண்பாட்டின் வளர்ச்சி நிலையை நன்கு உணர்த்துகின்றன. சூடாமணி நிகண்டிலே அரிசியால் ஆக்கப்படும் உணவு வகைகள் விரிவாகத் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. இன்றைய உணவு வகைகள் யாவும் அக்காலத்தில் பயன்பாட்டில் இருந்தமை நன்கு உணரப்படுகிறது.

நெல்லரிசிப் பண்பாடு வெறுமனே உணவுத் தேடலுடன் மட்டும் நின்றுவிடாது தமிழரின் ஏனைய பண்பாட்டம்சங்களையும் பழைய மாட்டுக் குடில்களையும் தீயிலிட்டு எரித்தல், தோரணம் தொங்கவிடல், புதுநீர் அள்ளல், காகத்திற்கு உணவிடல், வீட்டைச் சுற்றி ஆரவாரம் செய்தல், மரங்களுக்கு உலக்கையால் அடித்தல், புத்தாடை உடுத்தல், குடும்பத்தவர் ஒன்று கூடல், ஆடல் பாடல் நிகழ்த்தல், ஆயுதப்பயிற்சி, பட்டம் விடல், வெடி கொழுத்துதல், விடுமுறை அளித்தல் எனப் பல செயற்பாடுகள் தைப்பொங்கல் நாளிலும், முதல் நாளிலும், மறு நாளிலும் நடைபெறும். அதனால் இன்று தைப்பொங்கல், மாட்டுப்பொங்கல், காணும்பொங்கல் எனத் தொடர் விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

யப்பானிலும் நெல்லரிசிப் பண்பாடு பண்டைக் காலத்திலே இருந்தமையால் தைமாதம் முதல்நாள் புதிய ஆண்டின் வருகையாகப் பொங்கலிட்டுக் கொண்டாடப்படுகிறது. மேற்கூறிய தமிழர் விழா நடைமுறைகள் யாவும் இன்றும் அங்கு நடைமுறையிலுள்ளன. கட்டுரையாளரது தமிழர்-யப்பானியர் வாழ்வில் தைப்பொங்கல் என்னும் நூல் இதுபற்றி விரிவாக விளக்கி உள்ளது. தைப்பொங்கல் இன்று உழவர் பொங்கலாக எல்லோரும் கொண்டாடும் விழாவாக மாறிவிட்டது. உழவுத்தொழில் செய்யாத மற்றையோரும் ஆண்டின் முதல்நாள் விழாவாக அதனை ஏற்றுப் பண்பாட்டு விழாவாகக் கொண்டாடுகின்றனர். வயிற்றுக்கு உணவாகும் அரிசி பொங்கலாகி எல்லோர் வயிற்றையும் குளிரச்செய்கிறது. தைப்பொங்கலாகித் தமிழர் பண்பாட்டை உலகம் அறிய வைத்துள்ளது.

## கடுகு மணி 4

### காய்ப்பியோ? பூப்பியோ?



காய்க்காத மரத்துக்கு முன்னாலே
ஒரு கத்தியோடு போய்நின்று
“நீ காய்க்காவிட்டால் உன்னை
வெட்டிவிடுவேன்” என்று கூறினால் அம்மரம்
அடுத்தமுறை காய்க்கத் தொடங்கிவிடுமாம்
என்ற நம்பிக்கை நம்மிடையே
இருந்துவந்துள்ளது.

பல ஆண்டுகளுக்கு முன்னர் தைப்பொங்கலன்று பொங்கல் பொங்கி இறக்கிய பின்னர், பொங்கிய வீட்டுத் தலைவன் பொங்கல் அகப்பையாலே காய்க்காத மரங்களுக்கு “காய்ப்பியோ? பூப்பியோ?” என்று கேட்டு அடிப்பதுண்டாம். அம்மரங்கள் பெரும்பாலும் அடுத்த ஆண்டு காய்ப்பது வழக்கமாம் எனக் கேட்டிருக்கிறோம்.

யப்பானிலே முற்காலத்தில் தைத்திங்கள் 15ஆம் நாளன்று பொங்கலிட்டுள்ளனர். அவ்வாறு பொங்கல் செய்த அகப்பையாலே வீட்டுத் தலைவர் காய்க்காத மரங்களுக்கு “நறுக்கா? நறுநுக்கா?” (காய்ப்பியோ பூப்பியோ) என்று அடிப்பாராம். வீட்டிலே பிள்ளையில்லாமல் யாராவது பெண் இருந்தால் அவளுக்கும் “நறுக்கா? நறுநுக்கா?” என்று அகப்பையாலே பின்புறத்தில் அடிப்பாராம்.

நம்பினார் கெடுவதில்லை!

**பேராசிரியர் அ. சண்முகதாஸ்**


Nirubagini Magendiran .LLM


Tamil- Deutsch
Deutsch- TamilTel: 0176/ 24012135
Email:
nirumagendiran@hotmail.com

Vereidigte Dolmetscherin
und
ermächtigte Übersetzerin

மொழிபெயர்ப்பாளர்
தமிழ்
யேர்மன்
யேர்மன்
தமிழ்


## பாராளுமன்றத்தில் பட்டிமன்றம்!

## இராவணேஸ்வரன் தமிழனா - சிங்களவனா?



இராவணேஸ்வரன் தமிழனா - சிங்களவனா? இலங்கை இந்து நாடா? பௌத்த நாடா? என்பது தொடர்பில் அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி.யான சீ.யோகேஸ்வரனுக்கும் இடையில் சபையில் கடும்வாதம் ஏற்பட்டது.

இலங்கை இந்து நாடு என்றும் சிவபக்தனான இராவணேஸ்வர மன்னன் இலங்கையை அரசாட்சி புரிந்ததாகவும் கூறி வரலாறுகளை எடுத்துக்காட்டிப் பேசினார். இதன்போது யோகேஸ்வரன் எம்.பி.யின் எடுத்துக்காட்டல்களை உடனடியாக மறுத்துரைத்த அமைச்சர் மேர்வின் சில்வா, யோகேஸ்வரன் எம்.பி.யின் கருத்துக்கு மாறான வாதத்தை முன்வைத்து இதிகாசங்களையும் சுட்டிக்காட்டினார். இதன்போது இராவணேஸ்வரன் மன்னன் சிங்களவன் என்றும் இலங்கை பௌத்த நாடு என்றும் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமர்வின் போதே இந்த வாதங்கள் இடம்பெற்றன.

முன்னதாகப் பேசிய யோகேஸ்வரன் எம்.பி. இலங்கை என்பது இந்து நாடு என்பதற்கு சான்றுகள் இருப்பதாகக் கூறி வரலாற்று தடயங்களையும் முன்வைத்தார். அத்துடன் இராவணேசன் என்ற மன்னன் இலங்கையை ஆட்சிபுரிந்த தமிழன் என்றும் தேவநம்பிய திஸ்ஸ மன்னன் இந்து மதத்தின் பால் ஈர்க்கப்பட்டு தனது மகன்மாருக்கு இந்து மதப் பெயர்களை சூட்டிய வரலாறும் இருப்பதாக சுட்டிக்காட்டினார்.

இதன் பின்னர் பேசிய அமைச்சர் மேர்வின் சில்வா கூறுகையில், இலங்கை என்பது பௌத்த நாடாகும். அதில் மாற்றங்களுக்கு இடமில்லை. மேலும் இராவணேஸ்வரன் சிங்கள மன்னனாவான். புத்தகங்கள் எதனையும் கூறமுடியாது. அது வரலாறு ஆகிவிடாது. அதே போன்று இந்துப் பெண்களை திருமணம் முடித்தால் இந்த நாடு இந்து நாடாக மாறிவிடாது. வரலாறுகளை திசை திருப்புவதற்கு முயற்சிக்க வேண்டாம் என்றார்.


அன்று யாழ் நகரில் ஓர் மொக்கன் கடை! இன்று அதே சுவையுடன் டோட்மூண்ட் நகரில் ஓர் நானா கடை அதுதான்

Sweet Chilli

www.sweetchilli-do.de

Original Srilankisches & Indisches Restaurant
50 Sitzplätze
100%Halal 100%Frisch 100%Naturgewürze 100%Naturkräuter


இலங்கை புரியாணி (ஒரிஜினால்) கொத்துரொட்டி, இடியப்பகொத்து, புட்டுக்கொத்து, தோசை,மட்டன்றோல். பற்றிஸ் மற்றும் ஊர் ஆட்டிறைச்சிக் கறி, ரோஸ்கறி, கோழிக்கறி.அத்துடன் இந்திய உணவுவகைகள்,அனைத்தும் ஒரே கூரையின் கீழ் .தினமும் காலை 11.30 இருந்து மாலை 23.30 வரை

Tel: 0231 315 46 84
Rheinische str.60
44137 Dortmund

Herzlich Willkommen!
Buffet & Party Service



# எனக்கு இராசி 9-ம் எண்தான்! இதை மறைக்க என்ன உண்டு!




ஹன்சிகா ஹோட்டல்களில் 9-ம் எண் கொண்ட அறையை புக் பண்ணச் சொல்வது உண்மைதான். இது எனக்கு ராசியான எண் என்பதால் அப்படிச் சொல்கிறேன், என்று விளக்கம் அளித்தார் ஹன்சிகா. நடிகைகளில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு (மூட?)நம்பிக்கை. அதை சென்டிமென்ட் என்று செல்ல பெருமை கொஞ்சுவார்கள். 9-ம் எண் எனக்கு ராசி.. இதையெல்லாமா குறை சொல்வீங்க? - ஹன்சிகா குறிப்பாக எண்களில் அபார நம்பிக்கை. நடிகை ஹன்சிகாவுக்கு 9 - ம் நம்பர் மீது அபார நம்பிக்கை. வெளியூர் - உள்ளூர் படப்பிடிப்புகளுக்கு சென்று ஓட்டல்களில் தங்கும்போது 9-ம் நம்பர் அறையை கேட்டு வாங்குகிறார். அந்த அறை கிடைக்காவிட்டால் கூட்டு எண் '9“ என வரும்படியான அறைகளில்தாம் தங்குகிறார். 9-ம் எண் எனக்கு ராசி.. இதையெல்லாமா குறை சொல்வீங்க? - ஹன்சிகா ஹன்சிகா 9-ம் நம்பர் அறை கிடைக்காத ஓட்டல்களில் தங்க மறுத்து வெளியேறி விடுகிறாராம். இதனால் ஹன்சிகாவுக்கு ரூம் போடுவதற்குள் நாக்குத் தள்ளிவிடுகிறதாம் படக்குழுவினருக்கு. இந்த விவகாரம் ஒரு செய்தியாகவும் மீடியாவில் வெளியாக, அதற்கு விளக்கம் கொடுத்துள்ளார் ஹன்சிகா. அவர் கூறுகையில், ”என்னைவிட எனது அம்மாவுக்கு அதிர்ஷ்ட விஷயங்களில் நம்பிக்கை அதிகம். '9“-ம் எண்தான் எனக்கு அதிர்ஷ்டம். நீண்ட நாட்களாகவே 9-ம் நம்பர் என்னுடன் வருகிறது. பள்ளியில் படித்தபோது என் ரோல் 'நம்பர் 9“ எனது வீட்டு நம்பரும் ஒன்பதுதான். கார் லைசென்ஸ் நம்பரை கூட்டினாலும் ஒன்பது வரும். 9-ம் எண் எனக்கு ராசி.. இதையெல்லாமா குறை சொல்வீங்க? - ஹன்சிகா ஹன்சிகா எனவேதான் ஓட்டல்களில் தங்கும்போதுதான் அறை எண் ஒன்பது என்றோ, அல்லது கூட்டு எண் ஒன்பதாக வரும்படியோ பார்த்துக் கொள்கிறேன். இது எனக்கு அதிஷ்ட எண்ணாக இருக்கிறது. இதில் யாருக்கு என்ன பிரச்சினை? இதைப் போய் குறை சொல்கிறார்களே?,” என்றார்.




3ம் பக்கத் தொடர்ச்சி....

**ஜெனீவாவில் அமெரிக்கா சமர்ப்பிக்கவுள்ள பிரேரணையும்....**



தமிழ் அரசியல் தலைமைகளினால் எதுவும் செய்யமுடியாது என்ற நிலை தற்போது வந்து விட்டது அஹிம்சைப் போராட்டம், ஆயுதப் போராட்டம் என்று தொடராக போராட்டங்களை சந்தித்த மக்கள் மீண்டும் ஒரு போராட்டத்தை காண விரும்பவில்லை, ஆனால் அவர்களிடம் நம்பிக்கை இருக்கின்றது தைரியம் உள்ளது நிரந்தர அரசியல் தீர்வுக்கான சர்வதேச ஆதரவை அவர்கள் எதிர்பார்க்கின்றனர். ஜெனவீவா மனித உரிமைச் சபை கூடவுள்ள நிலையில் இலங்கை மீதான கண்ட தீர்மானங்களை விட ஆரோக்கியமான அரசியல் தீர்வுக்கான கடும் நிபந்தணைகள் விதிக்கப்பட வேண்டும். உலக அரசியல் ஒழுங்குடன் இலங்கை அரசாங்கம் ஒத்துப் போக வேண்டும் என்ற பரிந்துரைகள் முன்வைக்கப்பட வேண்டும்.

### உலக நாடுகளின் கவனம்?

அதாவது மனித உரிமைகளுக்கும் ஜனநாயகத்துக்கும் ஒத்துப்போகாத அதனை மதிக்காத நாடுகளுடன் இலங்கை அரசாங்கம் உறவுகளை வைத்துக்கொண்டு ஐரோப்பிய நாடுகளையும் ஏமாற்றி தான் நினைத்தை செய்து முடிக்கின்ற அரசியல் பண்புகளை மாற்றுவதற்கான கடுமையான யோசனைகளை அமெரிக்கா, கனடா போன்ற நாடுகள் பரிந்துரைக்கலாம்.

இலங்கை ஒரு சிறிய நாடு அந்த நாடு தான் விரும்பிய நாடுகளுடன் உறவுகளை வைத்து தனக்கு தேவையானவற்றை பெறட்டும் என்ற நல்ல நோக்கில் உலக நாடுகள் விட்டுக் கொடுப்பதை அல்லது பொறுத்துக் கொண்டிருப்பதை சாதகமாக பயன்படுத்திக் கொண்டு தமிழர்களின் அரசியல் இருப்புக்கு உலை வைக்கின்ற வேலைத் திட்டங்களை அரசாங்கம் முன்னெடுப்பதை நிறுத்த, குறைந்த பட்சமேனும் உலக நாடுகள் கவனம் செலுத்த வேண்டும்.

பிராந்நதிய அரசியல் நலன் மற்றும் லாபங்களை மாத்திரம் கருத்தில் கொண்டு உலக நாடுகள் குறிப்பாக அமெரிக்கா, கனடா, பிரித்தானியா அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் இலங்கை விடயத்தில் தொடர்ந்து செயற்படுமானால் தமிழர்கள் பிரச்சினைக்கு உலகம் அழியும் வரை தீர்வுகிட்டாது.

இந்தியா அயல்நாடு இந்திய தமிழர் பிரச்சினையை பாாத்துக்கொள்ளும் என்று கருதியும் உலக நாடுகள் செயற்படுமானால் அது இன்னும் ஆபத்தான நிலைக்கு தள்ளப்படும் அல்லது தள்ளப்பட்டு விட்டது என்றும் கூறலாம்.

60ஆண்டுகள் காலம் கடந்து சென்றமைக்கு இந்திய அரசின் லாபங்கள் பிரதான காரணம். ஆகவே இந்த நிலைமைகளை அறிந்துகொண்டு நேர்மையான முறையில் உலக நாடுகள் சிந்திக்க வேண்டும் அதற்கு ஜெனீவா கூட்டத்தொடர் வழிசமைக்கட்டும்.

ஸ்ரீ வீராட் விஸ்வ குலபிரமனே நமக! வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் துணை

**E.S.T.M Jewellery & Schmuck**

நவீன உயர்தர டிசைன்களில் நகைகள், திருமண
ஆபரணங்கள், ஓடர் நகைகள், திருத்த வேலைகள்,
யாவும் செய்து கொடுக்கப்படும்.
தாலிக்குப் பொன்னுருக்குதல்,
காது மூக்குக்குத்துதல் போன்ற
நல்ல காரியங்களும் செய்து
கொடுக்கப்படும். பழைய
நகைகளுக்குப் பதிலாக சிங்கப்பூர்
நகைகள் மாற்றிக் கொடுக்கப்படும்.
உரிமையாளர்:
சின்னத்துரை தயாகரன்
Handy:01633642642

Rheinische Str.73
44137 Dortmund



# இளவரசி டயானா மரணம் கொலையல்ல... விபத்து தான்: பிரிட்டன் போலீசார் திட்டவட்டம்



இளவரசி டயானா மரணம் கொலையல்ல... விபத்து தான்: பிரிட்டன் போலீசார் திட்டவட்டம்

லண்டன்: இளவரசி டயானா மரணம் விபத்தல்ல, கொலை என எழுந்தக் குற்றச்சாட்டை திட்டவட்டமாக மறுத்துள்ளனர் பிரிட்டன் போலீசார். கடந்த 1997ம் ஆண்டு பாரீஸில் நடந்த கார் விபத்து ஒன்றில் இங்கிலாந்து இளவரசர் சார்லசின் மனைவி டயானா உயிரிழந்தார். ஆனால் இது திட்டமிட்டு நடத்தப்பட்ட படு கொலை என சர்ச்சை எழுந்தது. இதில் பிரிட்டன் சிறப்பு விமானப் படையினருக்கு தொடர்பு உண்டு என்றும் கூறப்பட்டது. அப்படையில் பணியாற்றிய வீரர் ஒருவரின் மனைவி இதற்கான ஆதாரத்தை ஸ்காட்லாந்து யார்டு போலீஸாரிடம் கடந்த ஆகஸ்ட் மாதம் அளித்தார். அந்த ஆதாரங்களை ஆய்வு செய்த போலீஸார், அவை வலுவானதாகவும், நம்பகத்தன்மை உடையதாகவும் இல்லை என்று கூறி டயானா கொலை செய்யப்பட்டார் என்ற குற்றச்சாட்டை நிராகரித்துள்ளதனர்.

இளவரசி டயானா.... இங்கிலாந்து இளவரசர் சார்லசை காதல் திருமணம் செய்து கொண்டவர் டயானா. இவர்களுக்கு வில்லியம், ஹரி என இரண்டு ஆண் குழந்தைகள் உள்ளனர். சார்லசுடன் வாழ்ந்த போதே தான் வேறொருவரைக் காதலிப்பதாக அறிவித்தார் டயானா.

விவாகரத்து செய்ய .... இங்கிலாந்து ராஜ குடும்பத்தையே அதிர்ச்சிக்குள்ளாக்கிய இந்த அறிவிப்பால், டயானாவை விவாகரத்து செய்து விடும்படி சார்லசை ராணி எலிசபெத் வற்புறுத்தினார்.



விபத்தில் பலி.... இந்நிலையில் கடந்த 1997ம் ஆண்டு ஆண்ட காதலர் டோடி ஃபயீத்துடன் பாரீஸ் நகரில் காரில் சென்ற போது தங்களை புகைப்படம் எடுக்க துரத்தி வந்த பத்திரிகையாளர்களிடம் இருந்து தப்பிக்க காரை வேகமாக ஓட்டும்படி டிரைவருக்கு டயானா உத்தரவிட்டார். சுரங்கப்பாதை வழியாக சென்ற கார் பக்கசுவரில் மோதியதால் டயானா - டோடி ஃபயீத் இருவருமே விபத்தில் சிக்கி பலியாகினர்.

ரகசிய ஏற்பாடு.... இந்நிலையில், சில மாதங்களுக்கு முன்னர், முன்னாள் ராணுவ வீரர் ஒருவர் இங்கிலாந்தின் உளவுத் துறையின் ரகசிய ஏற்பாட்டின் படி, அரச குடும்பம் தான் டயானாவை கொன்று விட்டது என குற்றம் சாட்டினார்.

புதிய புத்தகம்.... அதனைத் தொடர்ந்து அலன் பவர் என்பவர் டயானாவின் மர்ம மரணம் தொடர்பாக புதிய புத்தகம் ஒன்றினை வெளியிட்டுள்ளார்.

மருத்துவக் குறிப்பேடு... அதில், விபத்தில் சிக்கிய டயானாவை பாரீசில் உள்ள பிட்டி - சல்பெட்ரியர் ஆஸ்பத்திரிக்கு தூக்கி வந்தபோது அவரது வயிற்றை “எக்ஸ்-ரே“ எடுத்து பார்த்த டாக்டர் எலிசபத் டயான் மற்றும் செவிலிப் பெண் ஒருவர் வயிற்றினுள் 6 - 10 வார கருவினை கண்டதாகவும், இத்தகவல் ஆஸ்பத்திரி குறிப்பேடுகளில் பதிவு செய்யப் பட்டுள்ளதாக தெரிவித்திருந்தார்.



கௌரவக்கொலை.... மேலும், அரச குடும்பத்தின் கவுரவத்தை காப்பாற்றவே எம்-16 உளவாளிகளை ஏவி இங்கிலாந்து அரண்மனை டயானாவைக் கௌரவக்கொலை செய்து விட்டதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

மூடி மறைக்கப்பட்ட ரகசியம்.... கர்ப்பமாக இருந்த டயானாவின் வயிறு வெளியே தெரியாதபடி, டயானாவின் பிணத்தை தைலத்தில் போட்டு டோடி ஃபயீத்தின் குழந்தை அவரது கருவில் வளரும் ரகசியத்தை இங்கிலாந்து அரச வம்சத்தினர் மறைத்து விட்டதாகவும் அலன் பவர் தனது புத்தகத்தில் குறிப்பிட்டுருந்தார்.

அதிர்ச்சித் தகவல்கள்... அதனைத் தொடர்ந்து, டயானாவின் மரணத்தில் மர்மம் இருப்பதாகவும், அவர், திட்டமிட்டே கொலை செய்யப்பட்டதாகவும், அதிர்ச்சி தகவல்கள் வெளியாயின. இதில், பிரிட்டன் ராணுவ அதிகாரி ஒருவருக்கு முக்கிய தொடர்பு இருப்பதாகவும் சந்தேகிக்கப்பட்டது.

விசாரணை முடிந்தது.... இதையடுத்து, பிரிட்டன் போலீசார், இந்த வழக்கை விசாரித்து வந்தனர். பல கட்ட விசாரணைக்குப் பின், டயானாவின் மரணம் குறித்த விசாரணை முடிவுக்கு வந்துள்ளதாக, போலீசார் நேற்று முந்தினம் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் மரணம் உறுதி... இதுகுறித்து, பிரிட்டன் போலீசார் வெளியிட்டுள்ள தகவலில் கூறியதாவது, 'டயானாவின் மரணம் குறித்த விசாரணை முடிவுக்கு வந்துள்ளது. அவர், கொலை செய்யப்பட்டதற்கான எவ்வித ஆதாரங்களும் இல்லை. அவர், கார் விபத்தில் உயிரிழந்தது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்த முழு விசாரணை அறிக்கை, விரைவில் வெளியிடப்படும்“ என இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்






# அன்பே வா என்று அழைக்கிறது நம் இளமைக்காலம்

**பார்த்ததிலே ஒருத்தியைத்தான் நல்ல அழகி என்பேன்!, ராஜாவின் பார்வை ராணியின் பக்கம், மற்றும் அன்பே வா போன்ற பாடல்கள் இன்றும் இளைமை ஊட்டும் நினைவுகள்!**



எம்.ஜி.ஆரின் 'அன்பே வா' (1966)

**மக்கள்திலகம் பிறந்தநாள் நினைவாக 17.01.2014**

ஒரு நாள் இயக்குனர் யு.ஊ. திருலோகசந்தர் அவர்கள், சுழஉம ர்ரனளழெ நடித்த ஊழஅந ளுநிவநஅடிநச படத்தை பார்த்தார். அந்த படம் ஒரு Romantic Comedy வகைப் படம். இந்த படத்தின் மையக் கருவை மட்டும் எடுத்து தமிழிற்கு ஏற்றாற்போல் மாற்றி நாம் ஒரு படத்தை இயக்கினால் என்ன என்ற எண்ணம் தோன்றவே, அதை தன் ஆஸ்தான கம்பெனியின்

முதலாளி திரு. A.V. மெய்யப்ப செட்டியாரிடம் தெரிவித்தாராம். செட்டியாரும், "சரி, பண்ணலாம். யாரை ஹீரோவா போடலாம்னு இருக்க?" என்று அவர் கேட்க, அவர் ஒரு வித தயக்கத்தோடு "எம்.ஜி.ஆரை போட்டு படம் பண்ணலாம்னு இருக்கேன்" என்று சொன்னாராம். செட்டியாரோ "எம்.ஜி.ஆரா? அவர் நமக்கு தோது பட மாட்டாரே? அதுவுமில்லாம இது காதல் ரூ காமெடி கலந்த படம். அவர் இதுக்கு ஒத்துக்குவாருன்னு நினைக்கிறியா?" என்று கேட்க, அதற்க்கு A.C. திருலோக்கோ "நீங்க அனுமதி மட்டும் கொடுங்க. நான் போய் பேசி பார்கிறேன்" என்று சொன்னார். A.V.. மெய்யப்ப செட்டியாரும் அனுமதி கொடுக்க, எம்.ஜி.ஆரின் ராமாவரம் தோட்டத்திற்கு பறந்தது A.C. திருலோகசந்தரின் கார்.

ராமாவரம் தோட்டத்து வீட்டு ஹாலில் ஏற்கனவே பல தயாரிப்பு கம்பெனி மேனேஜர்களும், இயக்குனர்களும் எம்.ஜி.ஆரை தங்களின் அடுத்த படத்தில் புக் செய்ய காத்துக்கொண்டிருந்தார்கள். A.C.திருலோகசந்தரும் தான் வந்திருப்பதாக எம்.ஜி.ஆரிடம் தெரியப்படுத்த சொல்லிவிட்டு, அவரும் தலைவரின் வருகைக்காக காத்திருந்தார்.

எம்.ஜி.ஆருக்கு தகவல் தெரிவிக்கப்பட, அவர் "அவர் எங்க இந்தப்பக்கம்? அட்ரஸ் மாறி வந்துட்டாரா?" என்று சொன்னாராம். காரணம், A.V.. மெய்யப்ப செட்டியாருக்கு மிகவும் பிடித்த நடிகர் சிவாஜி கணேசன். அதனால் தான் எம்.ஜி.ஆர் அப்படி கேட்டார். சிறிது நேரம் கழித்து ஹாலுக்கு வந்த எம்.ஜி.ஆர், "உள்ளே வாங்க" என்று திருலோக்கை அழைத்து கதை கேட்க ஆரம்பித்தார். முழு கதையை கேட்ட எம்.ஜி.ஆர் "கதை நல்லா இருக்கு. ஆனா என் இரசிகர்களுக்கு பைட்டு சீன்ஸ் இருந்தா தான் பிடிக்கும். இதுல ஒரு ரெண்டு இடத்துல மட்டும் பைட்டு வைக்கிற மாதிரி திரைக்கதை வைங்க. நாம இந்த படத்தை பண்ணலாம்" என்று சொன்னாராம்.

அந்த படம் தான் இந்த "அன்பே வா".
படத்தின் கதை ரொம்ப சிம்பிள். பெரும் தொழிலதிபரான ஜே.பி, விடுமுறைக்காக சிம்லாவில் இருக்கும் தன் கெஸ்ட் ஹவுஸ்க்கு செல்கிறார். ஆனால் அந்த மாளிகையை நிர்வகிக்கும் வேலைக்காரன், வீட்டை வேறு ஒருவருக்கு வாடகைக்கு விட்டிருப்பதை அறிந்து கொள்ளும் ஜே.பி, அங்கே தன்னை பாலுவாக அறிமுகப்படுத்திக்கொண்டு சொந்த வீட்டிற்க்கே வாடகை கொடுத்துக்கொண்டு தங்க ஆரம்பிக்கிறார்.

ஏற்கனவே அந்த மாளிகையில் தங்கி வரும் கீதா என்ற பெண்ணுடன் சின்னத் சின்ன மோதல்கள் ஏற்பட்டு அதுவே காதலாக மாறுகிறது அவருக்கு. இருவரும் எப்படி இணைந்தார்கள் என்பதை மிகவும் பொழுது போக்காக காட்டியிருக்கும் படம் தான் இந்த "அன்பே வா".

படத்தின் ஒளிப்பதிவு, மாருதி ராவ். ஈஸ்டர் மேன் கலரில், சிம்லாவை மிகவும் அழகாக தன் கேமராவில் படம் பிடித்திருக்கிறார். பாடலாசிரியர் வாலி & M.S. விஸ்வநாதனின் கூட்டணியில் வெளிவந்த பாடல்கள் அனைத்தும் மயக்கும் ரகம். புதிய வானம், நான் பார்த்ததிலே, ராஜாவின் பார்வை, நாடோடி மற்றும் அன்பே வா போன்ற பாடல்கள் அனைத்தும் அருமை.



**மக்கள் திலகமும் நடிகர்திலகமும்**

"அன்பே வா" திரைப்படம், 1966 அன்று வெளிவந்து பெரும் வெற்றி பெற்றது. அந்த வருடத்தில் எம்.ஜி.ஆர் நடித்த 9 படங்களில், இந்த படம் தான் மிகப் பெரிய வெற்றி பெற்றது. இந்த படத்தை தயாரித்த ஏ.வி.எம் நிறுவனத்திற்கு ஆன தொகை, 30 லட்சம். ஆனால் வசூல் ஆன தொகையோ 62 லட்சம். ஏ.வி.எம் நிறுவனம், எம்.ஜி.ஆருக்கு தந்த சம்பளம் 3 லட்சம். இந்த படத்தின் சண்டைக் காட்சிகள் அனைத்தும், ராமாவரம் தோட்டத்தில் நன்றாக ரிகர்சல் பார்க்கப்பட்ட பின், படமாக்கப்பட்டது. காரணம், எம்.ஜி.ஆரின் தொழில் பக்தி மற்றும் ஸ்டன்ட் ஆட்களுக்கு எந்த காயமும் ஏற்படக்கூடாது என்ற அக்கறை. இந்த படம் வெள்ளிவிழாவை நோக்கிக் ஓடிக்கொண்டிருந்த போது, திடீரென்று அன்பே வா படம் அனைத்து திரையரங்குகளில் இருந்து தூக்கப்பட்டது. காரணம், ஏ.வி.எம்மின் மற்றொரு படம் திரைக்கு புதிதாக வந்திருந்தது. எம்.ஜி.ஆர் செட்டியாரிடம், "படம் வெள்ளிவிழா நாள் வரைக்கும் இருக்கட்டும். அப்போ தான் படத்துக்கு ஒரு Record கிடைக்கும்" என்று சொல்லியும் அவர் கேட்கவில்லை. அதனால் தான் எம்.ஜி.ஆருக்கு "அன்பே வா" திரைப்படம் ஏ.வி.எம் நிறுவனத்தோடு முதலும், கடைசியுமான படமாக போய் விட்டது.




எங்கள் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

# அமெரிக்காவை கண்டுபிடிக்கும்முன் கொலம்பசுக்கு திருமணமாகியிருந்தால்.....?





**சிரிக்கமட்டும்!**

1 ஏங்க எங்க போறீங்க?
2 யார்கூடப் போறீங்க?
3 ஏன் போறீங்க?
4 எப்படி போறீங்க?
5 என்ன கண்டுபிடிக்கப் போறீங்க?
6 ஏன் நீங்கமட்டும் போறீங்க?
7 நீங்க இல்லாம நான் என்ன பண்றது?
8 நானும் உங்ககூட வரட்டுமா?
9 எப்ப திரும்ப வருவீங்க?
10 எங்க சாப்பிடுவீங்க?
11 எனக்கு என்ன வாங்கிட்டு வருவீங்க?
12 இப்படி பண்ணணும்னு எனக்குத்தெரியாம எத்தனை நாளா பிளான் பண்ணிட்டுருந்தீங்க?
13 இன்னும் வேற என்னெல்லாம் பிளான் இருக்கு?
14 பதில் சொல்லுங்க ஏன்?
15 நான் எங்க அம்மா வீட்டுக்கு போகட்டுமா?
16 நீங்க என்னை அம்மாவீட்டுல கொண்டுபோய் விடுவீங்களா?
17 நான் இனி திரும்ப வரமாடடேன்
18 ஏன் பேசாம இருக்கீங்க ?
19 என்னைத் தடுத்து நிறுத்தமாட்டீங்களா?
20 இதுக்குமுன்னாடியும் எனக்குத்தெரியாம இந்தமாதிரிபண்ணிருக்கீங்களா?
21 எத்தின கேள்வி கேட்கிறன் ஏன் மரமண்டமாதிரி நிக்கிறீங்க ?
22 இப்ப பதில் சொல்றீங்களா இல்லையா???


இதுக்கு அப்புறமும் அவர் அமெரிக்காவை கண்டுபிடிக்க கிளம்பியிருப்பாருன்னு நினைக்கிறீங்களா?????




கறுப்பு வெள்ளைப் படம்போலே
மனத்திரையில் தினம் ஓடுகிறாய்

உன் மீசையில் என்னிறம் இருக்கும்
மனம் எங்கும் ஆசையில் துடிக்கும்
கன்னங்கள் அடிக்கடி சிவக்கும்
வண்ணம் கறுப்பிலும் பிறக்கும்

## வாழ்த்துக்கள்



செல்வி.நிருபாஜினி மகேந்திரன்.LLM

காமன் நகரைச் சேர்ந்த மகேந்திரன் தம்பதியரின் புதல்வி ஜேர்மன் சட்டத்துறைப் பட்டதாரியாகிய செல்வி. நிருபாஜினி மகேந்திரன். Universität Maastricht நெதர்லாந்து பல்கலைக் கழகத்தில் (European Law) ஐரோப்பியச் சட்ட முதுகலைமானி (Master) பட்டத்தைப் பெற்றுள்ளார்.
செல்வி.நிருபாஜினி மகேந்திரன்.LL.M
ரேணு, மது




# திரை உலகம்

## 2013- எனது பார்வையில் ..... Top 5

சேவியர்



### மரியான்

**இன்னும் கொஞ்ச நேரம் இருந்தால்தான் என்ன?**

**விழி அசைவுகள் எழுதிய கவிதை...**



சில படங்கள் கன கட்சிதமாக இல்லாவிட்டாலும் ஏதோ ஒரு வகையில் மனதைக் கவ்விக் கொள்ளும். அந்த வகையில் மரியான் படம் சிறப்பிடம் பெறுகிறது. ஏ.ஆர். ரஹ்மானின் அற்புதமான பின்னணி இசையும், பாடல்களும் படத்தை வலிமையாக்கியிருக்கின்றன. தேசிய விருதுக்காரன் தனுஷின் நடிப்பையும் மீறி பார்வதி மேனனின் விழி அசைவுகள் எழுதிய கவிதைகள் தான் அதிகம் பேசப்பட்டன, அல்லது பார்க்கப் பட்டன ! மனதைக் கொள்ளை கொள்ளும் படப்பிடிப்பும், ஒளிப்பதிவும், லொக்கேஷன்களும் மரியானைப் பிழைக்க வைத்தன. பரத் பாலாவின் இயக்கத்தில் வந்த மரியான் இந்த ஆண்டைய படங்களில் நிச்சயம் ஒரு தனி இடத்தைப் பிடித்திருக்கிறது.

### ஓநாயும் ஆட்டுக்குட்டியும்

நல்ல விமர்சனங்களையும், இணைய தள திட்டுகளையும் சரி விகிதத்தில் பெற்ற ஓநாயும் ஆட்டுக்குட்டியும் இந்த வரிசையில் வந்த சிறந்த படங்களில் ஒன்று. மிஷ்கினின் அழகிய கதை சொல்லும் யுத்தி, இசைஞானியின் சாகாவரம் பெற்ற இசை எனும் இரட்டை மாட்டு வண்டியில் படம் பிரமிப்பாய்ப் பயணிக்கிறது. பரபரப்பாய் இரண்டு மணி நேரம் பார்வையாளனை இருக்கையோடு ஒட்டிக் கொள்ளச் சொல்லும் வணிகப் படம் தான் இது. ஆனாலும் அதைச் சொன்ன வகையில் ஒரு கலை நேர்த்தியைப் புகுத்தி படத்தை ரசிக்க வைத்திருந்தார் மிஷ்கின் !

### ராஜா ராணி

ஒரு சூப்பர் டூப்பர் ஹிட் படத்தை அப்படியே அலேக்காகத் தூக்கி புத்தம் புதுச் சாயம் பூசி அதையும் சூப்பர் ஹிட்டாக்குவது எளிதல்ல. அதை அட்லீ சாதித்திருந்தார். மணி ரத்னம் எனும் முதல் வரிசை இயக்குனரின் பிரமாதமான படம் மௌனராகம். அது தான் சில பல அடித்தல் திருத்தல்களுடன் ராஜா ராணியாகியிருந்தது. இந்தப் படத்தின் வெற்றிக்குக் காரணம் ஸ்கிரீன் பிளே

என்று அடித்துச் சொல்லலாம். மூன்று காதலை ஒரு படத்துக்குள் கட்சிதமாகப் பொருத்தி, தியேட்டரை விட்டு பார்வையாளன் வெளியே வரும்போது எந்தக் கதாபாத்திரத்தையும் வெறுக்காமல் வெளியேறியது அனேகமாக இந்தப் படமாகத் தான் இருக்கும் ! சத்யராஜின் மென்மையான நடிப்பும், சத்யராஜ்-நயனின் தந்தை மகள் உறவும் தமிழுக்கு இனிமையான புதுமை. இசையில் வசீகரிக்காவிடிலும், கலை படப்பிடிப்பு என மற்ற விஷயங்கள் படத்துக்குப் பக்க பலமாய் இருந்தன.

### விடியும் முன்

திடீரென ஒரு படம் எங்கிருந்தோ முளைத்து சட்டென முண்டியடித்து முன்வரிசையில் வந்து உட்கார்ந்து விடும். அத்தகைய வரிசையில் கடந்த ஆண்டு மிரட்டிய படம் பிட்ஸா ! இந்த ஆண்டு விடியும் முன் ! படம் வெளியாகும் வரை இந்தப் படத்தைப் பற்றி யாரேனும் நினைத்திருப்பார்களா என்பதே சந்தேகம். ஆனால் ஒரு அக்மார்க் திரில்லர் படத்தை எப்படிக் கொடுக்க வேண்டும் என பலருக்கும் பாடம் எடுத்திருக்கிறார் அறிமுக இயக்குனர் பாலாஜி கே குமார். ஹாலிவுட்டில் திரை நுணுக்கங்கள் கற்றவராம், அது அவருடைய படைப்பில் அழுத்தமாகவே தெரிகிறது. கலை, படத்தொகுப்பு, காட்சியமைப்பு, ஒளிப்பதிவு, இசை என அனைத்துமே படத்தின் பரபரப்புக்காய் கூடவே ஓடியிருப்பது ஒரு பிளஸ்.



### ஆதலால் காதல் செய்வீர்

ராஜபாட்டை எனும் சூப்பர் மொக்கைக்குப் பிறகு சுசீந்திரன் சுதாரித்துக் கொண்டு எடுத்த படம் "ஆதலால் காதல் செய்வீர்". காதல் எனும் பெயரில் அவசரப் பட்டு தப்பு செய்து விட்டு நிதானமாய் வருத்தப்படும் சூழல் தான் கதை. சேர்ந்து வாழ்தலொன்றும் தப்பில்லை என்று நீதிமன்றம் கூட வக்காலத்து வாங்கும் சூழலில் காதலின் பின் விளைவுகளை அழுத்தமாகவும் கண்ணீரோடும் சொல்லும் படம் இது.

கட்சிதமான பாத்திரத் தேர்வு, அற்புதமான உணர்ச்சிப் பிரவாகம், நீட்டி முழக்காத காட்சியமைப்புகள் என ஒரு சிறந்த இயக்குனருக்குரிய அத்தனை அம்சங்களையும் அழகாய் வெளிக்கொணர்ந்த படம்.

இந்த ஆண்டு வந்த சிறந்த படங்களின் பட்டியலில் இதற்கு ஒரு தனி இடம் உண்டு.



19 வருட சேவையில் தங்கமாய் ஜொலிக்கும் நம்பிக்கை ஸ்தாபனம்

**LITTLE INDIA**

*Textile & Jewellery*

அழகான ஆடைகளுக்கும் பஞ்சாபி வகைகளுக்கும் தங்க நகைகளுக்கும் பெயர் பெற்ற ஸ்தாபனம்

LITTLE INDIA

02131 273692



Little India வின் மற்றுமொரு சேவை

# EurAsian - Tours

அனைத்து விமானச் சீட்டுக்களையும், குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள். India Visa பெறவும் உதவி செய்வோம். அத்துடன் தங்குமிட வசதி, Tour Bus ஒழுங்குகள் செய்து தரப்படும். முன் கூட்டியே எம்முடன் தொடர்பு கொண்டு ஆசனங்களைப் பதிவு செய்யலாம்.

Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84

Rishi 0174 96 44 965

info@eurasian-tours.com
Rishi Ganeshamoorthy



Eurasian Tours
Adolf - flecken -Str.11
41460 Neuss



# ASIA BAZAR

Ria Money Transfer

MoneyGram International Money Transfer

உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்ப வேண்டுமா! இதோ!!!
துரித பண மாற்றுச் சேவை!

ஆசிய, ஆபிரிக்க உணவுவகைகள்
வியாழன்சனிக்கிழமை தோறும் இலங்கை, இந்திய உடன் மரக்கறிவகைகள்
கடல் உணவுப் பொருட்கள். இன்னும் பல...

உரிமையாளர்: பா.கணேஷ்

An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282

யேர்மனியில் டோட்மூட் நகரில் சுவையான உணவிற்கு

தரமும் சுவையும் தரும்...



Tel:0231- 7252859

# CEYLON IMBISS
இலங்கை உணவகம்

இலங்கை,இந்திய, உணவுகள், தரம் குன்றாத சுவையுடன் கிடைக்கும்!

திங்கள் முதல் சனிவரை
காலை 11.30 முதல்
மாலை 22.00 மணிவரை
ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில்
16.00 -22.00 மணி வரை

Annen Str.1
44137 Dortmund

Jasmin Silk House
Fester Str.50
40882 Ratingen



T.Mohanadas

# Jasmine Silk House

என்றும் புதியன, அழகுக்கு அழகுசேர்க்கும் அற்புதமான டிசைன்களில் அழகிய சேலைகள். மங்கையர் மனம் நாடும் பஞ்சாபிகள் மற்றும் குழந்தைகளுக்கான ஆடைகள்அனைத்தும் நிறைவான தெரிவுக்கு நம்மை நாடுங்கள்

01.012.2013 முதல் 14.01.2014 வரை எமது ஸ்தாபனம் திருத்தவேலைக்காக மூடப்பட்டிருக்கும்

ஜஸ்மின் சில்க் ஹவுஸ்



Tel:02102 844744

# StaR - Impex

Groß- & Einzelhandel
Asiatische & Afrikanische Lebensmittel
Tel : 0231 - 8602696 Fax : 0231 - 8602698



எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்

Kipper str.Tor.3
44147 Dortmund
Germany

கடல் உணவு வகைகள் மற்றும் பசுமையான மரக்கறிகள் வாரவாரம் உடனுக்குடன் இறக்குமதி செய்கின்றோம்!



StaR Impex : Inh :K.Sivasubramaniam

Mobil: 0172/2183703 -Tel:0231 860 26 96 E-Mail: star-impex@live.de - Web.Star-impex.net Fax: 0231/8602698